ஸ்ரீவைகுண்ட ஏகாதசி மலர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# திருவேங்கடவர் மாலை.

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 30.

சங்கக் காரியாலயம் :
15, கணபதி முதலி தெரு,
திருவல்லிக்கேணி.

–1950.

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

| இலக்கம். | வெளியீட்டின் பெயர். | வள்ளலார் பெயர். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம். | ஸ்ரீமான் வி. யன். சிங்காரவேலு முதலியார் அவர்கள். |
| † 2. | தேசிகர் நூற்றந்தாதி. | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 3. | மறைமுடித் தேசிகனுர். | ஸ்ரீமான் சுந்தரசேகர நாயக்கர் அவர்கள். |
| 4. | மணவாள மாமுனிகள். | ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் அவர்கள். |
| 5. | அழகர் மாலை. | நற்றமிழன்பர்கள். |
| 6. | வேதாந்த தேசிக ரூசல். | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 7. | தோத்திர மாலை. | ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள். |
| † 8. | தொண்டர் மாலை. | ஸ்ரீபண்டித சிந்தாமணி கோபாலய்யங்கார் அவர்கள். |
| 9. | கம்பர் மாலை. | ராவ்ஸாஹெப். ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 10. | பரிமுக மாலை. | ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவாசாரியார் அவர்கள். |
| 11. | ஸ்ரீ ஆண்டாள் மாலை. | ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள். |
| 12. | ஸ்ரீ பார்த்தசாரதி மாலை. | ராவ்பஹதூர் கே. ஆர். ராமாநுஜம் அவர்கள். |
| † 13. | திருவருண் மாலை. | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| † 14. | தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு. | ப. ரெ. திருமலை அய்யங்கார். |
| † 15. | அடைவு அமைக்கும் அற்புதன். | ப. ரெ. திருமலை அய்யங்கார். |
| † 16. | தமிழர் தொழு வேதாந்த வாசிரியன். | ஸ்ரீமான் டி. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள். |

ஸ்ரீ :

ஸ்ரீமதேராமாநுஜாய நம:



# திருவேங்கடவர் மாலை.

## திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு,30.

இது
ஸர்வமங்கள விக்ருதியாண்டு
மார்கழித் திங்கள் ஐந்தாம் நன்னாள்
ஸ்ரீகிதோபநிடத அவதாரதினமாகிய
ஸ்ரீவைகுண்ட ஏகாதசியன்று திருவல்லிக்கேணி
திருவஹோபிலமடத் திருநரசிங்கன் திருவடிவாரத்தில்
இடப்பெற்ற காணிக்கை.

20—12—1950

முதற் பதிப்பு—டிசம்பர் 1950

Kabeer Printing Works, Madras-5

ஸ்ரீ:

# உள்ளுறை.

பக்கம்.

முகவுரை. ... 5.

[பந்தல்குடி பாரத்வாஜமாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

திருவேங்கடவநுபூதி. ... 54.

[முகவை இயற்றமிழாசிரியராகிய இராமாநுஜ கவிராயரவர்கள் பாடியது.]

அரும்பதவுரை. ... 75.

ஸ்ரீ :

# முகவுரை.

உளன்கண்டாய் நன்னெஞ்சே ! உத்தம னென்றும்
உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத்து —உளன்கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தி னுள்ளானென் றோர்.

—(பொய்கையார். முதல்திருவந்தாதி. 99)

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருக ணிளமூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை.

—(பூதத்தார். இரண்டாந்திருவந்தாதி. 75)

உளன்கண்டாய் நல்நெஞ்சே ! உத்தம னென்றும்
உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத்து—உளன்கண்டாய்
விண்ணெடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான்
மண்ணெடுங்கத் தானளந்த மன்.

—(பேயாழ்வார். மூன்றுந்திருவந்தாதி. 40)

வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி
நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன்—கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனர்
கால்வலையில் பட்டிருந்தேன் காண்.

—(திருமழிசையாழ்வார்.
நான்முகன் திருவந்தாதி. 40)

கண்ணுவான் என்றும்
மண்ணோர் விண்ணோர்க்கு
தண்ணார் வேங்கட
விண்ணோர் வெற்பனே.

—(நம்மாழ்வார். திருவாய்மொழி. 1-8-3)

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே !
நெடியானே ! வேங்கடவா ! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன்பவளவாய்க் காண்பேனே.

—( குலசேகராழ்வார். பெருமாள் திருமொழி. 4-9)

சென்னி யோங்கு தண் திருவேங்கட முடையாய் ! உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ ! தாமோதரா ! சதிரா !
என்னையும் என்னுடை மையையும் உன்சக்கரப் பொறி யொற்றிக்கொண்டு
நின்னருளே புரிந்தி ருந்தேன் இனியென் திருக்கு றிப்பே.?

—(பெரியாழ்வார். திருமொழி 5-4-1)

காட்டில் வேங்கடம் கண்ணபுர நகர்
வாட்ட மின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்டரா வந்து என் கைப்பற்றி தன்னொடும்
கூட்டு மாகில்நீ கூடிடு கூடலே !

—(ஆண்டாள். தையொருதிங்கட்பாமாலை. 4-2)

மந்தி பாய் வடவேங்கட மாமலை வான வர்கள்
சந்தி செய்ய நின்றான் அரங்கத் தரவி னணையான்
அந்தி போல்நிறத் தாடையும் அதன்மே லயனைப்படைத்த தோரேழில்
உந்தி மேல தன்றோ அடியே னுள்ளத் தின்னுயிரே.

—(திருப்பாணாழ்வார். அமலனாதிபிரான். 3)

சொல்லாய் பைங்கிளியே !
சுடராழி வலனுயர்த்த
மல்லார்தோள் வடவேங்கடவனைவர
சொல்லாய் பைங்கிளியே !

—(திருமங்கையாழ்வார். பெரிய திருமொழி. 10-10-5)

பொன்னு மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னு மணிமுடியாம் வேங்கடமே —மன்னும்
பரமபத நாட்டினுன் பையரவின் சூட்டிற்
சிரமபத நாட்டினுன் சேர்வு.

—(திவ்யகவிபிள்ளைப் பெருமாளையங்கார்.
திருவேங்கடமாலை. 1)

திருவேங்கடத்து நிலைபெற்று நின்றன சிற்றன்னையாற்
றருவேங்கடத்துத் தரைமேனடந்தன தாழ்பிறப்பி
னுருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன வுற்றழைக்க
வருவேங் கடத்தும்பி யஞ்சலென் ருேடினமால் கழலே.

—(திவ்யகவிபிள்ளைப்பெருமாளையங்கார்.
திருவேங்கடத்தந்தாதி. 1)

தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந் தன்மையான்—றேனேய்
திருவேங் கடந்தொழுதேந் தீயவிபூ திக்கண்
மருவேங் கடந்தனெமிவ் வாழ்வு.

—(அழகியமணவாளதாசர்.
நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி. 96)

கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்புக்
கடுவினைய ரிருவினையுங் கடியும் வெற்புத்
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்புத்
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்புப்
புண்ணியத்தின் புகலிதென்னப் புகழும் வெற்புப்
பொன்னுலகிற் போகமெலாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும் வேத வெற்பே.

—(தூப்புற்பிள்ளை. தேசிகமாலை. அதிகாரசங்கிரகம். 43)

வேங்கடவா சத்திருமான் மேற்பத்தி யுள்ளசனர்
தாங்கடவா நிற்பர்பவ சாகரத்தைத்—தீங்கடவா
சித்தமே கண்ணன்பாற் சிந்துமதித் தோனவனே
நித்தமே கண்ணன்பா னீ.

—(முத்தமிழ்க்கவி வீரராகவமுதலியார்.
திருவேங்கடக் கலம்பகம். 2)

வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்.

—(இளங்கோவடிகள். சிலப்பதிகாரம்.2.
மதுரைக் காண்டம். காடுகாண் காதை.)

தந்த தான தத்த தந்த
தந்த தான தத்த தந்த
தந்த தான தத்த தந்த—தனதான.

தந்தை தாய்நன் மக்கள் பெண்டிர்
பந்த மான சுற்ற மென்று
சந்தை வாழ்வெ னச்சி றந்த தமரானோர்

சண்ட னுரு ருத்தெ முந்த
டுங்க டாந டத்தி மண்டு
தண்ட டாவெ டுத்த டர்ந்து சமராடி

வந்த டாபி டிப்ப னென்று
கொண்ட போதெ திர்த்து நின்று
மண்டு போர்வி லக்க வங்கு வருவாரோ

வம்பி லேபி றர்க்கி ரங்கி
நம்பி யேயு ழைத்து நொந்த
வஞ்ச னேனி டுக்க ணென்று களைவாயே

உந்து போரி டத்து ணிந்த
முண்ட நீறன் மக்க ளங்கி
யொண்டி யோடி டத்து ரந்து சுடராழி

யொன்றில் வாண னைக்க ரங்க
ணின்ற வாயி ரத்தில் ரண்டொ
ழிந்து வேர றுத்து கந்த நெடுமாலே

விந்தை மூவ ருக்கு ணின்ற
றிந்தி டாதொ ளித்த மந்த்ரம்
விண்டொ ரானை செப்ப வந்து வெளியானோய்

வெம்ப ணுமு டிக்கி லங்க
னந்த சேட னிற்பொ லிந்த
வெங்க டாச லத்தி னின்ற பெருமாளே.

—(குரவை இராமாநுஜதாசர். நூற்றெட்டுத்
திருப்பதித் திருப்புகழ். 96.)

### சீர்வளர் பசுந்தோகை என்ற சந்தம்.

திருவளர்த டஞ்சோலை மலையான் எங்கள்
திருமங்கை வருகங்கை யெதிர்பொங்கு மலையான்
தருவிடை வதிந்தோரை மலையான் பங்க
சாதர்பணி நாதனிரு பாதநினை வாமே

அந்தணரு வந்தோது மறையான் மதி
யன்பரரவிந்தமலர் நெஞ்சினிடை மறையான்
அந்தகர்த மக்கேது மறையான் மழை
யாழிமுகில் வாழியென நாளுநினை வாமே

ஒருசிந்து வருமன்பர் கவியான் அலை
யுயர்சிந்து குதிகொண்டு விசைமுந்து கவியான்
தெருள்சிந்து பவர்நெஞ்சு கவியான் இரு
சேவடியை யாவலொடு மேவிநினை வாமே

பொங்கர்மலி நாகமலை முடியான் ஒளி
பொங்கிவள ருங்கிரண சண்டனிகர் முடியான்
மங்கைகுழல் கொண்டதல முடியான் சரண
மாமலரை நேமமொடு யாமுநினை வாமே.

—(அநுமந்தன்பட்டி மதுரகவி ஸ்ரீநிவாச ஐயங்கார்.
திருமலைச்சிந்து.)

அருணின்க ணென்று திடரைக்க டிந்த
சடரைச்சு மக்கு மவனிப்
பரமொன்றெ ழிக்கு நயமொன்றெ டுத்த
பருவத்தி னன்று மருவித்
திருவின்ப னிங்கு வரவன்பர் நன்கு
செறியப்பி றங்கு மறைமீ
திருணன்ற கற்று மொருதீப மென்ற
திருகீதை யேற்றி நிறைவாய்.

—(முகவை ஆர். கேசவய்யங்கார். தயாசதகம். 89)

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரன் அர்ச்சாவதாரங் கொண்டு எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்கள் நூற்றெட்டு. அவற்றிலே கோயில், திருமலை, பெருமாள் கோயில் என்ற மூன்றும் மிகப் பழைமையும் பெருமையும் பெற்றவை. இவை, சோழ, தொண்டை மண்டலங்களில் அமைந்து சந்தமிகு செந்தமிழ் நாட்டை அலங்கரித்து விளங்குவனவாகும். இச் சிறப்புப் பற்றியே, எம்பெருமானின் அபிநவ தசாவதாரமெனக் கொண்டாடப் பெற்றுவரும் ஆழ்வார்கள் பெரும்பாலராலும் ஸ்ரீ ஆண்டாளாலும் இவை பரமப் பிரேமையுடன் மங்களாசாசநஞ் செய்யப்பெற்றன. திருமாலால் மயர்வறமதி நலமருளப்பெற்ற அப்பெரியார்களால் மட்டுமன்றி 'சங்கமுகத் தமிழ்மாலை', 'சங்கத் தமிழ்மாலை' என்று அவர்களால் சிறப்பிக்கப் பெற்ற சங்கத்துச் சான்றோர்களாலும் விசேஷமாகப் புகழப்பெற்ற திருப்பதிகள் இவை.

"வெற்பென்று இருஞ்சோலை வேங்கடம்" என்று எம்பெருமான் உகந்தருளின மலைகள் இரண்டு. அவற்றுள் வடக்கில் உள்ளமலை, தெழிகுரலருவித் திருவேங்கடம், தெற்கில் உள்ளமலை திருமாலிருஞ்சோலைமலை. "தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையும், என்னும் இவையே முலையா வடிவமைந்த, அன்ன நடைய அணங்கே" என்றபடி சிறப்பும் உயர்வுமுள்ள வடக்குத் திருமலையாகிய திருவேங்கடமும், தெற்குத் திருமலையாகிய திருமாலிருஞ் சோலைமலையும், பூமிப் பிராட்டியாரின் இருதனங்களாக வருணிக்கப் பெறும். வேங்கடத்திலும் மாலிருஞ்சோலையிலும் உள்ள எம்பெருமான் நீர்மையைச் சொல்லப்புக்கு "ஆரியர்கள் இழந்த ம்லேச்ச பூமியிலுள்ளார்க்கு முகம் கொடுக்கும் நீர்மையிறே அங்கு. கானமும் வானரமும் வேடுவர்க்கும் முகம் கொடுக்கும் நீர்மையிறே இங்கு" என்று நம் பூருவாசாரியர்கள் அருளிச் செய்வார்கள். திருவேங்கடத்தில் பரத்வம் பொலியும். திருமாலிருஞ் சோலையில் வாத்ஸல்யம் உஜ்ஜ்வலம்.

பரஞ்சுடரின் எழில் பரந்துள்ள திருப்பதிகள் 'இருப்பிடம் வைகுந்தம், வேங்கடம், மாலிருஞ்சோலை' என இராமாநுச நூற்றந்தாதி நன்குணர்த்தும். இம்மூன்று திருப்பதிகளிலும் விளங்குமோர் பரஞ்சுடரே அழகனுவன். மண்ணவர் காணவொண்ணு

அழகன் வைகுந்தன் என்பான். விண்ணவரே காணக்கிடக்கும் அழகு வைகுந்தனதாம். மண்ணவர் ஏறி விண்ணவர் இறங்கி இருவரும் கலந்து காணப்பெறும் அழகன் வேங்கடக்கோன். அது மண்ணவரையும் விண்ணவரையும் ஒக்கச் செய்யும் அழகு. விண்ணவரும் மண்ணவரும் சந்திசெய்ய நிற்பவனே வேங்கட வெற்பன். ஆகலின் வைகுந்தனழகே வேங்கடவனுய் இரட்டித்தபடி. ''ஸஉச்ரேயாந் பவதி ஜாயமாந:'' என்று வேதமோதும் அழகே வேங்கடவன் அழகாம்.

''தேனேங்கு சோலேத் திருவேங் கடமென்றும்
வானேங்கு சோலே மலேயென்றும்—தானேங்கு
தென்னரங்க மென்றும் திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கு முண்டோ துயர்.''

''அதற்கப்பால் அஞ்ஜநாத்ரி என்னும் சேஷகிரி உன் கண்களேக் களிப்புறச் செய்தவாறு எதிரில் தோன்றப் போகின்றது; விஷ்ணுவை வீற்றிருக்கப் பெற்றதாலும் தரணியைத் தாங்குவதாலும், மணிகளடங்கிய முடிகளேப் பெற்றிருப்பதாலும் இது ஸாக்ஷாத் ஆதிசேஷனேயென்று உலகத்தோரால் உறுதியாக ஊஹிக்கப்படுகின்றது; அதைச் சார்ந்துள்ள மெல்லிய வெண்ணிற மேகங்கள் அச்சேஷனுடலிலிருந்து அப்பொழுதே கழன்ற பாம்புத் தோல் போலவும் பார்ப்பவர்க்குத் தோன்றும்.'' (21) ''அம்மாமலேயின் மீது மானிடர் ஏறிச் செல்கின்றனர்; விண்ணிலிருந்து வானவர் அங்கு இறங்கி வருகின்றனர்; அங்கு வந்து கூடியதும் தமக்குச் சாத்விக குணம் சாலவும் உதித்திடவே அவர்கள் தமக்குப் பரஸ்பரமிருந்த ஏற்றத் தாழ்வு முதலிய வேற்றுமையொழிந்தவராய், ஸகலருக்கும் ஸேவாபலன் ஸமானமெனக் கருதி, அவ்வனேவரும் ஒன்று சேர்ந்து திருமாலுக்குச் செய்யும் வந்தன வழிபாட்டை நீயும் இயன்றவளவு இஷ்டப்படி இனிது நிகழ்த்துவாயாக.'' (22) ''அவ்வஞ்ஜநாத்ரிக்குத் தென்புறமாகச் சிறிது தூரத்திலேயே ஸுவர்ணமுகரா என்னும் நதியைக் கண்ணுறுவாய்; அஃது நீ இறங்கி அதனிடையில் நீ வீற்றிருக்க வேண்டுமென விரும்புவதுபோல்,

ஒரு சிறிது தன்னில் மேற்கிளம்பிய மணற்குன்றுகளைப் பெற்றிருக்கும்; அன்றியும் இளம்பிறையைச் சிரத்திலேந்திய சிவபெருமான் ஸ்ரீநிவாஸனை அர்ச்சிக்கும் பொருட்டு, அது தன் அலைகளாகும் கைகளால் அருகிலுள்ள அடவி மலர்களையேந்தி வந்து உண்மையில் ஆதரவுடன் அவருக்கு அளிக்கவருவதுபோலத் தோற்றும்.''(23) [ஹம்ஸ ஸந்தேசம். முதல் ஆச்வாசம்.]

''தர்க்கன் :—இங்குச் சிறிது பார்ப்பீர். பராவரதத்வங்களின் யதார்த்தத்தை யறிந்த மஹாத்மாக்களால் பரமபதமென்று ப்ரத்யக்ஷீகரிக்கப்பட்டதும், அநேக தேச சஞ்சாரஞ் செய்து இளைப்படைந்த நமக்கு இளைப்பாறும் ஸ்தானமும், ஈசுரனால் நிர்மாணஞ் செய்யப்பட்டதும், வெகு தூரத்திலே தோன்றுகின்ற பொன்மயங்களான பெரிய சிகரங்களால் விளங்குகின்ற பத்துத் திசைகளையுடையதும், கலியுகபலத்தால் பரவுகின்ற சகல சங்கடங்களையும் நிவர்த்திக்கின்றதுமாகிய வேங்கடாத்திரி தோன்றுகின்றது. ஆதிபுருஷனது திருவடியிலுண்டாகிய ஆகாச கங்கையின் தோயப்ரவாஹத்தால் அற்புதமான அரணியங்களை யுடையதாயும், சாதுக்களுக்கு ஸ்தானமாயுமிருக்கின்ற இந்தப் பர்வதத்தில் பசு பக்ஷி முதலிய பிராணிகளும், பராவரதத்வங்களின் விவேகத்தால் தெளிந்த ஞானமுடையனவாய்ப் பரதத்வத்தை ப்ரத்யக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டு பரஸ்பரம் விரோதமின்றிச் சுகமாய்ச் சஞ்சரிக்கின்றன. இவ்விடத்திலொருவர் அநாதி பாபவாசனையென்னுஞ் சமுத்திரமுழுதையும் பருகுகின்ற பகவதி யாகிய பரமபுருஷனது க்ருபையென்பாளை நோக்கி 'இரங்கு மிருதயமுடையையும், ஜிதேந்திரியர்களுக்கு ஹிதஞ் செய் கின்றனையும், தேவர்களைத் தரிக்கின்றனையும் ஞானிகளிடத்தில் விளங்கிய மகிமையுடையையும், மதுரையும், க்ஷேமங்களுக்கு ஆதாரமாயினையும், எல்லாராலுங் கொண்டாடப்பட்டனையும் வேங்கடாசல ஸார்வபௌமனது தைதையுமாகிய ஓதயையே! சம்சாரத்தைப் போக்குகின்ற உனது ப்ரவாஹத்தை என்மீது வைக்க வேண்டு'மென்று துதிக்கின்றார். இன்னுமவரே 'வேங்கட பதியினது ஓக்ருபையே! வேடர்க்கரசனாகிய குகப்பெருமானும், சுக்கிரீப மகாராஜனும், சபரியம்மையும், குசேலரும், கூனியும்,

கோபிமார்களும், மாலாகாரனுமாகிய இவருடைய தாழ்வையும், விருஷகிரிபதியினுடைய உயர்வையும் உனது ப்ரவாஹத்தால் சமமாகச் செய்துவிட்டனை'யென்று ஆவர்த்தி செய்கின்றார்.

விவேகன்:—பகுமானத்தோடு பார்த்துச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான்.

தர்க்கன் :—(நான்கு புறங்களையுங் காண்பித்து) 'தேவா! ஸ்ரீரங்கம், விருஷபாசலம், கரிகிரி முதலியன உம்மால் பார்க்கப் பட்டன. இன்னும், பிரமனாலாராதிக்கப்பட்ட அநேக க்ஷேத்ரங்கள் திரமிட தேசத்திலிருக்கின்றன. இப்போது உண்டாயிருக்கின்ற கோரமான கலியுகத்தின் மயக்கத்தைத் தெளிவிக்கின்ற இந்த க்ஷேத்ரங்களுள் யாதானுமொன்றில் தர்மார்த்த காமங்களை விட்டுச் சமாதியைத் திடமாக அநுஷ்டிக்க.'' [சங்கற்ப சூரியோதயம். ஆறுவது அங்கம்.]

பரிபாடல் என்பது கடைச்சங்கமிருந்து நற்றமிழ் நன்கு ஆராய்ந்த நல்லிசைப் புலவர்கள் அருளிச் செய்த எட்டுத் தொகையுள் ஐந்தாவது.

'' நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை.''

என்ற வெண்பாவால் எட்டுத் தொகை இன்னவை என்பதை உணர்க. அவ்வெண்கோவை நன்னூல் சொற்சுவை பொருட் சுவைகளிற் சிறந்து பொருள்களின் இயற்கையழகுகளை நன்கு அறிவிப்பது; மதுரை, வையையாறு, திருமாலிருஞ்சோலைமலை யென்பவற்றின் பண்டைக் காலநிலைமைகளையும் அக்கால நாகரிக முறையையும் வைதிக ஒழுக்கங்களையும் தெய்வ வழிபாட்டு முறை யையும் பிறவழக்கங்களையும் செந்தமிழ் நாட்டின் வரலாறுகள் சிலவற்றையும் தெளிந்து கொள்ளுதற்குக் கருவியாகவுள்ளது. முற்குறித்த வெண்பாவில் 'ஓங்கு பரிபாடல்' எனப் பாராட்டப்

பெற்றிருத்தலால் இந்நூலின் உயர்வு கூறுமலே நன்கு விளங்கும்.

'' திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று—மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்.''

'' புலவரையறியா '' எனத் தொடங்கும் பதினைந்தாம் பாடல் திருமாலிருஞ்சோலைமலை ஆலயத்திலுள்ள பழைய சிலாசாஸனங் களுள் ஒன்றிற் காணப் பெறுகின்றது. அப்பாடலின் முதற் பத்தடிகள் பின் வருமாறு :—

'' புலவரை யறியாப் புகழொடு பொலிந்து
நிலவரை தாங்கிய நிலைமையிற் பெயராத்
தொலையா நேமிமுத றெல்லிசை யமையும்
புலவராய் புரைத்த புனைநெடுங் குன்றம்
பலவெனி னுங்கவை பலவே பலவினும்
நிலவரை யாற்றி நிறைபய னொருங்குடன்
நின்றுபெற நிகழுங் குன்றவை சிலவே
சிலவினுஞ் சிறந்தன தெய்வம் பெட்புறும்
மலரகன் மார்பின் மைபடி குடுமிய
குலவரை சிலவே குலவரை சிலவினும் சிறந்தது.''

[அறிவெல்லையால் அறியப்படாத புகழுடனே பொலிந்து நிலவெல்லையைத் தாங்கிய நிலைமை நீங்கிக் கெடாத சக்கரவாளம் முதலாகத் தொல்லிசைப் புலவர்கள் ஆராய்ந்துரைத்த கொண் டாடப்படும் நெடிய குன்றங்களைச் சிறப்புவகையாற் கூறாது பொதுவகையால் உரைக்கப் புகுந்தாற்பலவாம். அப்பல வற்றுள்ளும் நிலத்திலுள்ளோரது பசித் துன்பத்தை நீக்கி நிறை பயன்கள் எல்லாவற்றையும் எப்பொழுதும் அவர் பெறப் பயன்படு குன்றுகள் சில ; அச்சிலவற்றுள்ளும் தெய்வங்கள் தாமாக விரும்பும் மலர்களையுடைய தடாகங்களும் மேகங்கள் படியும் சிகரங்களும் உடைய குலவரைகள் சில சிறந்தன; அக்குலவரைகள் சிலவற்றினும் சிறந்தது (திருமால் குன்றம்.)]

இப் பொய்யில் பாடலடிகள் அங்ஙனே திருவேங்கடத்துக்கும் பொருந்துவன.

அருளின் வடிவவளே திருமாமகள். அவள் தனிக்கேள்வனே ஸ்ரீநிவாஸன். திருக்கலந்த மார்பனே அருள்கலந்த ஆளரி. அவனே பரன். அவனே காரணனுகும் நாரணனென்பான். அவன் நின்றுவிளங்கும் மலையும் நாரணமலையாம். வேங்கடமலை, வேதமலை, சேடமலை, அஞ்சனமலை, திருமலை, சிங்கமலை, ஏழுமலை, வடமலை, விடபமலை, நெடியோன்மலை, அண்ணல்மலை முதலிய பலதிருநாமங்கள் அந்நாரண மலைக்குள்ளன. திருவரியே மலையப்பன். "விஷ்ணு: பர்வதாநா மதிபதி:, கிரிஷ்டா: யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷு" என்று மறைதானே அறையா நின்றது. மலையென்ற சொல் திருவேங்கடத்தையும், மலையப்பன் என்ற சொல் திருவேங்கடமுடையானையும் உணர்த்தா நின்றன.

கல்வியிற் பெரிய கம்பநாட்டாழ்வான் தாம் இயற்றிய இராமாவதாரத்தில் இருங்குன்றமான இத் திருவேங்கடத்தைப் பற்றி இயம்பியுள்ளதை இனிக் காண்பாம்.

சுக்கிரீவன் தென்திசையிற் செல்லும் வாநரர்களை நோக்கிச் சீதையைத் தேடவேண்டிய இடங்களைக் குறிப்பிடுகையில்,

வடசொற்குந் தென்சொற்கும் வரம்பிற்ருய்
நான்மறையு மற்றை நூலு
மிடைசொற்ற பொருட்கெல்லா மெல்லையதாய்
நல்லறத்துக் கீருய் வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த
மெய்யேபோற் பூத்து நின்ற
வடைசுற்றுந் தண்சார லோங்கிய
வேங்கடத்திற் சென்றடைதிர் மாதோ. (26)

இருவினையு மிடைவிடா வெவ்வினையு
மியற்ருதே யிமையோ ரேத்துந்
திருவினையு மிடுபதஞ்சேர் சிறுமையையு
முறையொப்பத் தெளிந்து நோக்கிக்

கருவினைய திப்பிறவிக் கென்றுணர்ந்தங்
கதுகளையுங் கடையின் ஞானத்
தருவினையின் பெரும்பகைஞ ராண்டுளரீண்
டிருந்துமடி வணங்கற் பாலார். (27)

சூதகற்றுந் திருமறையோர் துறையாடு
நிறையாறுஞ் சுருதித் தொன்னூன்
மாதவத்தோ ருறைவிடனு மழையுறங்கு
மணித்தடனும் வான மாதர்
கீதமொத்த கின்னரங்க ளின்னரம்பு
வருடுதொறுங் கிளக்கு மோதை
போதகத்தின் மழக்கன்றும் புலிப்பறழு
முறங்கிடனும் பொருந்திற் றம்மா. (28)

கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே
லுந்நெடிய கொடுமை நீங்கி
வீடுறுதி ராதலினுன் விலங்குதிர் * * * (29)

—(இராமாவதாரம். கிஷ்கிந்தாகாண்டம்.
நாடவிட்ட படலம்.)

[வடதிசைக்கண் வழங்கும் மொழியாகிய ஸமஸ்க்ருதத்திற்கும் தென்திசையில் வழங்கும் மொழியாகிய இனியதமிழுக்கும் எல்லையாகியும், நான்கு வேதங்களும் சீட்சை முதலிய ஆறு வேதாங்கங்கள், இராமாயணம் முதலிய இதிகாசங்கள், பிராம்மம் முதலிய பதினெட்டுப் புராணங்கள், மநுமுதலிய ஸ்ம்ருதிகள் என்ற மற்றைச் சாஸ்திரங்களும் தம்மிடத்தில் கூறியுள்ள எல்லாப் பொருள்கட்கும் முடிவான பொருளையுடையதாகியும், சிறந்த தருமங்கட்கெல்லாம் வரம்பாகியும், பக்கத்தில் எடுத்துச் சொல்லத் தக்க உபமானப்பொருள் வேறொன்றுமில்லாமல் கீர்த்திநிரம்பிய சரீரத்தைப்போல் விளங்குகின்ற தேன்கூடுகளாற் சுற்றிலும் நிரம்பப் பெற்ற குளிர்ச்சியான தாழ்வரைகளையுடைய மிகவும் உயர்ந்துள்ள திருவேங்கடமலையில் போய்ச்சேருங்கள். நல்வினை தீவினைகளாகிய இருவகை வினைகளும் இடைவிடாமற் சம்பந்தப்

பட்டுள்ள எந்தக் கருமங்களையும் செய்யாமல் தேவர்களும் புகழும் படியான பெருஞ் செல்வ வாழ்க்கையையும், பிறர் பிச்சையாக இடுஞ்சோற்றை எதிர்பார்த்திருக்கின்ற தரித்திர வாழ்க்கையையும் ஒன்றற்கொன்று சமமுடையதாகத் தெளிந்த அறிவுகொண்டு பார்த்து ‘ இந்தப் பிறப்பு உண்டாவதற்கு மூலகாரணம் இருவினை களேயாகும் ’ என்று அறிந்து, அவ்வினையின் தொடர்பை நீக்கு தற்கு உரிய எல்லையில்லாத தத்துவஞானத்தையுடைய போக்கு தற்கு அரிய இருவினைகட்கும் பெருஞ் சத்துருக்களாகிய பெரியோர் அம்மலையில் இருக்கின்றார்கள். அவர்கள் நேரிற் சென்றன்றி நாம் இங்கிருந்தவாறேயும் திக்குநோக்கித் தண்டஞ் சமர்ப்பித்தற்கு உரியவராவர். வஞ்சனையை யொழிந்த சிறந்த பிராமணர்கள் இறங்கி மூழ்குகின்ற துறைகள் நிரம்பவுள்ள நதிகளையும், வேதங் களையும் பழமையான சாஸ்திரங்களையும் அறிந்த பெருந்தவத்தை யுடைய முனிவர்கள் வசிக்கின்ற ஆச்சிரமங்களையும், மேகங்கள் தங்குகின்ற இரத்தினங்களையுடைய தாழ்வரைகளையும், தேவதா ஸ்திரீகள் இசைப்பாட்டுக்கு இணங்கின கின்னரம் என்னும் இசைக் கருவிகளினுடைய இனிய நரம்புகளைத் தடவும்பொழு தெல்லாம் உண்டாகின்ற ஓசையினால் யானைகளின் இளங்கன்று களும் புலிக்குட்டிகளும் தம்முள் விரோதமற்றுத் தூங்குகின்ற இடங்களையும் பொருந்தியுள்ளது அத் திருவேங்கடமாமலை. சிகரங்கள் பொருந்திய பெரிய அம்மாமலையை நெருங்கினீர்களா னால் அத் திருப்பதியின் மகிமையால் உங்களுடைய கொடும்பாவங் களெல்லாம் கழிய உடனே மோக்ஷம் அடைவீர்கள்.]

என்று இருமொழிகளும் மிகுதியாக வழங்கும் நிலங்களுக்கு இடையேநின்று எல்லை குறிப்பதும், கடவுளர் யாவரிலுஞ் சிறந்த முழுமுதற் கடவுளான திருமாலைத் தன்னிடத்திற் கொண்டுள்ள தும், தருமங்களெல்லாம் குறைவின்றி நிறைந்துள்ளதும், அதற் குச் சமானமாக உடன் எடுத்துச் சொல்லத்தக்க மலைவேறொன்று மில்லாததும், தான் அழியாது நின்று உலகிலுள்ள பலராலும் துதி செய்யப்பெற்றுவிளங்குவதும், பயன்கருதி ஒருவினையுஞ் செய்யாமல் செல்வத்தினிடத்தும் சமபுத்தியுடையவர்களாய், பிறப் புக்குக் காரணமான இருவினைகளையுங் கருத்துக்கொண்டு, தத்துவ

ஞானம் வாய்ந்து, திக்குநோக்கியும் தண்டஞ்சமர்ப்பித்தற்கு உரிய ராயுள்ள பெரியோர்கள் வாழ்கின்ற திருப்பதியும், ஆகாசகங்கை, பாபவிநாசம் முதலிய ஆறுகளையுடையதும், தேவமாதர்கள் வந்து கின்னர வாத்தியங்களைக்கொண்டு வாசிக்கின்ற இன்னிசையைக் கேட்டு ஒன்றேடொன்று பகைக்குந்தன்மையுள்ள யானைக்கன்று களும் புலிக்குட்டிகளும் தம்முட் பகைமை நீங்கி ஒரிடத்திலேயே வந்து உறங்கும் சாந்தகுணம் உண்டாக்குந் தன்மையையுடைய தும், பிரவேசித்தமாத்திரத்தில் இருவினைத் தொல்லையும் ஒழிந்து முத்திதரவல்லதும் ஆகிய திருமால்குன்றமாகிய திருமலைஎன்றும் பெறவைத்தல்கண்டு இன்புறற்குரியது.

ஆறு செல் படலத்தில் சீதையைத் தேடிச் சென்ற வாநரவீரர் மரகத மலையைக் கடந்து திருவேங்கடமலையைச் சரர்தலை

...............மரகதப் பெருங்குன்றெய்தி
யிருந்ததிற்றீர்ந்து சென்ருர் வேங்கடத்திறுத்தவெல்லை (33)

[பெரிய மரகதமலையை யடைந்திருந்து அங்கும் பிராட்டியைக் காணுமையால் அதனின்று நீங்கி தமிழ் நாட்டினது வரையறுக்கப் பெற்றுள்ள வடவெல்லையாகிய திருவேங்கட மலையினிடத்துச் சென்று சேர்ந்தார்கள்.] எனக் கூறி மேல் மூன்று கவிகளால் அத் திருவேங்கடமலையை வருணிக்கின்ருர் அபி நவ கவிநாதன். அப் பாக்கள் ஈண்டு தருவல்.

முனிவரு மறைவ லோரு முந்தைநாட் சிந்தை மூண்ட
வினைவரு நெறியை மாற்று மெய்யுணர் வோரும் விண்ணே
ரெனைவரு மமரர் மாதர் யாவருஞ் சித்த ரென்போ
ரனைவரு மருவி நன்னீர் நாளும்வந் தாடு கின்ருர். (34)

பெய்த வைம்பொறி யும்பெருங் காமமும்
வைத வெஞ்சொலு மங்கையர் வாட்கணி
னெய்த வஞ்சக வாளியும் வென்றுநற்
செய்த வம்பல செய்குநர் தேவரால். (35)

வலங்கொ ணேமி மழைநிற வானவ
னலங்கு தாளிணை தாங்கிய வம்மலை
விலங்கும் வீடுறு கின்றன மெய்ந்நெறிப்
புலன்கொள் வார்கட் கனையது பொய்க்குமோ. (36)

[ருஷிகளும், வேதம் அறிந்த அந்தணர்களும், முற்பிறப்பிலே மனப்பூர்வமாகச் செய்த தீவினைகளினால் உண்டாகின்ற நரக நெறியை யொழிக்கவல்ல தத்துவ ஞானிகளும், தேவர்களெல்லோரும், தெய்வ மகளிரெல்லோரும் எல்லாச் சித்தர்களும் அத்திரு வேங்கட மலையிலுள்ள அருவி பெருகுகின்ற புண்யதீர்த்தங்களில் எப்போதும் வந்து நீராடுகின்றார்கள். கோனேரி, ஆகாச கங்கை, பாபவிநாசம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரை, தும்புரு தீர்த்தம், ஆழ்வார் தீர்த்தம் முதலியன அங்கு உள்ள புண்ணிய தீர்த்தங்கள். முனிவர் - மநநசீலர். ஸித்தர் - தேவ சாதியாரில் ஒரு வகையர். அம்மலையின் மீது தேவர்கள் தமது உடம்பிற் பொருந்திய பஞ்சேந்திரியங்களையும், பெரிய காமத்தையும், பிறர் தம்மைத் திட்டிய கொடிய சொற்களையும், இளமகளிர் தமது வாள்போன்ற கண்களினாற் செலுத்திய வஞ்சகத் தன்மையுள்ள பார்வையாகிற அம்புகளையும் அலட்சியமாகச் சயித்து செய்தற்கு உரிய நல்ல தவங்கள் பலவற்றைச் செய்கின்றார்கள். தேவர்கள் அக்கிரிமீது வந்து, ஐம்பொறிகளையுமடக்கி காம வேதனையில்லாமல், பிறர் தம்மைத் திட்டினாலும் அதனையும் பொறுத்து, மகளிரை மனத்தினாலுங்கருதாது, பல தவங்களைச் செய்கின்றார்கள் என்பதாம். தேவர் - பூமிதேவராகிய அந்தணர் எனினுமாம். வெற்றியைக் கொண்ட சக்கராயுதத்தைத் தரித்த கார்மேகம் போன்ற கரு நிறத்தையுடைய கடவுளாகிய ஸ்ரீநிவாசனது விளங்குகின்ற இரண்டு திருவடிகளை ஏந்தப்பெற்ற அத்திருவேங்கடமலையில் வாழ்கின்ற திர்யக்குக்களும் மோட்சத்தை யடைகின்றன என்றால், உண்மையான மரர்க்கத்தில் நடக்கின்ற தத்துவ ஞானம் உடைய வர்களுக்கு அந்த மோட்சமானது கிடைக்காமல் தவறுமோ? தவறாமற்கிடைக்கும் என்றபடி. ஸ்ரீநிவாஸன் தன்னிடத்தில் எழுந்தருளி யிருக்கும் பெருஞ்சிறப்பு வாய்ந்த அத்திருவேங்கட மாமலையில் வாழ்கின்ற திர்யக்குக்களும் வீட்டுலகத்தை அடையும்

என்ருல், சன்மார்க்கத்தில் நடக்கின்ற தத்துவ ஞானம் உடையோர்கட்கு அவ்வீட்டுலகம் கிடைப்பது தவறுமோ என்பதாம். அலர்மேல் மங்கையுறை மார்பன் 'மலே குனிய நின்ற பெருமாள்' என்று திருநாமம் அடையுமாறு தனது தாளிணேகளே அம்மலேயிற் பதியவைத்துள்ளதனுல் 'மழைநிறவானவனலங்கு தாளிணே தாங்கிய வம்மலே' என்ருர். புலன் - தேர்ந்த அறிவு: தத்துவ ஞானம்.]

''திருவேங்கட வுலா'' எனும் அழகியதோர் பிரபந்தத்தில் ''தலவிசேடம்'' என்ற பகுதி வருமாறு :—

பூமாலே பொன்மாலே பொற்பொன் பதுமணியின்
மாமாலே பச்சை வனமாலே—பாமாலே
சூடுமபி ராமன் சுருதியிலே நின்றுவிளே
யாடுமபி ராம னகிலேச—னீடுபசிக்
குண்பவள வாய வுலகைக் கவளமிட்ட
வண்பவள வாயன் வளவாய—னெண்பதின்ம
ரண்டமா லேத்திரளே யண்டத் தொடுத்தணிந்த
கண்டமா லேத்திரளேக் கண்டமால்—குண்டிகையிற்
சந்தியா னித்துச் சலநிதியா னித்துலகை
யுந்தியா னேப்படைக்கு முந்தியா—னந்தியான்
கோல வுமையுடனே கூடி யமுதருந்தப்
பால னனுகாப் படிகண்டு—வேலவா
தாருகனேக் கொன்றவினேத் தாகம்போந் தாரகத்தை
நாரணநா மத்தைநினே நாமத்தை—யோருருவே
சொன்னு லனந்தகற்பந் தூய்நீ ரளேந்ததொக்கு
மென்னு வவனவணெங் கேயென்ன—முன்னுளில்
வாசுகியை வீசையிலே வாதரா சன்சருவ
வீசு மகமேரு வின்பிள்ளே—காசிநகர்
கங்கைக் கொருதெற்கே காவதமுந் நூற்றிலே
சிங்க மலேயாய்த் திருமலேயா—யங்கரங்க
நாரா யணமலேயாய் நாகமலே யாய்ஞான
வாராக பூமி மகாமலேயா—யாராய்

தருமமலை யாயஞ் சனமலையாய்ச் செம்பொற்
கருடமலை யாய்வேங் கடமலையா—யருளிடப
மாமலையாய் நின்ற வடமலைக்கே யானுரைத்த
நாம நிதியை நவின்றேத்திச்—சேமமெனச்
சங்கனுப னீசானன் சத்திகா பாலிசுகன்
சுங்கன் பிருகு துருவாச—னங்கிரா
மார்க்கண்டன் மாண்டவியன் வாமதே வன்புலகன்
கார்க்கியன் சூதன் கலைக்கோட்ட—னூற்குசிகன்
கோசிகன் வான்மீகன் கும்போ தயன்கணுவன்
காசிபன் றக்கன் கவுதமன்—பாசதா
னந்தன் பரத்துவச னாரதன் புண்டரிகன்
சந்தன் மரீசி சவுனக—னந்தச்
சனக சனந்த சனற்கும ரப்பே
ரனக ரனேக ரனேகர்—தினமவர்கள்
வாயுப் பொசித்திருக்க மற்றோ ரடைபொசித்துத்
தூயதவஞ் செய்யத் தொடங்கினார்—நீயும்போ
வென்னப் பிதாவை யிறைஞ்சி யிளவேலோன்
வன்னக் கலாப மயிலேறித்—தென்னிலத்துப்
பக்கமதிற் பொன்முகரி பாய்வேங் கடநண்ணிச்
சக்கர தீர்த்தந் தனிலாடி—மிக்கநெடு
மாற்காலை நாற்கால் வணங்கிமணி வச்சிரத்தி
னீர்க்கா லருஞ்சுனையை நின்றேத்தி—வேற்கையாற்
சேனா பதித்தடத்தைச் சேவித் தெழுதவத்தோர்
தானாடு தீர்த்தந் தலைக்கொண்டு—வானாடு
பஞ்சா யுததீர்த்தம் பாவிமுத னாற்றீர்த்தஞ்
செஞ்சார் பிரமதடஞ் சென்றேத்திக்—கஞ்சமடுப்
பாண்டவதீர்த் தங்குடைந்து பாவநா சத்தளைந்து
தூண்டு மெலுப்புச் சுனைமூழ்கி—நீண்டிழியு
மாகாய தீர்த்த மளைந்து கொடிவழியின்
பாகாய தீர்த்தம் பரிசித்து—வாகாய
நாவலூற் றிற்பொருந்தி நல்விண் ணவதீர்த்த
மாவலாற் றாவி யளாவியே—பூவிருந்த

வாயவிய மச்ச வராகதீர்த் தங்களெனுந்
தோயமெலாங் காயமெலாந் தோய்ந்தேறி—யாயத்
தமரர்பாய் கோனேரி யாடிமறை பாடிக்
குமரதா ரைக்கே குறுகித்—தமரகத்தோன்
செப்புமெழுத் தெட்டுந் தியானித்து நின்றளவி
லிப்புனித னப்புனித ரெல்லோர்க்கு—மப்பொழுது
குண்டலங்க ளாயிரங்கள் கோடீர மாயிரங்க
ளண்டாண்ட மெய்யிலே யாயிரங்கண்—மண்டலங்கள்
வைத்தமுக மாயிரங்கள் வண்பாணித் திண்புயங்க
ளெத்தனைநூ ருயிரங்க ளென்னவே—மொய்த்திலங்கு
விண்பூத்த மேகமென மேவிடலு மாதவருந்
தண்பூத் தவிசோனுஞ் சண்முகனுங்—கண்பூத்துப்
பார்க்கவச மல்ல பரனே தனிமுகமும்
நாற்கரமு மாயெமக்கு நல்கென்ன—காற்கமலக்
கோனேரித் தென்கரைவை குந்தவிமா னத்தெளிதாய்த்
தானே யவதரித்த தம்பிரான்—றேனூர்
திருவேங் கடத்தரசு செண்பகவா சற்கோ
ரெருவேங் கடத்தி லுறைவோ—னருளுடைய
நித்தன் மலைகுனிய நின்ரு னிழல்விலங்காப்
புத்தலரத் தாணிப் புளியினுன்—சித்தருள
வாச னெழிற்சீனி வாச னமக்கெதிரே
பேசி வரமளிக்கும் பேராளன்—கேசவன்
செங்கனி வாயன் றிருவேங் கடமுடையான்
மங்கையலர் மேன்மங்கை மார்பினுன்—கங்குல்பகல்
வெற்றிப் புழுகொழுகு மேனியான் காணிக்கை
நிற்றறப்த் தாய நிரப்புவோன்—பொற்றிகிரி
தொண்டைமா னுக்களித்தோன் தொண்டரெலாம் வந்துபதங்
கண்டுபோ மென்றுகரங் காட்டுவோன்—கொண்டல்
வெறுங்கைவே டன்பெரிய வேங்கடத்து வாணன்
சிறந்தபல வானவர்பூ சித்தா—னிறைந்தகவி
நீழ்வாரத் தேதொழுது நின்று கனிந்துருகி
யாழ்வார்கள் பாடு மணிமலையான்—வாழ்வான்

றிருப்பதியிற் பாம்பணையான் சித்திரகூ டத்தா
னருட்புனைந்த வேங்கடக்கோட் டத்தான்—பொருப்பனைய
வஞ்சனைவெற் பாள னழகப் பிரானெய்திக்
கஞ்சையிலே பெண்கொண்ட கட்டழகன்—பஞ்சவர்க்கு
ளச்சுவதி தேரை யருச்சுனனுக் கோட்டினான்
பச்சுருவன் கோவை பரணியா—னிச்சுதரைக்
கார்த்திகையென் றேகுந்தி கட்டுரைப்பான் வேதாவின்
வாய்த்த வுரோகணியின் வர்க்கத்தான்—கோத்தசிலை
வேழக்கா னேடி மிருகசிரத் தேயெய்தா
னுழக் கனதரங்க வாதிரையான்—வாழியமட்
பூநிபுணர் பூசத்தான் பூசத்தா னுண்மகிழ்வா
னீனரெலா மாயி லியம்பரியான்—வானவர்கள்
பூரிமகத் தானணிகற் பூரத்தா னுத்தரத்தான்
சீரியவத் தன்மணிரா சித்திரையான்—வேரிமழை
யன்னவெழிற் சோதியா னுவிசா காப்பதத்தான்
மன்னனுடன் வந்தாண் மணவாள—னுன்னி
யலையத்தி கேட்டை யடுமூல மானான்
பலபொற்பூ ராடம் பரத்தா—னிலவாய்
நகைக்குமுத்த ராடவெழி னற்குரவை யானான்
மிகைத்ததிரு வோணத்தின் மீதா—னிகைத்தா
யிதையவிட்ட மானா னெனதுபகை வெற்பைச்
சதையவிட்ட பூங்கமலத் தாளான்—குதையம்பா
லப்பூரட் டாதி யமரர்க்கா யுத்திரட்டா
திப்பூத னெந்தை யிரேவதிக்கோ—னெப்போது
மேட விளைதாளான் வித்துநூற் றுவர்தந்தை
மேடமே யென்ன விரித்தான்—மேடமே
யிடபமென வீட்டினா னிடபமே றீச
னிடபணிமு னேனிடபற் கிறைவ—னிடப
நகமிதுன தோமே நண்ணினே னுத
மிகுமிதுனத் தோன்றுய்ய மேகஞ்—சுகமிகுத்த
கற்கடகம் வந்தொன்றக் கற்கடகம் போந்தொன்றக்
கற்கடகஞ் சேர்ந்த கரத்தினான்—கற்கடகன்

சிங்கக் கொடியோனைச் சின்னபின் னஞ்செய்தோன்
சிங்கமலை மேவு நரசிங்கம்—சிங்கத்தி
லேறுகன்னிக் கேதிகிரி யீந்தோ னிலக்குவனைக்
கூறுகன்னி யாகுமரி கொள்கின்றேன்—வீறுகன்னி
மாடத் துலாவுகின்ற மாதுபொருட் டால்வாளி
சூடத் துலாக்கடலைத் தூர்த்தோன்—ருடகையாம்
விருச்சிகத்துக் கொப்பான வீணிதலை பேய்போல்
விருச்சிகத்தை வேவ விடுத்தோன்—விருச்சிகத்துத்
தனுசுபடா நெஞ்சுபோற் றண்ணந் துழாயான்
றனுசுபடா வின்பிற் றரிப்போன்—தனுசுவத்தின்
மகர குண்டலத்தான் மாமகர வாரிதியின்
மகரைவென் றேனைவென்ற மாயன்—மகுடங்கள்
கும்பங் குடங்கரிணைக் கொங்கையரைக் கூத்தாட்டுங்
கும்பனிகும் பன்வீழக் கோவித்தோன்—கும்ப
கரணான் றலையைக் கடன்மீனங் கவ்விக்
கரணமிடத் தூண்டுங் கணையான்—கருணையா
லாதித்த னைச்சசியை யங்கா ரகன்றன்னைப்
போதித்த நம்புதனைப் பொன்னவனை—வாதித்த
வெள்ளி தனைச்சனியை வெட்டுண்ட துட்டர்தமைத்
தள்ளி விடவேசலிகை தந்தோ—னெள்ளிய
சித்திரைதா னென்றேன் றேவாதி தேவன்
சித்திரைதா னென்றேரைச் சீறுவோன்—சித்திரையாய்
வையாசி கூறு மறையோர்கள் சிந்தனையே
வையாசி யீந்த வரதன்—வையகரன்
ஆனிய மத்திடவே யாகுக் கசடர்களுக்
கானிய மத்தை யறிவிப்போ—னனிலமே
லாடி வராதிருந்தா லாகாதெனத்தள்
ளாடிவர வேயரவி லாடினே—னடிபா
லாவணியைக் கூடாம லாகவரை யேத்தினே
னுவணியி லோசைதனி ரேகையா—னுவணியில்
வந்தபுரட் டாதியெல்லா மாற்றுவோன் வீடணனை
வந்தபுரட் டாதிலங்கை வைகென்றான்—வந்துபுர

மற்பசித்த பேர்களை யவரவரென் றன்னமிட்டா
னற்பசிக்குந் தீங்குக் கணுகாதோ—னற்பசிக்குஞ்
சிந்தியா னேகார்த் திகையார்க்குச் செல்வமே
பந்தியா கார்த்திகைக்க பாலியான்—சிந்தையாய்
மார்கழியா வாச மணிமா வுளான்மங்கை
மார்கழியா தெய்யு மகன்ருதை—மார்கழியா
மாத்தையி லேமலேவான் வானெறியே நேயனுக்கு
மாத்தையிலே சொர்க்கம் வழங்குவோன்—மாத்தையிலே
மாசியா வேத வழியே மகம்புரிசோ
மாசியாம் வேதன் வணங்குவோன்—மாசிமாப்
பங்குனிக்குப் பிஞ்சு பலிக்குங் குருநாடு
பங்குனிக்கச் சொன்ன பரந்தாமன்—பங்குநனேத்
தேரிருக்கச் சொல்லிச் செலுத்தினேன் றேவருக்குப்
பாரிருக்கச் சொல்லிப் படிவித்தோன்—ருரிருக்குஞ்
செப்போ டிருக்குந் திருவிருக்கு மார்பினே
னெப்போது மென்னெஞ் சினிலிருப்போ—னப்பேழுங்
காயத்தா னெய்தகருங் காயத்தான் மேலேயா
காயத்தா ஞயேன்ச காயத்தா—ஞயிரநா
மத்திஞ னந்தணரோ மத்திஞ ஞன்மறைச்சே
மத்திஞன் பாலாழி மத்திஞன்—மொய்த்தமறை
யங்கத்தான் பொற்பாண்ட ரங்கத்தா னெல்லாந்த
னங்கத்தான் செங்கைச்சா ரங்கத்தான்—சங்கத்தான்
றன்கைத் திகிரியான் றண்ணந் திகிரியான்
றென்கச் சியிலத் திகிரியா—னன்கைக்கு
ளோட்டிஞ னுண்பலியை யோட்டிஞன் வைகுந்த
நாட்டிஞ னென்புலமை நாட்டிஞன்—கூட்டுமறை
நாதநா தன்கிடைக்கு நச்சிஞ னச்சிஞன்
வேதவே தன்சபரி மெச்சிஞன்—கோதிலா
ஞரவா ரச்சபையி லாடுவா ஞடுவான்
பாரபா ரன்சுருதி பாடுவா—னீருடுத்த
வன்னமே யன்னமா வன்னத்தா ஞமருப்புச்
சின்னமே சின்னமாஞ் சின்னத்தான்—பின்னே

மணவாளன் வாளன் மதுசூதன் சூதன்
குணவாளன் புட்கோபன் கோப—னிணமே
பராவு கலப்பை பரசுசர சாப
விராம னிராம னிராம—னராவிற்
படியளப்பா னெற்கும் படியளப்பா னண்ட
முடியளப்பா னென்று முடியா—னெடிய
வடமா மலையான் வரத்தா னெதிர்கொள்
வடமா மலையான் வரத்தான்—படிபஞ்ச
பூதங்க ளப்பன் புராணமறை நூற்கப்பன்
மூதண்ட ராசிக்கு முன்னப்பன்—வேத
முனிவருக்கு மப்பனொரு மூவருக்கு மப்ப
னனைவருக்கு மப்பனு மப்பன்—றனதாந்
திருப்பதியி லாழ்வார்தந் தீர்த்தமும்பூங் காவும்
விருப்பு மடிப்புளியின் வீறும்—பொருப்படியிற்
கோபுரமுந் தண்ணீர்க் குளிர்மண்ட பத்திரளு
மாபெரிய வேற்ற வனப்பாடுஞ்—சோபனஞ்சேர்
சிற்றேற் றமுநார சிங்கர்கோ விற்கிரியும்
பற்றேற்ற வேணிப் பழுக்குன்றுஞ்—சுற்றேற்ற
முந்தியகா ஞறு முழங்கான் முறித்தானு
மெந்தைகிரி யன்னைக் கிருந்தானு—மந்தத்
திருமதிலும் பட்டணமுந் தெய்வத் தெருவுந்
தருவனமுஞ் சாரலுஞ்செஞ் சாந்துங்—குருகினமுந்
தென்ன வனமுஞ் செழும்பாளை யங்கமுகுங்
கன்னலு நெல்லுங் கதலியும்—புன்னையிலே
கூவுங் குயிலுங் குளாஞ்சியுஞ்செம் மாதளையு
மாவும் பலாவு மதவேளுங்—காவலரு
மன்னநடை யாரு மரிபிளவும் வெள்ளிலையும்
பொன்னு மணியும் புழுக்கலுஞ்—சன்னிதியுஞ்
செங்கே தகையுந் திருக்கோனே ரிக்கரையுங்
கொங்கேறுந் தென்றற் குளிர்காற்று—மெங்கேயுண்
டாரே யினிவே றலங்காரம் பாடுவா
ராரே பிறர்கொண் டலங்கரிப்பா—ரூரே

பரமபத மிந்தப் பசையிரா தென்றே
மரகதவெற் பன்மலைக்கு வந்தான்.

'' பரமைகாந்திக்கு வ்ருத்திக்கநுகுணமாக வாஸஸ்தாந விசேஷ மேதென்னில் :—

ஆர்யாவர்த்தாதி புண்ய தேசங்கள் யுகஸ்வபாவத்தாலே யிப்போது வ்யாகுலங்களான படியாலே சாதுர் வர்ண்ய தர்மம் ப்ரதிஷ்டிதமான விடத்திலே வஸிப்பான் என்கிறதுவே இப்போதைக் குபாதேயம். அவ்விடங்கள் தன்னிலும் 'கருந்தடமுகில் வண்ணனைக் கடைக்கண்டு கைதொழும் பத்தர்களிருந்த வூரிலிருக்கு மானிட ரெத்தவங்கள் செய்தார்களோ' என்கிறபடியே பாகவதோத்தரமான தேசம் முமுக்ஷுவுக்கு பரிக்ராஹ்யம். 'கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வ ஸ்ரஷ்டார மீச்வரம், நார்ச யிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோப ஹதாஜநா :' என்னச் செய்தே 'கலௌகலு பவிஷ்யந்தி நாராயண பராயணா :, க்வசித் க்வசிந் மஹாபாகா த்ரமிடேஷுச பூரிச :. தாம்ரவர்ணீ நதீயத்ர க்ருதமாலா பயஸ்விநீ, காவேரீச மஹாபாகா ப்ரதீசீச மஹாநதீ. யேபிபந்திஜலம் தாஸாம் மநுஜா மநுஜேச்வர, ப்ராயோ பக்தா பகவதி வாஸுதேவே மலாசயா :' இத்யாதிகளிலே கலியுகத்தில் பாகவதர் வஸிக்கும் தேச விசேஷஞ் சொல்லுகையாலே இந்த யுகத்தில் இப்ரதேசங்களில் பாகவத பரிக்ருஹீதமான ஸ்தலங்களே பரிக்ராஹ்யங்கள். திருநாராயணீயத்தில் 'ஏகபாத ஸ்திதேதர்மே யத்ரக்வசநகாமிநீ, கதம் வஸ்தவ்ய மஸ்மாபிர் பகவம் ஸ்தத்வதஸ் வந:' என்று தேவர்களும் ரிஷிகளும் விண்ணப்பம் செய்ய 'குரவோ யத்ர பூஜ்யந்தே ஸாதுவ்ருத்தாச் சமாந்விதா :, வஸ்தவ்யம் தத்ரயுஷ்மாபிர் யத்ர தர்மோ நஹீயதே. யத்ர வேதாச்ச யஜநாச்ச தபஸ்ஸத்யம் தமஸ்ததா, ஹிம்ஸாச தர்மஸம்யுக்தா ப்ரசரேயுஸ் ஸுரோத்தமா :. ஸவை தேசோஹி வஸ்ஸேவ்யோ மாவோ தர்ம : பதாஸ்ப்ருசேத்' என்று பகவான் அருளிச் செய்தான். அவ்விடங்கள் தன்னில் உகந்தருளின திவ்ய தேசங்களிலே தனக்குக் கைங்கர்யத்துக்கு ஸௌகர்யம் உள்ளவிடத்திலே நிரந்தர வாஸம் பண்ண உசிதம். இத்தை 'யாவச் சரீரபாத மத்ரைவ ஸ்ரீரங்கே

ஸுகமாஸ்வ' என்று ஸத்வோத்தரங்களான பகவத் க்ஷேத்ரங்களுக்கு ப்ரதர்சநார்த்தமாக வருளிச் செய்தார். பகவத் க்ஷேத்ரங்களே விவேகிக்கு வாஸஸ்தாநம் என்னுமிடத்தை 'யத்ர நாராயணோ தேவ : பரமாத்மா ஸநாதந :, தத்புண்யம் தத்பரம் ப்ரஹ்மதத் தீர்த்தம் தத்தபோவநம். தத்ர தேவர்ஷயஸ்ஸித்தா ஸர்வேசைவ தபோதநா:' என்று ஆரண்ய பர்வத்தில் தீர்த்த யாத்ரையிலும், 'கோமந்த : பர்வதோராஜந் ஸுமஹாந் ஸர்வதாதுமாந், வஸதே பகவாந் யத்ர ஸ்ரீமாந் கமல லோசந :. மோக்ஷிபிஸ்ஸம்ஸ்துதோ நித்யம் ப்ரபுர் நாராயணோஹரி :' என்று ப்ரதேசாந்தரத்திலும் மஹர்ஷி அருளிச் செய்தான். ஸ்ரீ வால்மீகி பகவானுலும் 'ஸுபகச் சித்ரகூடோ ஸௌ கிரிராஜோபமோகிரி:, யஸ்மிந் வஸதிகாகுத்ஸ்த: குபேர இவ நந்தநே' என்கிற விடத்திலும் பகவததிஷ்டித க்ஷேத்ரத்தினுடைய வபிகந்தவ்யதை ஸுபக சப்தத்தாலே ஸுசிப்பிக்கப் பட்டது. ஸ்ரீஸாத்வதாதிகளிலும் ஸ்வயம்வ்யக்தஸைத்த வைஷ்ணவங்கள் என்கிற க்ஷேத்ர விசேஷங்களையும் அவற்றினெல்லைகளிலேற்றச் சுருக்கங்களையும் பிரியச் சொல்லி 'துஷ்டேந்த்ரியவசாச் சித்தம் ந்ருணாம் யத்கல்மஷைர்வ்ருதம் ததந்த காலே ஸம்சுத்திம் யாதி நாராயணுலயே' என்றவ்வோக்ஷேத்ரங்களில் எல்லைக் குள்ளே வஸித்தவனுக்கு தேகந்யாஸ காலத்தில் வரும் விசேஷம் சொல்லப்பட்டது. ஆகையால் 'யத்கிஞ்சிதபி குர்வாணோ விஷ்ணோ ராயதநே வஸேத், நகிஞ்சிதபி குர்வாணோ விஷ்ணோராயதனே வஸேத். என்கிறபடி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளாலே வல்ல கைங்கர்யத்தைப் பண்ணிக்கொண்டு பகவத் பாகவதபிமாந விஷயமான ஸத்வோத்தர க்ஷேத்ரத்திலே வஸிக்கை யுசிதம்.'' [ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம். ஸ்தான விசேஷாதிகாரம்.]

வேதவெற்பே வேங்கடவெற்பு. அநாதி காலமாக மஹாப்ரஸித்திபெற்றது திருவேங்கடம். இது திருமலை, திருப்பதி எனவும் வழங்கப்பெறும்.; பெருமாள் திருவேங்கடத்தான்; பிராட்டி அலர்மேல்மங்கைத் தாயார்; ஆநந்த நிலய விமாநம்; சேஷாசலம்; ஸ்வாமிபுஷ்கரிணி, கோனேரி; கிழக்கே திருமுக மண்டலம்; நின்ற திருக்கோலம்; தொண்டைமான் சக்கரவர்த்திக்கும், ஆறுமுகனுக்கும் ப்ரத்யக்ஷம்; பெரியாழ்வார், ஆண்டாள்,

குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், முதலாழ்வார்கள், நம்மாழ்வார் மங்களா சாஸநம் ; திருப்பதி மலையின்மேல் ஏழு மைலில் உள்ளது.

தொன்று தொட்டே திருவேங்கடத்தைப் பாடாத கவியே யில்லை. ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீமத் ஸ்ரீ அநந்தகிருஷ்ணயங்கார் அவர்கள் இயற்றிய ''திவ்ய தேசப் பாமாலை'' யில் உள்ள பாக்கள் பின்வருமாறு :—

### வடநாடு-திருவேங்கடம்-சந்தவிருத்தம்.

(97) பாந்த ளெனுங்கொடி வேர்ந்தவை யார்ந்திடு
பாண்டவ ரின்கொடியைப்
பூந்துகில் வாங்கிட வாங்குட னேங்கிடு
பூந்துகி லீந்தவனூர்
சேந்தனெ டார்ந்துமை காந்தனு நான்மறை
தேர்ந்த வயன்சுரர்கள்
வேந்தனு மீங்குறு மாந்தரு மேய்ந்திடு
வேங்கட மாமலையே !

ஷையூர்மாலை மாற்று–விருத்தம்.

(98) நேத னுதிப சீரக யாதவா !
கீத மோகன வாடவ மாதவா
வாத மாவட வானக மோதகீ
வாத யாகர சீபதி நாதனே.

[நே - அன்பு ; வாதம் - காற்று ; மா - பெரிய ; வடவால்நக, வால் - பிரகாசம் ; நகம் - மலை ; வடமலை - திருவேங்கடம். கீழிருந்து வாசித்தும் பாடல் சரியாய் வரும்.]

''ஸ்ரீபார்த்தசாரதியம்மான் பாமாலை'' (திருவல்லிக் கேணித் தமிழ்ச் சங்க வெளியீடு 27. 21-5-1950) முகவுரையில் முகவை இயற்றமிழாசிரியராகிய இராமாநுசகவிராயரவர்கள் பாடிய ''திருவேங்கடவனுபூதி'' யிலுள்ள சில பாடல்களைத்

தந்தது அன்பர்கள் நினைவில் இருக்கும் என்று எண்ணுகிறேன். அக்கவிராயரவர்கள் வரலாறு அறிந்த அளவில் இங்கு தரப் பெறுகின்றது.

இயற்றமிழ் ஆசிரியர் எனப் பெயர்பெற்று விளங்கிய பாவலர் திலகம் இராமாநுச கவிராயர் தென்பாண்டி நன்னாட்டிலே முகவை என்றும் மறுபெயரையுடைய இராமநாதபுரம் என்னும் நன்னகரிலே தோன்றியவர். சந்தமிகு செந்தமிழ் நற்பயிரைச் சீர்பெற வளர்த்ததும், சைவசித்தாந்த சாத்திரங்கட்கெல்லாம் விளைநிலமாயதும், இன்றைக்கும் என்றைக்கும் புலவரனைவருக்கும் நற்றுயகம் போன்றதும் ஆனதும் திருவாவடுதுறை யாதீனத்து வடகலை தென்கலைக்கடனிலை கண்ட ஆசிரியர் சிவஞான முனிவர் மாணவர்களுள் ஒருவராகிய சோமசுந்தர குரு என்பவரிடம் தொல்காப்பிய முதலிய இலக்கணங்களையும், சங்க இலக்கிய முதலிய இலக்கியங்களையும் கசடறக் கற்றுணர்ந்தார் இராமாநுச கவிராயர். அவ்வரலாறு முதலியவற்றினை இவர்தம் நன்னூல் உரைக்குத் தோற்றுவாயாக எழுதிய முன்னுரையில் தெளிவாகக் கூறியுள்ளார். அதனையும் அவ்விருத்தி உரையின் சிறப்புப்பாயிரப் பாக்களையும் அங்ஙனே தருவேன் இங்கு.

" ஶ்ரீ:
இது

## நன்னூல் விருத்தியுரை.

## சிறப்புப்பாயிரத்திலக்கியம்.

(சிறப்புப்பாயிரமென்பதுமிது)

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
* * * *

வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சநகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந் தவத்தோனே.

என்பது சிறப்புப்பாயிரம்.

*தேசிகர் சேவடி மனக்கு
மாசறு மணிமுடி யெனக்கு.

† கடல்புடை சூழ்தரூஉங் காசினி யதனிடை
வடதிசைக் கண்மரீஇ வளனெலாஞ் சுரந்து
முனிமுன நடந்துறூஉ மூங்கிலிற் படர்ந்து
குனிதிரை வைகையின் கொடுந்திற லழித்தாங்
கடைந்ததென் குமரி யகநெகிழ்ந் தன்பின்
உடைந்துதன் வசப்படா துடல்சல சலத்து
நீராழ மாமெய் நிலைதடு மாறித்
தீரா நீர்மையிற் றிரைக்கடல் படிந்து
மதிமுக மலரிடை மலர்க்கணீர் மல்கத்
துதிசெய வெனவாய் தூக்கி யாங்கே
எழுத்திய றழாஅ தெழுமொழி குளறி
வழுத்தியு மாரா வவாவலை வளைக்கையாற்
பொன்மணி மலர்தூய்ப் புரிந்துநன் கிறைஞ்சுறூஉந்
தென்மலை மாமுனி தேத்திய லுணர்ந்தோர்

*, † இவை உரையாசிரியர் இயற்றியவை.

ஓர்பன் னிருவர்பா லொண்டமி ழுணர்ந்தோர்
சீர்பெற வெண்ணிலர் தேரினுங் கவருமைச்
சிவக்கொழுந் தென்னு மோர் தேசிக ரவருமைத்
தவக்கொழுந் தென்னமா தவத்தினர் துதித்துறாஉஞ்
சிவஞான தேசிகன் சேவடிக் கன்புபூண்
டவனூ லுணர்த்திய வைந்திய லோர்ந்தனன்
சோமசுந் தரனெனுந் தொன்னூற் குரவன்
காமர்செஞ் சேவடி கண்ணிணே யாக்கொண்
டியல்பல வுணர்ந்தோ ரெண்ணில ரவருமைத்
துயல்வரு கீழ்மையிற் ருெடர்கீழ் நிலேயினேன்
இல்லேயாந் தன்னிக ரெனவுல கோதுறாஉம்
உல்லேயாந் துருவெனு மொளிகொள் போதகனும்
ஏமசன் மார்க்கத் தியனிலே வழாஅத்
தாமசன் கிளார்க்கெனுந் தகைப்புர வலனுந்
துராசையி னீங்கித் தொன்னெறி வழாஅ
இராச ஸெனும்பெய ரியற்கோ மகனும்
இந்நூற் குரையீங் ஙனமியற் றுகவென
நன்னூற் குரைசெய நாடின னுவலர்
முகநகை நாண முழுமக னுயினூஉந்
தகைகெழு சோமசுந் தரகுரு வருளுக்
கென்னு லெனுமகத் திணேப்பலி யீந்து
பின்னுவ தன்வழி பிழையா நிலேநின்
றியன்றவை யியற்றுமிந் நூலுள்,

இத்தலேச் சூத்திரம் யாதுணர்த்திற்ரே வெனின், சிறப்புப் பாயிரத்திலக்கணமாக வெடுத்தோதப்பட்ட நூல் செய்தோன் பெயர் முதலிய பதினென்றையு முணர்த்திற்றென்க.

## உரைச்சிறப்புப்பாயிரம்.

வெ. தொல்காப்பியம்

**வரதராஜமுதலியாராற்**

செய்யப்பட்டது.

சீருலவு மியற்றமிழா சிரியனிரா
மாநுசனுஞ் செந்த மிழ்க்கோன்
பேருலவு நன்னூற்கு வகுத்ததொரு
நூலுரையைப் பெரிதென் கேனே
ஏருலவு சென்னையெலா முரைத்துரைத்து
நோக்குமிட மெங்குஞ் செந்தே
னேருலவு தமிழ்க்கவிஞ ராகவவன்
வாயுரையே நிகழ்த்த லாலே.

[நன்னூல் - பவணந்திமுனிவர் இயற்றிய இலக்கணம். அவரது காலம் சற்றேறக்குறைய எழுநூற்று முப்பது ஆண்டு கட்கு முன்னும். "முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள், நன்னூ லார்தமக் கெந்நூ லாரும், இணையோ வென்னுந் துணிவே மன்னுக." (சாமிநாததேசிகர்); பெரிதென்கேனே - பெரிதென்று சொல்லுவேன். ஓகாரம், சிறப்புப் பொருளது.]

அஷ்டாவதானம்

**வீராசாமிக்கவிராயராற்**

செய்யப்பட்டது.

விறற்கம்பன் புகழேந்தி யொட்டக் கூத்தன்
வியன்காள மேகமென்போ னாதி யாய
திறற்கவிஞர் பற்பலரும் புடவி மீது
சிறப்புற்றுார் முகவைவரு செல்வ னெங்கோன்
முறைத்தமிழா சிரியனிரா மாநு சன்னு
முன்னுகவி ராயநன்னூற் குரைசெ யாமுன்
சிறப்புறுவ ரென்பதினி யென்னும் வானிற்
செங்கதிர்முன் மின்மினிபோற் றிகழ்வர் தாமே.

[விறல் - வெற்றி, பெருமை ; முறைத்தமிழாசிரியன் - மாணவர்களுக்குக் கல்விகற்பிக்கும் முறையினை நன்கு உணர்ந்த தமிழ் நூலாசிரியன். கம்பநாடர், புகழேந்திப் புலவர், ஒட்டக்கூத்தப் புலவர், காளமேகப்புலவர் முதலிய கவிஞர்கள், இந் நிலவுலகில் முகவையிலே தோன்றிய இராமாநுசகவிராயர் நன்னூலுக்கு உரையியற்றுதற்கு முற்பட்ட காலத்திற் சிறப்புற்று விளங்கினர் ; இவர் நன்னூலுக்கு உரைகண்டபின் அவர்கள் இருப்பார்களாயின், இவர்க்கு முன் அவர்கள் ஆதித்தனுக்குமுன் மின்மினி போல விளங்குவார்கள்.]

களத்தூர்
**வேதகிரிப்புலவராற்**
செய்யப்பட்டது.

ஏற்றவவை வாணரரி லியல்காட்டிக்
கனேந்தரங்கேற் றியக்கட் கோவை
நூற்றகவி நூலுடையார் நுவனிலமுன்
றடுக்கெனவந் நொடிக்க ணேந்தாத்
தேற்றியடுக் கினனன்னூற் குரையியற்றி
னியற்றமிழா சிரிய னென்னச்
சாற்றுமிரா மாநுசநற் கவிராய
னிதுவியப்போ தமிழ்வல் லோரே.

சேமங்கலம்-தமிழ்ப்புலமை
**நாராயணவுவாத்தியாயராற்**
செய்யப்பட்டது.

பொருள்விளக்கும் பொன்வெள்ளி மதியொக்கு
நிலத்தினிடைப் புலவர் சில்லோர்
தெருள்விளக்கு நன்னூற்கு வகுத்தவுரை
யிதுகாறுஞ் செப்பும் காலை

அருள்விளக்கு மியற்றமிழா சிரியனிரா
மாநுசனு மருந்த மிழ்க்கோன்
இருள்விளக்குஞ் செங்கதிர்போ லந்நூலின்
பொருள்விளங்க வியற்ற லாலே.

[பொன் - குரு ; வெள்ளி - சுக்கிரன்; மதி - சந்திரன். தமது அற்புதச் செயலால் அருளின் தன்மையை விளக்கும் இயற்றமிழ் ஆசிரியர் என்னும் சிறப்புப் பெயரினையுடைய இராமாநுசராகிய அரிய செந்தமிழ் நூற்களின் தலைவர், இருளைப்போக்கிப் பொருளை விளக்கும் சூரியனைப்போல நன்னூலின்கண் மாணவருக்கு உளவாகும் அறியாமைகளைப் போக்கி அந்நூலின் பொருள் நன்கு விளங்குமாறு அந் நூற்கு ஓர் உரை இயற்றியதனால், இந் நிலத்தின்கண் சிலபுலவர்கள் இலக்கணத்தின் தெளிவாகிய நெறியை விளக்குதற்குரிய அந் நூலுக்கு இயற்றிய உரைகள், பொருள்களை விளக்கும் பொன், வெள்ளி, மதி என்னு மூன்றையும் ஒக்கும். கதிரவனுக்கு முன் குரு, சுக்கிரன், சந்திரன் என்பவற்றின் ஒளி சிறந்து விளங்காமைபோல நன்னூலுக்கு இயற்றமிழாசிரியர் இராமாநுசகவிராயர் இயற்றிய உரைக்குமுன் ஏனையோர் இயற்றிய உரைகள் சிறந்து விளங்கா என்பது கருத்து. மயிலைநாதருரை, சங்கரநமச்சிவாயருரை, ஸ்ரீசிவஞானமுனிவருரை, ஊற்றங்கால் ஆண்டிப்புலவருரை, கூழங்கைத்தம்பிரான் உரை என்பன முன்னுள்ள விருத்தியுரைகள்.]

சத்தியவேட்டி-தமிழ்ப்புலமைச்

**சென்னை கேசவவுவாத்தியாயராற்**

செய்யப்பட்டது.

திருவளுவ ரவ்வைமுனஞ் செப்பியநூற்
குரையியற்றுந் திறமை பூண்டோன்
ஒருகவியோர் நூலாக்கி யொருகவியீ
ரைந்தாக்கி யுரைக்க வல்லோன்

இருநிலமே னன்னூலுக் குரையியற்றி
னியற்றமிழா சிரிய னென்னக்
கருதுமிரா மாநுசநற் கவிராய
னிதுவியப்போ கவிவல் லோரே.

[கவிகளை இயற்றுதலில் வல்லபுலவர்களே! இயற்றமிழாசிரியர் என்று நற்றமிழர் யாவரானும் கருதப்பெறும் இராமாநுசர் என்னும் இயற்பெயரினையுடைய சிறந்த கவிராயர், முன்னே திருவள்ளுவநாயனர் இயற்றியருளிய திருக்குறளுக்கும், ஔவையார் அருளிய ஆத்திசூடி கொன்றைவேந்தன் என்ற நூற்களுக்கும் உரையினை இயற்றும் ஆற்றல் வாய்ந்தவர். அன்றியும் ஒரு கவியினை ஒரு நூலாக்கியும், ஒரு கவியினைப் பத்துக் கவிகளாக்கியும் உரைக்கவல்லவர்; அத்தகையோர் இப்பெரிய நிலத்தின்கண் நன்னூலுக்கு உரையியற்றின், அச் செயல் வியப்பினையுடைய தாகுமோ? ஆகாது என்பது. இவ் வுரையாசிரியர் திருக்குறளின் முன்னிரண்டு பால்களுக்கும் சிறந்ததொரு விளக்கஉரையும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் நூல்களுக்கு விருத்தியுரையும் இயற்றியிருக்கின்றனர்.]

கவிராயர் தமிழில் மொழிபெயர்த்த ஆத்மபோதம் என்ற நூல் முடிவில்

'' முத்தமிழ்க் கடற்சொன் முழுவதூங் கடந்து
சுத்ததத் துவமெலாந் துரீஇமெய் யுணர்ந்த
சோமசுந் தரனெனுந் தொல்லா சிரியன்
நாமமந் திரமென நவில்மா ணக்கன்
தரங்கநீர் முகவையந் தண்பதி யதனுள்
இரங்கையன் மாதவத் தெய்திய தோன்றல்
இயற்றமிழா சிரியனிரா மாநுச கவிராயன் ''

என வருதலும் ஈண்டு நோக்கத்தகும். இதனல் இவரூர் முகவை என்பதும், இவரது குரு சோமசுந்தரர் என்பதும், இவர் இரங்கையர் புதல்வர் என்பதும், வடநூற்பயிற்சியும் சாஸ்திரவுணர்ச்சியும் உடையவர் என்பதும் அறியப் பெறுவர்.

கந்தப்பையர் குமாரர்களாகிய விசாகப்பெருமாள் ஐயர், சரவணப்பெருமாள் ஐயர் என்னும் இருவரும். ஜட்ஜு தாண்டவ ராய முதலியார், அ. வீராசாமிச் செட்டியார், ரெவரண்டு ஜி. யூ. போப்பையர், லண்டன் மிஷினரி சங்கத்தைச் சேர்ந்த டுருதேசிகர், தாமஸன்கிளார்க்கு, ரானஸ், வின்ஸ்லோ முதலிய ஆங்கிலேயப் பெரும்புலவர்களும் இவருடைய மாணவர்கள். அவர்கட்கு நற்றமிழ் அறிவை நன்கு ஊட்டியவர் இவரே. டாக்டர் உவின்ஸ்லோதுரையவர்கள் ஆங்கிலமும் தமிழுமாகப் பெரிய அகராதி ஒன்றை எழுதுதற்கு இக்கவிராயர் பெரிதும் உதவிபுரிந்தனர். அவ்வகராதி இவர் உதவியானே நிறைவேறியது என்பது அதன் முகவுரையிலே குறிக்கப்பெற்றுள்ள

"In the preparation of thə work the Compiler has been aided at different times by Competent Natives. Of these, the first was *Ramanuja Cavirayar*, long well known as a leading Munshi in Madras. He is not living.

Winslow Dictionary. Preface, Page VIII" Edition of 1862.

["இவ்வேலேயைச் சித்தம் செய்கையில் இதன் தொகுப் பாளர் பல காலங்களிற் சிறந்த தமிழர்களால் உதவி செய்யப் பெற்ருர். அவர்களுள் முதலானவர் இராமாநுச கவிராயர். இவர் சென்னேயில் நீண்டகாலமாகப் பிரசித்திபெற்ற தமிழ்ப் பண்டிதராயிருந்தவர். இப்பொழுது இவர் உயிருடனில்லே.

வின்ஸ்லோ அகராதி.

1862 ஸு பதிப்பு. முகவுரை. பக்கம் VIII".]

நம்முடைய கவிராயர் உரை எழுதிய நூல்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, நன்னூல், திருக்குறள். இவர் இயற்றிய நூல்கள் திருவேங்கட அநுபூதி, பார்த்தசாரதி பதம்புனே பாமாலே, வரதராஜர் பதிற்றுப்பத்தந்தாதி, பச்சையப்ப வள்ளல் பஞ்சரத்தினமாலிகை, இலக்கணச் சுருக்கம், வட மொழியினின்று மொழி பெயர்க்கப்பெற்ற ஆத்துமபோதப்

பிரகாசிகை என்பன. இவற்றையன்றிக் குடாரம் என்னும் கண்டன நூலையும் எழுதியிருக்கின்றனர். ''குடாரம்: இது திருவள்ளுவர் குறளையும் பரிமேலழகர் உரையையும் பற்றிச்சிலர் மயங்கிக் கூறிய வழூஉக்களை குடாரம். இதன் பொருள், சென்னைமாநகர்வயின் இலக்கணக்கவிஞரிற் சிலர் மருண்டு சொல்லிய குற்றங்களாகிய காடுகளைக் களைந்த கோடாலி என்பது. இஃதேகதேசவுருவகவணியாய் நூற்குப் பெயராயிற்று. இது யாராற் சொல்லப்பட்டதோவெனின், தலைத்தமிழ்ச்சங்க இயற்றமிழாசிரியராகிய இராமாநுச கவிராயராற் சொல்லப்பட்ட தெனக் காண்க.'' என்று கவிராயர் அவர்களே அதன் டைடில் பேஜில் குறித்திருக்கின்றனர். இவையனைத்தும் முதலில் கவிராயர் அச்சுக்கூடத்தில் அவராலேயே பதிப்பிக்கப்பெற்றன. மேற்கண்ட நூல்களுள் திருவேங்கட அநுபூதி கி. பி. 1847-ஆம் ஆண்டிலும், இலக்கணச் சுருக்கம் கி. பி. 1848-ஆம் ஆண்டிலும் பதிப்பிக்கப்பெற்றன.

திருக்குறள் அறுபத்துமூன்று அதிகாரங்களைப் பரிமேலழக ருரையுடன், அதற்குத் தெளிபொருள் விளக்கத்துடனும், டூரு துரையின் ஆங்கில மொழிபெயர்ப்புடனும் முதற்கண் வெளி யிட்டவர் இவ்விராமாநுச கவிராயரே.

''இவர்பாற் பயின்ற டாக்டர் போப் தாமியற்றிய திருக் குறளாங்கில மொழிபெயர்ப்பு முகவுரைக்கண் இவருடைய கல்வித்திறத்தைப் பல்லாற்ருனும் புகழ்ந்துளர். கல்வியில்லாமல் நெடிது கழித்துப்பின் கலைமகள் கோயில் புக்குப் பன்னாள் வேண்டியும் கல்வி பெருது மனநொந்து உயிர்துறப்பானெண் ணித் தங்கழுத்தை வாளாலறுக்கும்போது நாமகள் தோன்றி யனுக்கிரகித்ததனுலுடனே இவர்க்குக் கல்விவன்மையுண்டாயிற் றென்றும், பின் அறுத்த புண்ணுறித் தழும்பாயிற்றென்றும் அதை, தாங்கண்கூடாகக் கண்டதென்றும், இவ்வாறு அவர் பொய்யா வாயாலே கேட்டதென்றும் டாக்டர் போப் தம் திருக்குறள் முகத்து வரைந்துளர்.'' [சேதுநாடுந் தமிழும். இரண்டாம் பதிப்பு. பக்கம் 36. செந்தமிழ்ப் பிரசுரம். 48.]

ஈண்டுக் குறித்துள்ள பகுதியை அங்ஙனே தருவல்.

டைடில்பேஜ்.

திருவள்ளுவநாயனர் அருளிச் செய்த

# திருக்குறள்.

# THE 'SACRED KURRAL' OF TIRUVALLUVA NAYANAR

WITH

*Introduction, Grammar, Translation, Notes*
*(in which are reprinted Fr. C. J. Beschis and F. W. Ellis versions)*

LEXICON AND CONCORDANCE

BY THE

Rev. G. U. POPE, M.A., D.D.
*Sometime Fellow of the Madras University, Member of the Royal Asiatic Society and of the German Oriental Society*

1886.

## INTRODUCTION : (Page v)

The Rev. W. H. Drew, a missionary of the London Society in Madras, published an edition of 63 chapters with English Translation and additional Notes by the fine Old Scholar, *Ramanuja Kavirayar* * with the Tamil Commentary of Parimelazhagar. This is, as far *as it goes the* best edition.

* With reference to my Old Pundit, I venture to quote words used elsewhere :—"In many ways we fail to understand the people of India. Hindus are often spoken of as apathetic. I should term fervid. My first teacher of Tamil was a most learned scholar, long dead (peace to his ashes !) who possessed more than any man I have known, the cleverness *ingenium perfervidum*. He was a profound and zealous Vaishnavite. I remarked one day a long white line or scar on his neck, where his rosary of huge Eleocarpus beads are hung, and ventured to ask him (I had to wait on such occasions for the *mollia tempora fandi* !) its history. "Well," said he, "when I was a boy, I could learn nothing. Nothing was clear to me, and I could remember nothing. But I felt my whole soul full of an intense love of learning. So, in despair I went to a temple of *Sarasvathi* (the goddess of learning), and, with a passionate prayer, I cut my throat and fell bleeding at her feet. In a vision she appeared to me, and promised, I should become the greatest of Tamil Scholars. I recovered and from that day, by her grace, I found all things easy, and *I am what She said I should be.*" I believe he was so ; and from that noble enthusiastic teacher I learnt to love Tamil and to reverence its ancient professors."

[சென்னையிலிருந்த லண்டன் மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த ரெவரெண்டு டபிள்யூ. எச். டுரூ தேசிகர் திருக்குறள் அறுபத்து மூன்று அதிகாரங்களைப் பரிமேலழகர் உரையுடனும் அதற்குச் சிறந்த பண்டித இராமாநுச கவிராயரது தெளி பொருள் விளக்கத் துடனும், தமது ஆங்கில மொழிபெயர்ப்புடனும் முதன் முதல் வெளியிட்டார். இது முதல்தரமான பதிப்பாகும்.

எனது பழையபண்டிதர் கவிராயரைப்பற்றி மற்ருேரிடத்தில் மொழிந்ததை இங்கு கூறத்துணிகின்றேன். அவ்வார்த்தைகள் பின்வருமாறு :—இந்திய மக்களை நன்கு அறிந்துகொள்ள அநேக வழிகளில் நாம் தவறியுள்ளோம். இந்துக்கள் உதாஸீநர்கள் என்று சொல்லப்படுகிருர்கள். அவர்கள் உறுதியான நம்பிக்கை யுள்ளவர்கள் என்று நான் குறிப்பிடுவேன். ''என் முதற்றமிழா சிரியர் யானறிந்த புலமைத்திறனும், மதிநுட்பமும் உடைய எவரி னும் சிறந்தவரும் நெடுநாட்களுக்குமுன் காலஞ்சென்றவருமாகிய ஒரு பேரறிஞராவர். (அவர் ஆன்மா அமைதியுறுக.) அவர், பிறர் கண்டு அழுக்காறடையத்தக்க கம்பீரமான வைணவர். நான் ஒருநாள் தாமரைக் கொட்டைகளாலாகிய நீண்ட ஜபமாலை தொங்கிய அவரது கழுத்தில் ஒரு நீண்டவெண்கோடு அல்லது தழும்பைக் கண்டு, அதன் வரலாற்றைக் கூறும்படி அவரைக் கேட்கத் துணிந்தேன். (அத்தகைய சந்தர்ப்பங்களில் நான் அவர் மகிழ்ச்சியாயிருக்கும் நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்.) அவர், '' நல்லது ; நான் சிறுவனுயிருந்தபோது ஒன்றும் கற்ப தில்லை ; ஒன்றும் எனக்குத் தெளிவாகப் புலப்பட்டதில்லை ; என்ருல் எதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள இயல்வதில்லை. ஆயினும், கற்கவேண்டும் என்னும் பேராவல் என் இருதயத்தில் நிரம்பியிருப்பதை நான் உணர்ந்தேன். ஆகவே, நான் கல்விக் கிறைவியாகிய சரஸ்வதியின் கோவிலுக்கு மனவாட்டத்துடன் சென்று கலைமகளை உருக்கத்துடன் துதித்து, என் தொண்டையை அறுத்துக்கொண்டு, இரத்தம்சோர அவ்விறைவியின் திருவடிகளில் வீழ்ந்தேன். அவள் எனக்குப் பிரத்தியட்சமாகி, நான் தமிழ்ப் புலவர்களில் தலைசிறந்தவனுவேன் எனத் திருவாய்மலர்ந் தருளினள். நான் சுகமடைந்து, அவள் திருவருளால் எல்லா

விஷயங்களேயும் எளிதில் அறிந்து, அவள் யான் எங்ஙனம் இருக்கவேண்டுமெனத் திருவாய்மலர்ந்தருளினளோ அங்ஙனம் இருக்கின்றேன்.'' என்று கூறினர். அவர் அப்படியே இருந்தார் என்று நான் நம்புகிறேன். அந்தச் சீரிய வைராக்கிய சீலரான ஆசிரியரிடமிருந்து யான் தமிழை விரும்பவும் அதன் பழம்புலவர் களே வழிபடவும் கற்றுக்கொண்டேன்.'']

நம் கவிராயர் தம் காலத்தில் இருந்த தமிழ்ப் புலவர்களுக்குள் யாவரினுஞ் சிறந்தவராய் விளங்கினர். இவர் நுட்பமும் திட்பமு மாகிய கல்வியறிவும், மனவன்மையும், சிறந்த தெய்வ பக்தியும், வீரமும், தன்னேரிலாத தமிழ்த் தொண்டும், வாய்மையும், வித்தக மும் உடைய அருந்தமிழ்ப் புலவர் கோமான். இவர் கி. பி. 1853-ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார் என அறியப் படுகிறது.

'' இராமநாதபுரம் சமஸ்தானத்திற் பிறந்து முப்பதுநாற்பது வருடங்களுக்கு முன் சென்னையில் வசித்த இராமாநுஜக் கவிராயர் என்பவர் இதற்கு (நன்னூலுக்கு) ஒரு நேர்த்தியான உரையெழுதி '' இராமாநுஜக் காண்டிகை '' யெனப் பெயரு மிட்டனர். இதனே விருத்தியுரை என்று சொல்லக்கூடிய அவ்வளவு மாண்பு பொருந்திய உரை யென்னலாம். இவரே '' தொல்லே வடிவினவெல்லாவெழுத்து மாண்டெய்து மெகர வொகர மெய்ப் புள்ளி '' என்ற நன்னூல் விதியை '' ஏகார வோகார மெய்ப் புள்ளி '' என மாற்றிச் சரியான பொருள்கொண்ட மகான் என மிக வியக்கப்பட்டவர் '' [சிவாசாரியர். விவேகபாநு. சம் புடம் 2 இலக்கம் 9. பக்கம் 280. 'நன்னூல்' என்ற தலைப்பு. 1903ஹ ஆகஸ்டு மீ.]

ஈண்டுக்குறித்துள்ள சூத்திரமும் அதன் விருத்தியுரையும் இவண்தருவல்.

'' எழுத்தியல். 5. உருவம்.

98. தொல்லே வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்துமே காரமோ காரமெய் புள்ளி.

இது, நிறுத்த முறையே உருவிலக்கண முணர்த்துகின்றது. (இதன்பொருள்) எல்லா வெழுத்துந் தொல்லை வடிவின - எல்லா எழுத்துக்களும் பலவேறு வகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவையே யுடையனவாம், ஆண்டு - அவ்வாறு வழங்குமிடத்து, ஏகார மோகார மெய் - ஏகார ஓகாரங்களுந் தனிமெய்களும், புள்ளியெய்தும் - பழைய புள்ளியைப் பெறும். (என்றவாறு.)

இவ்வாறு கூறுதலாற் பிற்காலத்தார் அந்தப் புள்ளியை நீக்கிச் சந்தேகப்பட வழங்கிவந்தன ரென்பதாயிற்று.

வரலாறு :—எஏ, ஒஓ, கெகே, கொகோ, க்க, ங்ங என வரும். மற்ற உயிர்மெய்களுந் தனி மெய்களு மிவ்வாறே புள்ளிபெறு மெனக் காண்க. தொல்லாசிரியர் முதலாயினோர்,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

எனவும், "இறந்தது விலக்கல் எதிரது போற்றல்" எனவும் கூறினமையால், 'எகர மொகரமெய் புள்ளி' பெறும் என்ற இச் சூத்திரத்தை, 'ஏ காரம் ஓகார மெய்புள்ளி' பெறும் எனத்திருப்ப வேண்டிற்று. என்னெனின், இக்காலத்தார் ஏகார ஓகாரங்களுக்கே புள்ளியிட்டெழுதுவது பெரு வழக்காயினமையாலென்க.

உருவிலக்கண முற்றிற்று."

நம் கவிராயர் தமது சீரிய உரையில் முன்னுரைகட்கு மறுப்பு வரைவது மிகவும் விழுமியது. அதற்கு ஓரிடம் காட்டுவேன். நன்னூல் இடையியல் பதினைந்தாவது சூத்திரம் "மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்." கவிராயர் உரை பின் வருமாறு :—

"மற்றை என்னும் இடைச்சொல் பொருள்படும் வகை.

366. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

இது, மற்றை என்னும் ஐகார வீற்று இடைச்சொல் பொருள் படுமாறு கூறுகின்றது.

(இ - ள்) மற்றைய தென்பது - பெயர்க்கு முதனிலையாய் வரும் ஐகார ஈற்று இடைச் சொல்லானது, சுட்டியதற்கினம் -முன் சுட்டப்பட்ட பொருளொழிய அதற்கு இனமாகிய பொருளைக் குறித்து நிற்கும் (எ - று).

சுட்டுதல் - குறித்தல்.

வ - று : இரண்டு மணியுள இடத்து ஒன்று கண்டவன் மற்றையதுங் காணவேண்டுமெனின், முன்கண்டதொழிய அதற் கினமாகிய மணியையே குறித்து நிற்பதல்லது வேறு பிறபொருள் குறித்து நில்லாதெனக் காண்க. வேறு பிறபொருள் குறித்து நில்லாமையாவது, ஆடை கொணர்ந்த வழி அது வேண்டாதான் மற்றையது கொண்டுவா என்றால் அதற்கினமாகிய ஆடையையே கொண்டுவா என்னுங் கருத்தினதாதலன்றி, வேறு பிற பொன்னை யும் மணியையுங் கொண்டுவா என்னுங் கருத்தினதாதல்.

இனி, இவ்விடைச் சொல்பெயர்க்கு முதனிலையாய் வருத லன்றி, மற்றையாடை மற்றைப் பொருள் எனவும் வரும். மற்றையது, மற்றையஃது, மற்றையவன், 'மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்,' 'களவல்ல மற்றைய தேற் றாதவர்,' 'மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்' எனப் பெயர்க் கும் வினைக்குறிப்பிற்கும் முதனிலையாய் வருதலே பெரும்பான்மை யாதலால், மற்றையெனப் பிரித்தோதாது மற்றையதென ஒன்றாகக் கூறினர்.

இனி, இச்சூத்திரத்திற்கு இவ்வாறன்றி, மேலைச்சூத்திரத் துள், வினைமாற் றெனவும் பிறிதெனவும் பொதுப்படக் கூறினதி னாலே, இனவினை மாற்றும், பிறிதுமென இச்சூத்திரத்தாற் புறனடை கொடுத்துக் காத்தாரெனக் கூறுவாருமுளர்; அது இந் நூலுடையார் கருத்தாயின், இனமென்னும் ஓர் சொல்லுக்காக ஒரு சூத்திரஞ் செய்து புறனடைகொடுப்பின்,

'சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செல்வ னடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்.'

எனக்கூறிய சூத்திரவிலக்கணத் தருமையையும், இவ்வுரைகாரர் கல்வியின் பெருமையையும் இச்சூத்திரம் நனிதவ நன்கு விளக்கிற் றென்க.

என்னெனின், 'இனவினை மாற்றும் பிறிதுமற் றசைநிலை' எனச் சூத்திரஞ் சுருங்கச் செய்து மற்று என்பதை இடைநிலை மொழியாக வைத்து ஏனையீரிடத்தும் நடந்து பொருளை மற்று இனவினை மாற்றும், இனப் பிறிதும், அசைநிலையுமாமென நண்ணவைத்துத் தாப்பிசைப் பொருள் கோளாக்கின் அமையு மாதலால், அது கருத்தன்றென்க. இதனுள் நின்ற உம்மை எதிரது தழுவி எண்ணி நிற்றலால், இனமென்பதைப் பிறிதென் பதனோடுங் கூட்டுக.

"மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை யொழிய வினங்குறித் தன்றே."

—(சொல். இடையியல். சூ. 16)

என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க."

இதனால் இக்கவிராயரது உரைநடை செவ்விதாயமைந்து முன்னுரைகளினின்று மாறுபடுமிடங்களில் வெகு நேர்த்தியாய் மிளிர்வதும் நன்கு அறியலாம்.

"தனிச் செய்யுட் சிந்தாமணி" யில் உள்ள இக் கவிராய ரது பாடல்களைத் தருகின்றேன்.

இவர் பச்சையப்ப முதலியார், சீநிவாசப் பிள்ளை, நாட்டன் துரை யிவர்கள் மேற் பாடிய முக்கூற்றிருக்கை செய்யுட்கள்.

சீர்தெரிந்த நாட்டனற் சீனிவா சப்பெருமான்
பார்புரந்து பச்சையப்பன் பற்றலர்பா—லேர்சிறந்தான்
இங்கிலாண் டானநக னெல்லையில்பா வாணர்கடம்
பங்கிலாண் டைந்தருவாம் பண்பு. (1)

காத்துப் படைத்தழித்தான் காமர் பொருளறப்பால்
பூத்துத் தரித்தரித்தான் பூம்புகழ்மை—யேத்து புகழ்
மூவராம் பச்சையப்பன் முன்போன் றியற்பெயரான்
ருவலர்ந்தத் தத்தானு மாம். (2)

மருவினிமை யின்மையுணர் மால்சீநி வாசப்
பொருவில்பேர் பூண்டளித்த பொற்பான்—உரிமைபெற
நாவலர்க்கெ லாமளித்தா னுனிலமெ லாமணந்தான்
காவலனும் பச்சையப்பன் காண். (3)

நீர்முறையி னெவ்வுயிர்க்கு நேர்ந்துதவி செய்கையினுல்
பேர்முறையும் பச்சையப்ப னுப்பெற்றுன்—ஓர்முறையிற்
பஞ்சையப்ப னுமெலிந்தான் பங்கயத்தோன் காவலனுய்
மிஞ்சினஃகி னீரோ விடம். (4)

கரிபரிதே ராளுடையாய் காமருவு கையோய்
பொருவில்புகழ்ப் பச்சையப்ப பூப—தரியலூர்
சீர்நா லுலகுமறந் தேசநல மின்பிகழ்தோம்
சேரலரைக் கையரைத் தேவை. (5)

## சங்கராசாரியார் பேரிற் பாடியன.

அவனிக்குந் தந்தை யநந்தஞா னத்தோன்
நவமிக்க ஞானமுநல் குற்றேன்—எவனவனே
சங்கரா சாரியன்றன் ருள்வழுத்தி ணுயின்வழு
அங்கிரா சார்பின்வழி யான். (6)

பூந்தா மரையெனினும் போலுமால் வல்லிருளைக்
காந்துகதிர் ஞானவொளி கான்ருங்கு—நாந்தொழவே
துங்கரா காதியவன் றெல்பிறவி நோயகற்றுஞ்
சங்கரா சாரியன் பொற் ருள். (7)

விண்பா ருலகில் விதிர்விதிர்த் தோட விதி விதித்துக்
கண்பார்த் தருள் சங்கரா சாரியன் கடவுட் டொகைக்கும்
பண்பேதுக் காசாரி யன்சந்தித் தாங்குப் பராபர மென்
றெண்பேர் பெற நெஞ்சமே வஞ்சமே தவிர்ந் தின்புறவே. (8)

ஏதமகன் றுய்ந்தே னென்னிற்சங் கரபகவத்
பாதகுரு வருந்தப் பாதமலர்—வேதமுறை
வந்தருள்பு ரிந்தியான் வைத்தகா ணிக்கையங்கைக்
கந்தமலர் வாய்மலர் கையான். (9)

தசபங்கி.

| | | |
|---|---|---|
| சங்கராசாரிய | சச்சிதாநந்கந்த | தற்போதமுநீஇ |
| வெங்கராவேயைந்து | விச்சையானந்த | விற்போரசிதா |
| துங்கராகாளியும் | துச்சிறேகந்தோலும் | துற்பாவமுமாஅய் |
| இங்கராஅவாளெமை | இச்சைதீரநைந்தேம் | இற்பார்துவமே. (10) |

## பெஞ்சமன் பாபிங்டன் துரைமேற் பாடியது.

தசபங்கி.

| | | |
|---|---|---|
| பாவரேஎத்துறூஉம் | பாபிங்கிடேஎச | பண்பாஅரணிகோஒ |
| காவலசீர்த்தது | காதுங்கனீபுன்ன் | கண்பார்மைவிழி |
| மாவலர்போர்த்தன | மாதங்கமாஅலை | வண்பூப்பசலைஇ |
| தாவல்லைதீர்த்தளி | தாதங்கமேஎலும் | தண்பூமிசையே, (11) |

பாவலவ ரேத்துறூஉம் பாபிங்கி டேஎச
காவல சீர்த்ததுகா துங்கனீபுன்ன்—மாவலர்
போர்த்தனமா தங்கமா அலைதா வல்லை
தீர்த்தளிதா தங்கமேஎ லும்.
பாபிங்கி டேஎச பண்பா ரணிகோஒ
காதுங்கனீ புன்ன்கண் பார்மைவிழி—மாதங்க
மாஅலைவண் பூப்பசலைஇ தா தங்க
மேஎலுந்தண் பூமிசை யே.
பாவல ரேஎத்துறூஉம் பண்பா ரணிகோஒ
காவல சீர்த்தது கண்பார்மைவிழி—மாவலர்
போர்த்தனவண் பூப்பசலை இதா வல்லை
தீர்த்தளிதண் பூமிசை யே.

## இத்தசபங்கியின் பிரிவுணர்த்துஞ் செய்யுள்.

குறளடி வஞ்சி விருத்தங் கண்மூன்
றவைகூட்டி யொன்று
உறழ்தரக் காரிகை யொன்றும்
பின்னொன்றின் முன்னேரிரண்டும்
பிறழ்த லிலா மற்றனித் தனிசேர்த்து
மப்பின் னிரண்டும்
முறையுறச் சேர்ப்பின் வெண்பாவோ
டகவன்மும் மூன்று பத்தே. (12)

உலகனைத்துந் தீட்டியருக் கொள்ளிய நுண்டு
சிலகவிரித் திட்டாங் கென்ன—நிலவலையத்
தாய்ந்துதிரு வள்ளுவனு ராக்கு மறம்பொருளின்
பேய்ந்தகுறட் பாவிரிப்ப னீங்கு. (13)

நலனல னேக்குக் குலகனைத் தாடி
எதிர்கவர்ந்து காட்டலி னீங்கு. (14)

## தொட்டிக்கலை கிருஷ்ணசாமி முதலியார் முன்னிலையிற் பாடியன.

வாங்குதிரை யின்பவள மல்குகலை சைக்கருள்வீர்
வாங்குதிரை யின்பவள மாரனென—வோங்குதிரை
யோதுவரை யாத்தழைப்பீ ருத்தமநா மத்திறைமை
யோதுவரை யாத்தழைப்பீ ருங்கு. (15)

தரலாற்றுந் தொட்டிக் கலைத்தமிழ் வேதா சலன்றிகிரி
வரலாற்று மங்கைகொங் கைக்கடிப் பட்ட வரைக்குலங்கள்
உரலாய்த் திரிகைய தாயம்மி யாய்ச்சில் லுருண்டைகளாய்ப்
பரலா யுறுதுக ளாய்ச்சிறு காற்றிற் பறக்கின்றவே. (16)

## சென்னை கிருஷ்ணமநாயக்கன் குளத்தைப் புகழ்ந்துரைத்தது.

சாரவீ டிருந்தோர் படிந்துசார்ந் திடிற்சீர்
 தகுபுக ழிலையென்றே வீடு
தூரமா யினரும் படிந்துவீ டடையுந்
 தோற்றமற் றறிந்ததி ஞணு
வீரவே ளலைத்த நுதற்கணுன் சென்னி
 மேயதச் சுரநதி யென்ருல்
மாரகண் ணமநாய்க் கன்ஞெரு குளத்து
 மகிமையா முரைசெய வற்ருே. (17)

சொல்லிற் பருப்பொருள் காணு ரதனகச் சூழல்புற
எல்லையொலி யுயிர் யாக்கை யுலகமிரண் டிடத்தும்
மெல்ல வுயிர்த்தற் கிடன் வேறிலாது விரிந் திலங்க
வல்ல வதிநுட்ப சிற்பொருள் காண்ப ரெனின் மடனே. (18

கண்மனங்கை கையாது காரமா வீங்கிகழ்ந்தார்
கண்மனங்கை கையாத காரணமென்—னண்ணு
மலைமல்லர் கஞ்சனுயிர் மாமறலிக் கூணுக்
கலைகொல்லோ வேங்கடவெற் பா. (19)

சீர்பூத்த வுந்தித் திருமா லடியவர் தேசிகர் தாள்
ஏர்பூத்த நன்மலர் நீரினருச் சித்திறைஞ்சி யென்றும்
ஓர்பூத்த தாரினெஞ் சென்னியெல்லாம் புனைந்தாக்குகிற்பாம்
பார்பூத்த வின்பமும் வான்பூத்தனவுங் கைப் பற்றுதற்கே.(20)

இனி, இயற்றமிழாசிரியராகிய இக்கவிராயரது ''திருவேங்கட அநுபூதி''க்குச் செல்வாம். திருவேங்கடவனை அணுகி அடையும் அநுபூதியெனவும், திருவேங்கடவரது அநுபூதிபெற்றுப் பாடிய நூல் எனவும் அதற்குப் பொருள் கொள்ள அமையும். அநுபூதி என்பது உடன் ஆதல் என்ற பொருள்பெற்று திருவேங்கடவன் திருவடிகளைத் தியானித்து விளைந்த அநுபவ ஞானமே இத்தனி நூலுக்குக் காரணம் என்பதாயிற்று.

திருவேங்கடமுடையான் திருவருளால் முழு வேதமுதல் வணகிய அவ்விறைவன் உண்முக உணர்வாய் உணரும் நுண்ணிய நுகர்வே 'திருவேங்கட அநுபூதி'யாம். நம் கவிராயர் திருவேங்கட வெற்பினர் அநுக்ரஹ விசேடத்தால் இப்பெரு நுகர்வைப் பெற்றார் ; பெற்று, ஆராப்பெருநிலையில் திளைத்தார் ; யாவும் மறந்தார் ; அந்நிலையில் தம்மையும் திருவேங்கடவனையும் தம் நுகர்வையும் மறந்தார் ; அம்மாமலையப்பனின் அநுபவம், இயல்பாக யாதொரு, வரம்புமின்றி ஊறிப் பெருகியது. 'திருவேங்கட அநுபூதி' என்னும் திருவருள் நூல் அத்திருமா மகள் கேள்வன் திருவுளப்பாங்கின்படி உலகுக்குக் கிடைத்த ஓர் அருட்பெருங் கொடையே. இந்நன்னூல் இறைமணம் கமழ் கின்றது ; மொழியழகு தோற்றுகின்றது ; அருள் தேன் சிந்து கின்றது ; மக்கள் உள்ளம் பெரிது ஈர்ப்புண்கிறது ; அணுகி, எம்மை உய்விக்க எழுந்த மலர் ஈதென்று கண்டெடுத்துப் போற்றி வருகின்றது. இவ்வநுபூதி அகநெகிழ்ச்சியில் மலர்ந்த அருமலர். எனவே, அத்தகைய அகநெகிழ்ச்சியில் அணியும் மருமலரே அது எனின் அது மிகையாகாது. சுருக்க விளக்கமாக ஆழ்ந்து தெளிந்து நிற்கும் சிறு மாநூலாதலின், நெகிழ்ந்து உணர்ந்து உணர்ந்து தெளிதற்குரிய பெருமறை அது.

'திருவேங்கடவநுபூதி' என்னுந் திருநூல் பத்துப் பாக்க ளமைந்த பாயிரமுள்ளதாய், ''உயர்பானு'' எனத் தொடங்கி ''பூரணனுந், திருவேங் கடவெற் பினர்சே வடியே'' என்று முற்றும் நூற்றுப்பதினொன்று பாக்களுடன் திகழ்கின்றது.

''இயற்றமி ழாசா னிராமா நுசனன்
னயத்தமிழின் சொல்லாய்ந்து நாவாற்—குயிற்றியே
வீறுபுகழ் வேங்கடவர் மேற்புனைந்த மாலைபத்து
நூறுமொரு கோவையென நோக்கு.''

என்ற வெண்பாவை நோக்குக. உருவில் சிறியது : எனினும், பொருளளவில் பெரியதொரு அற்புத நூல் இது. இந்நூல் சுருங்கிய சொல்லில் அரிய பெரிய விரிந்த பொருள்களை அடக்கி யுள்ள தென்பதும், ''தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட, பனையளவு காட்டும் படித்தால்.'' (திருவள்ளுவ மாலை 5. கபிலர்)

எனத் திருக்குறளுக்குக் கூறிய பெருமை, இவ்வநுபூதியாம் சிறு நன்னூலுக்கும் நன்கு பொருந்தும் என்பதும் வெள்ளிடை மலை போல் விளங்குகின்றன.

"நவகோடி நாராயணன் செட்டி" என்று அமலனுதிபிரானுக்கு அன்பரிட்ட பெயர். அதற்கேற்ப, நான்வகைப் பாக்களுள் வணிகர் மேற்பாடற்குரிய கலிப்பாவின் இனமான சந்தக் கலிவிருத்தத்தால் பாடப்பெற்றது இவ்வநுபூதி. "கலௌ வேங்கட நாயக:". கலியிற் கண்கண்ட தெய்வம் திருவேங்கடவன் என்பது அனைவரும் அறிந்ததே.

அருளுலக சிந்தனையின்றி இறுகியுள்ளது மனம். அகார வாச்சியனை ஆதியம்பகவன் செந்தாமரைக் கண்ணன். அவ்வமலன் திருவடியை எண்ணும் அன்பின்வழி அம்மனம் நெகிழ, மருளின் துன்பும் அருளின் இன்பும் ஆன்மவுணர்விற்குப்படும். அந்நிலையில் அடைக்கலம் அடைக்கலம் என அலறும் ஆன்மா. ஆன்மா கட்டற்ற காதல்மிக்க அவ்வமயம் ஆனந்த வடிவ அழகன் அகத்தும் புறத்தும் வெளிப்பட்டு அருளும். புலனை பெருமானுக்குச் சூட்ட மாலை புனையவேண்டும். மணம்வளர் பூமாலையோ அடுத்த கணத்து வாடும். அதற்கு அயலாகிய இலக்கணப் பாகுபாடு உடையதாய், உலகம் மலையாமை முதலிய பத்தழகுமுடையதாய், அத்தன் திருவடி யடைவிக்கும் நலம் உடையதுமான செம்மை யுடைய சொற்களைக்கொண்டுயாத்த வாடாத பாமாலை அலர்மேல் மங்கை யுறைமார்பனை திருவேங்கடத்தான் திருவுளத்திற்குக் களிப்பூட்டும். இது கருதி சூட்டிய பாமாலையே இத்திருவேங்கடவநுபூதி. "திருமார் பணியுந் திருவேங் கடவற், கொரு மாலையினெண் டமிழ்மா லை" (பாயிரம். 1); "செந்தா மரைமின் றிகழ் வேங் கடவற், கந்தா ரினருந் தமிழ்மா லைசொல." (பாயிரம் 2); "வொருமா லைசொல்வா முயர் வேங் கடமேல்" (பாயிரம் 5); "வீறுபுகழ் வேங்கடவர் மேற்புனைந்த மாலை" (இறுதிவெண்பா) என்பன காண்க.

முகவை இயற்றமிழாசிரியராகிய இராமாநுச கவிராயரவர்கள் பாடிய "திருவேங்கடவநுபூதி" மூலம் அரும்பதவுரையுடன்

'' திருவேங்கடவர் மாலே '' என்ற திருநாமத்தோடு இத்தமிழ்ச் சங்க வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இச்சீரிய நற்பாமாலே வெளியீட்டிற்கு உதவிபுரிந்தவர்கள்.

(1) ஸ்ரீமான் வி, நரஸிம்ஹய்யங்கார் அவர்கள், ஸ்டேஷனரி எம்போரியம், 1, அரண்மனேக்காரத் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னே.

(2) ஸ்ரீமான் எம். ஜே. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள், 10, நீலகண்டமேதா தெரு, தியாகராயநகர், சென்னே.

(3) ஸ்ரீமான் டி. வி. விஸ்வநாதய்யர் அவர்கள், அட்வொகேட், 14, கீழமாடத் தெரு, மயிலாப்பூர், சென்னே,

(4) ஸ்ரீமான் எஸ். கே. சுப்பிரமணியய்யர் அவர்கள், 42, வடக்கு மாடவீதி, திருமயிலே.

(5) ஸ்ரீமான் கே. பாஷ்யம் அய்யங்கார் அவர்கள், அட்வொகேட், மயிலாப்பூர், சென்னே.

(6) ஸ்ரீமான் ஆர். கோபாலஸ்வாமி அய்யங்காரவர்கள், அட்வொகேட், வைத்தியராமன் தெரு, தியாகராயநகர் சென்னே.

அவர்கள் அனேவருக்கும் திருவேங்கடமுடையான் ஸர்வ மங்களத் தையும் நல்குவாஞகை.

பொங்கும் மங்கலம்
எங்கும் தங்குக.

நின்னருளாங் கதியன்றி மற்றென் றில்லே
நெடுங்காலம் பிழைசெய்த நிலேக ழிந்தே
னுன்னருளுக் கினிதான நிலேயு கந்தே
னுன்சரணே சரணென்னுந் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலே யெனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தே னுன்னே
யின்னருளா லினியெனக்கோர் பரமேற் றும
லென்றிருமா லடைக்கலங்கொ ளென்னே நீயே

—(தேசிகமாலே. அமிருதாசுவாதினி 31)

ஸ்ரீரங்கவிலாசம்,
திருவல்லிக்கேணி.
20—12—50

ப. ரெ. திருமலே ஐயங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முகவை இயற்றமிழாசிரியராகிய

**இராமாநுச கவிராயரவர்கள்**

பாடிய

# திருவேங்கடவனுபூதி.

## பாயிரம்.

திருமார் பணியுந் திருவேங் கடவற்
கொருமா லையினெண் டமிழ்மா லைசொலற்
குருகா மனமுள் ளுருகிப் பரிவாற்
குருகூர்ச் சடகோ பர்பதம் பணிவாம். (1)

செந்தா மரைமின் றிகழ்வேங் கடவற்
கந்தா ரினருந் தமிழ்மா லைசொலக்
கொந்தார் மலர்தூய்க் குழைவுற் றுமன
மெந்தே சிகர்பா தமிறைஞ் சிடுவாம். (2)

பூத்தா ளுலகெவ் வெவையும் புரவூஉக்
காத்தாள் கரவாள் கதிதந் துகடை
நீத்தா ணெடுமா லுரநின் றெமையாண்
மாத்தாண் மலர்சூ டிமகிழ்ந் திடுவாம். (3)

சூழ்வார் முனிவோர் சுரரா தியெலாந்
தாழ்வார் கழறந் தருள்வேங் கடமேல்
வாழ்வார் கழன்மா லைபுனைந் திடமுன்
பாழ்வார் கண்மலர்ச் சரணம் பணிவாம். (4)

திருமா லடியா ரடிசென் னிமிசை
மருமா லையெனப் புனையா மகிழா
வொருமா லைசொல்வா முயர்வேங் கடமேல்
வருமா லருள்வான் வரலாய் மனமே. (5)

வணர்பாம் பணையே றிவைகுந் தமமர்
குணவா ரிதியைத் தொழுதே வர்குழாந்
துணர்வார் கரவேத் திரமே தொகநோக்
கணிசே னையர்கோ னடியாம் பணிவாம். (6)

நாரா மரமா வெனநா ளுமனஞ்
சீரா மனுருச் செய்தியா னமதாக்
கோரா வணன்வீ றுகுலைத் தசயத்
தாரா னனுமா னிருதாள் பணிவாம். (7)

மஞ்சார் நிறமா யவனுர் புரியும்
பஞ்சா யுதமன் பணியோ டுவணந்
துஞ்சா விரசைத் தொடையா டையணி
யஞ்சீர் கடைகாப் பவர்காப் பதுவாம். (8)

பொன்னங் குடைசே டன்முடிப் புனையாக்
கன்னங் கருமா முகில்கஞ் சமெலா
பன்னங் கமதாய் நிகர்மா லுலகிற்
சின்னங் களைமுந் துசிரம் பணிவாம். (9)

சரிவா ரமெனக் கரையா முன்வரூஉ
மரிவா ரநலம் புனையா வரையும்
புரிவா ரபொலம் புனைபூங் கழலும்
பரிவா ரமுடன் பணியத் துணிவாம். (10)

## நூல்.

உயர்பா னுவினும் மொளிகா லுரைநன்
னயர்தென் குருகூ ரரைநான் பரவா
வியல்புன் கவியா தலினேற் றருளாய்
வியவாய் திருவேங் கடவிண் ணவனே. (1)

வல்லான் குருகூர் வரன்வாய் மொழியிற்
பல்லோ ருரையே படர்கிற் பதலாற்
கல்லா தவரிற் கடையா யினவென்
சொல்லே றுவதோ சுருதிக் கிறையே. (2)

படியே முமளந் தபடித் தெவனோ
சடகோ பர்கவித் தலைநா லடியோ
ரடியே னுமளந் திலையாற் றலைபின்
னிடைகின் றனவேங் கடவீச் சுரனே. (3)

உலகே முமகத் துலவா வுலகுண்
ணிலவா விரிவாய் குவிவாய் நினையார்
கலவா வுணர்நீர் மையர்கா ணெளிதோ
நலனுர் திருவேங் கடநா யகனே. (4)

ஆதா ரமிலா தலைவே னையிருட்
பாதா ளம்விழுங் குபடர்க் கினியார்
மாதா வினுமன் புறுமா தவவென்
னுதா திருவேங் கடநா யகனே. (5)

மாகா திபர்வா னவர்மா முனிவோர்
யோகா திபர்ஞா னிகளுள் ளுருகிக்
காகா வெனநின் றுகழற் பணியுந்
நாகா சலனே சரணு யகனே. (6)

கல்லைக் கழன்மின் னுருவாக் கியகோ
னெல்லைப் படலா விசைபா டியவென்
சொல்லைப் புனைதோ ளணிகண் டலர்தூற்
றல்லைப் பொறைகூர்ந் தெனையாண் டருளே. (7)

அந்தோ வெனைமா யையிலிட் டனையா
னொந்தே கெடனேக் கலைநோக் கலையே
யெந்தா யெமையாண் டவதே வகிதன்
மைந்தா மதுசூ தனவா மனனே. (8)

கருடக் கொடிவா கனனே கதிதந்
திருடுற் றியநெஞ் சிளகப் புரியாய்
தெருடுற் றியசெஞ் சுடரே படர்தீர்
புருடோத் தமனே புகலா ரணனே. (9)

விட்டக் கரனு தியர்வே தைகெடத்
துட்டக் கரவாண் மையர்துன் றுகளை
கட்டக் கரனு தியரைக் களைவில்
லெட்டக் கரனே யினியென் றுறலே. (10)

மறையோ மறைகிற் பதமெக் கிறைமன்
முறையோ முறையென் னவுமுற் படலாய்
கறையோ கெழுசிந் தையினேன் கருதாக்
குறையோ குறைமா தவகூர் பொறையே. (11)

அட்டிட் டலையே புரியைம் பொறிவா
யொட்டிட் டுநிறுத் தினுமோ டுமனந்
தொட்டிட் டதையீர்த் திசுடர்க் கழல்வை
மட்டிட் டகுழற் றிருமார் பினனே. (12)

விரிதா வுமுயிர்த் தொகைவீ தியெலா
மொருதா யொருதந் தையுநீ யலையோ
விருதா வினென்னு யுளைவித் திவிடல்
கருதாய் திருவேங் கடவெற் பினனே. (13)

விதியும் பயனும் விண்ணோர் முனிவோர்
மதியுந் தலையும் மறையா யர்மனைத்
ததிவுந் தொறுநாத் தரைவா னதிநீள்
கதியுந் துளவுங் கமழ்சே வடியே. (14)

தேகா தியசே வடியொண் பொருவா
வாகா நெறிநின் றலையத் தகுமோ
சாகா முனம்வந் தருடா டொழுமா
நாகா சலநான் மறைநா யகனே. (15)

அல்லா யொளியா யறிவா யமர்வா
யெல்லா நினவா யினகா லையினே
சொல்லா யெனதென் றெருதோ டமுமே
பல்லா யிரவண் டமுநீ பரனே. (16)

அணியார் முலைமங் கையரா சையெனுந்
திணிதாம் வலையிற் சிறைபட் டழிவேன்
பணிரா சவிரா சிதசற் பலவப்
பிணிநோய் கெடவந் தருள்பெய் சுரனே. (17)

கறிதா வியதின் றகவித் திறனு
வெறிதா வியவென் மனமோ விடையக்
குறிதா வியகொள் கைகெடக் குணியா
நெறிதா வியசெய் தருணீர் வணனே. (18)

முன்னைத் தவமொன் றுமின் மூடனெனு
மென்னைத் தெரிவித் தருளெம் பெருமான்
பொன்னைத் தெரிவித் தபூ டணமா
நின்னைத் தெரிவித் தனைநீ யரியே. (19)

பல்லா யிரகோ டிபல்கோ டியுயிர்க்
கெல்லா மொருதா யெனநின் றவனீ
யல்லா லிலையென் றறிகின் றனனின்
சொல்லா லருளாற் சுரர்தொல் சுரனே. (20)

சொல்லோ பொருளோ சுருதித் தலையோ
வல்லோ பகலோ வடியா ருளமோ
வில்லோ துறவோ வெழில்வேங் கடமென்
கல்லோ குடியா வதுகார் வணனே. (21)

வானு தியவாய் வளர்பல் குணமா
யானு மகதத் துவமாய் மமமாய்த்
தானு ரிஷிகே சனுமாய் முழுமைக்
கோனு கினைநின் குறியெக் குறியே. (22)

கண்ணே மணியே கருணைக் கடலே
யெண்ணே மனமே யெமதா ருயிரே
துண்ணே யெனவெவ் வினையைத் துணியாய்
விண்ணே முடிவேங் கடவெற் பினனே. (23)

அறிவா னறிவோ டறியும் பொருளாம்
பிறிவொன் றுமிலா தபெருஞ் சுடரே
குறியென் றருள்கொண் டுகுணப் படுவே
னெறியென் றிதுகாட் டுதிநீண் முகிலே. (24)

ஆரா வமுதே யறிவா ரறிவே
தீரா வினைநோய் சிதைவிப் பவனே
பாரா யெனைநின் பதுமக் கணினு
ஞரா யணனே நடுநா யகனே. (25)

ஆளா வெனைவந் தருள்பெய் தலுநின்
றுளா மலரென் றலைசூ டலுமெந்
நாளோ வுணரே னனிநை குவனே
தோளா மணியே சுரர்நா யகனே. (26)

பல்லா யிரவண் டபகைத்தொகையுந்
நில்லா வுயிர்வா ரியுநிற் புறுமா
வல்லாய் செயவென் மனமா யைவழிச்
செல்லா தரியே செயனிற் கரிதோ. (27)

அரியென் றயனென் றரனென் றுவிரிந்
துரனென் றியமுத் தொழிலோ புரிவாய்
திரிகின் றமனந் திரியா துனடி
வரைநின் றிடவைத் தருண்மா யவனே. (28)

ககவா கனனே கருணா கரனே
சகமோ கனனே சலசக் கணனே
யகமே நுழையா தடையைம் புலனைச்
சுகமே பெறநிற் சுழல்வித் தருளே. (29)

பழிதுன் றியபா வவுடம் பையெனக்
கிழிவென் றுணர்வா யியைவித் தனையே
சுழிதுன் றுகடற் றுயில்தொல் சுரனே
விழிதுன் றருள்பெய் தினிமிட் குவையே. (30)

முரணே ந் தியவெவ் வினையே முயறற்
கரணே ந் தியவச் செயலென் னதுவோ
கரணே ந் திரியக் கண நா யகனீ
சரணே ந் தியெனைப் புரிசக் கிரியே. (31)

சென்னிப் புடைகுட் டியசீ ரொருவன்
மன்னிப் புடைநின் றுமறுத் தயலா
னென்னப் புரிதன் மையின்மா லெவையுந்
துன்னிச் செயல்சுட் டறநிற் றலுமே. (32)

தீரா தினிநின் செயலென் னும்வழக்
கேரார் மறையெத் தனைசான் றுளவால்
வாரா யெனின்வந் தனையென் றுவிடே
னேராய் வெளிநின் றருணீர் வணனே. (33)

நிரையாய் நிரையா யர்மனைத் தயிர்பாற்
பிரையாய் பிரையாய் நுகர்பெற் றியவென்
னுரையா யுரையா யுயர்வேங் கடமென்
வரையாய் வரையாய் பிழைநன் மைகளே. (34)

அங்கங் கையனே யறவா ழியனே
சங்கங் கையனே சலமே புரியா
வங்கங் கையனே யெனலா னென்மனந்
தங்கங் கையனே சரணு ரணனே. (35)

வாவா திருமான் மகிழ்வுற் றெனையுங்
காவா விடினென் கருணைக் கதியே
நாவாய் நினவா யிரநா மமுமே
யோவா துரைசெய் கெனவுய்த் தருளே. (36)

கொன்னைக் குணனில் கொடியே னெனினு
நின்னைச் சரணென் றதுநிச் சயமால்
பின்னைப் பிழையாய் தரல்பெற் றியதோ
வென்னைத் தெருள்விப் பதினென் னிசையே. (37)

பொன்னைப் பொருளைப் பொழிகென் றனனோ
பின்னைப் பெறுபே றருள்கென் றனனோ
வென்னைத் தெரிவித் தருளென் றதலா
லன்னைக் குயர்தண் ணளியா ழியனே. (38)

கன்னின் றுவெளிப் படுவாய் கனகற்
கென்னின் றுவெளிப் படலா யிதெனே
பொன்னின் றவுரத் தொளிர்பூ ரணனே
பின்னின் றுமுன்னின் றுயர்பெற் றியனே. (39)

தேனு ரமுதே தெருள்செஞ் சுடரே
நானு ரெனையிங் ஙனமா னலிதற்
கேனு புரையெய் தியதெவ் வெவையுந்
தானு விரிதற் பரனீ யலையோ. (40)

குன்றைக் குடைகொண் டுதடுத் துமழை
துன்றத் தொறுவின் குழுவா யர்குழா
மன்றப் புரவுற் றருண்மா யவனே
யென்றைக் கினியென் முனெதிர்ப் படலே. (41)

காட்டுக் கரிகூ முன்வருங் கருணைத்
தேட்டுக் குயர்முத் தொழில்செய் யும்விளை
யாட்டுக் குடையா யருளின் றயர்வேன்
பாட்டுக் குடையாய் பரிவென் றுறலே. (42)

சங்கோ சுடரா ழிசதுர்ப் புயமு
மங்கா மணிமா முடிவான் கருணை
பொங்கா வழியும் விழிபூங் கழலு
மெங்கோ வரவென் றெதிர்காண் பதுவே. (43)

கற்பா வைகழற் பணியா முனமே
கற்பா வையெனக் கனிவாய் மலரும்
பொற்பா வியவா யெனபுன் கவியே
பொற்பா வியவா யுடைபுங் கவனே. (44)

வெம்மா யையின்வெந் திறலுற் றினைதற்
கெம்மா வினைமா லறியா துசெய்தேன்
பெம்மா னடியார் பரிவிற் பிணியுண்
டம்மா வினைகின் றனையா தலினே. (45)

எய்யா விரிமா யையெனைச் செயிடர்க்
கையா முறையென் றனனஞ் சலென
யுய்யா தொழிவே னெனினுன் னருளே
மெய்யா யினிவாழ் திரிவிக் ரமனே. (46)

நீதிக் குரியே னெனநின் றரியே
நீதிக் குரியே னெனுமா நிரையப்
பூதிக் குரியேன் புரைதீர்த் துன்னனு
பூதிக் குரியே னெனுமா புரியே. (47)

தூணென் றதோர்சுட் டினுமுற் றபிரான்
காணென் றடியார் கழறப் படுவான்
நாணென் றுமிலா னயனுற் றுணரான்
வீணென் றுவிலங் கினையோ விபுவே. (48)

விண்ணு டுறைவாய் விரிவாய் குவிவாய்
மண்ணு டுறைவாய் மறைவாய் மறையா
தெண்ணு டுறைவா யெழில்வேங் கடவா
கண்ணு டுறைவாய் கரைகாண் கலனே. (49)

நானேம் பியநன் மனனேம் புலனே
தானே பகையா யினதன் மையினு
லேனே பகையா யிடர்செய் குநரைப்
போய்நோ தலினிப் புருடோத் தமனே. (50)

இல்லா மையெனும் படுபா வியிடத்
தெல்லாம் விலைசெய் துடலோம் பினனு
ணல்லா தணிமா னவருங் கலனே
செல்லா தினிவிற் பதுசீ தரனே. (51)

நின்னைப் புரிநின் மகமா யையினுன்
மன்னித் தினநெஞ் சின்மறந் தனன்யா
னென்னைத் தயையின் றிமறந் தனைநீ
பின்னைக் கொழுநா பிழையென் பிழையே. (52)

தாயின் முலையுண் பதுதப் பிவெரூஉம்
பேயின் முலையுண் டபெரும் பிழையே
நாயின் னிலையிற் கடைநா னுமுனைச்
சேயின் னிலைதப் பியசீ ரரியே. (53)

குன்றே குடைகொள் சுரனைம் பொறிவாய்ச்
சென்றே சிறியேன் பிழைசெய் ததுநெஞ்
சொன்றே பலகோ டிகளோய் வதுதா
னென்றே நினையன் றெதிர்கொள் வதுவே. (54)

வேலிட் டகைகா லடவீழ்ந் துகிளே
மேலிட் டழலா முன்விரைந் துனரு
ளாலிட் டபிடே கமுடிக் கணியாக்
காலிட் டெனையாள் கருமா முகிலே. (55)

நின்னைத் தொழநேர்ந் துழிமா யைநிறீஇக்
கொன்னைத் தொழில்செய் கைகுறித் திலையே
லென்னித் தகையா ரொடுசொல் வதினிப்
பின்னைக் கொழுநா பிழையெண் ணுவதோ. (56)

மறையோ வருண்மால் வழிவாய் விழியுங்
குறையோ கதிர் கோடியுமா முடியுந்
துறையோ வளையா ழிதுலங் குகையுந்
நிறையோ கழலுந் தொழநேர் வதுவோ. (57)

அளிதுற் றுகொடிக் கயமா தியவற்
றுளமற் றுலேவாய் மெழுகா யயமாய்த்
துளவத் தொடையாய் தொலைநா ளளவு
மிளகிச் செறிவுற் றதுமென் னளவோ. (58)

பிறவிக் குருடற் கொடுபேர்ந் தடவி
யுறவிட் டகல்வா ரினுயா வுலகிற்
செறவிட் டெனைநீ திருவேங் கடவா
புறமுற் றெனபுன் கணுவந் தனையோ. (59)

யாங்குற் றனையெம் பெருமா னெனைநீ
யீங்கிட் டுலகென் னிருளா ரடவி
வேங்கைத் திரளா திவிடைத் தெழுமே
பாங்குற் றருளாய் பரிபூ ரணனே. (60)

எல்லா முனைநம் பியிருந் தனனே
சொல்லா தொருவார்த் தைதுறத் தனைமால்
பொல்லா வினையென் படுபுன் கணெலாம்
நல்லா யெவனுக் கிநகைத் துறலே. (61)

யாண்டுற் றுமறைந் தெனலக் கணெலாங்
காண்டற் குவெளிப் படலாய் கவல்வேன்
தேண்டுற் றபுலம் பல்செவிப் புகநெஞ்
சீண்டுற் றிளகா யரியின் னருளே. (62)

பெற்றார் பிறர்போ லியர்பே ணலரே
லுற்றார் மகவிற் குளரோ வுலகிற்
கற்றா வினிரங் கியெனைக் கைகொடாப்
பற்றா யெனின்மா லிதுவன் பழியே. (63)

சுழியைப் புனல்சூழ் திருவேங் கடவா
வழியைக் குறிவைத் திலைகோ லுதவாய்
விழியைத் திறவா யெனைவிட் டகல்வெம்
பழியைச் சுமவா துபல்லாண் டுறலே. (64)

காணே னுனையோர் கனவின் புடையுந்
நாணே னுடல்வாழ் வினைநா ரணநார்
பூணேன் புவிநோ தருமோர் பொறையா
வீணே யுளனென் விளிகின் றிலனே. (65)

சாவே நலமென் றிடலுஞ் சளமே
யாவா வெனவேல் கொடுகா லடுமே
தேவா திருவேங் கடவா செயலென்
காவா விடினேர் கதிகாண் கிலனே. (66)

வீடக் கடவே னுயிர்வீட் டியுனைக்
கூடக் கடவே னெனில்கூ றுறுதி
நாடக் கடமா முனநண் ணியிசை
பாடக் கதிதந் தபரம் பரனே. (67)

எந்தாய் மயல்கொண் டவெனக் குனரு
ளந்தோ மருந்தா தலறிந் தனையே
நொந்தே கெடலா முனநோக் கிவிழி
வந்தே யெதிர்நின் றருண்மா யவனே. (68)

விட்டே னினதன் பரைவே சியர்பாற்
பட்டேன் கொலையா திபரிந் துபுரிந்
திட்டே னினியென் செயுமோ நமனு
கெட்டேன் முறையோ முறைகே சவனே. (69)

எல்லாம் வலவா வெளியேன் புரியும்
பொல்லாங் கெவையும் பொறைகூர்ந் திலையேல்
வில்லாய் திருவேங் கடவெற் பனென
வல்லார் நரகிற் கிரையா குவனே. (70)

நீதா னினியென் செயலே நெடுநாட்
டீதா யினயா வையினுஞ் செறிவித்
தோதா வனுருற் றுழல்வித் தியிதின்
மீதா நரகத் தனுர்விண் டுரையே. (71)

என்றீ வினையெண் ணிலவீ றிலவே
தென்றே வவனே தருமன் செறலா
னென்றே நரகோ துறுபூ தியவே
நின்றே செறநேர் குவைநீ யரியே. (72)

என்னிற் பிழையா வரிராக் கதரிற்
றுன்னிப் புரிவுற் றனர் சொல் லரியே
மன்னிப் பொருதே வரைதற் கெனினும்
முன்னிற் ககிலாய் முடியா மைகொலோ. (73)

யானோ விடலே னினையாங் குறினும்
மேனோ வெனையாண் டதுசொல் லெதிர்வந்
தானோ நினதன் படியார் குழுவின்
மீநோ வெனையுய்த் தவண்விட் டுணுவே. (74)

குன்றன் றுகுடைக் கொள்குடத் தலைவா
வென்றென் றுனையாங் கணுமியா னுணர்நீ
ரின்றன் றினியன் றெனின்யான் செய்துதி
தன்றென் றுகொளற் கருணை ரணனே. (75)

துங்கக் கனகா சுரன்மார் பகழாப்
பொங்கக் குருதிப் புனலுண் டுகுடர்
தங்கக் களமாலை தரித் தநர
சிங்கப் பெருமா னருள்செய் குவையோ. (76)

தாய்மா மனுயிர்த் தயையா துமிலா
தேமாய் தரவுண் டிறுமாந் ததலாற்
பேய்மா முலையோ டுயிருண் டபிரா
னீமா வினையேற் கருணேர் குவையோ. (77)

செய்யிற் கடைமோர் தயிர்பால் திருடி
நெய்யிற் கையிடத் துணிநீ லனென
மெய்யிற் கடைவீ திதொறுந் திருமா
லுய்யக் கொளலா யெனினோ துவனே. (78)

தெருடா வியவா லயதே வர்தொழும்
புருடா புனைபூந் துகிலோ திருடுந்
திருடா திருவேங் கடவா சினவா
தருடா வெனையா ளலர்தூற் றலனே. (79)

ககனத் தருவைக் காணிக் கையெனப்
புகவைத் தெவனோ புருடோத் தமனி
பகர்சத் தியபா மைபதம் பணிவா
யகம்வைத் தெனையா ளலர்தூற் றலனே. (80)

மட்டுண் டகுழற் றிருமார் பினனே
திட்டுண் டுமிடைச் சிகையா லுரலிற்
கட்டுண் டடியுண் டனைகள் வனென
வொட்டுண் டலர்தூற் றலனோம் புகவே. (81)

தீரா வினைதீர்த் தெனையுந் திருக்கண்
பாராய் பணிரா தைபதம் பணியுஞ்
சாரா ததிபா லளைதாந் திருடுஞ்
சோரா திருமா லலர்தூற் றலனே. (82)

வாழ்நான் சிலவா மதியுஞ் சிறுகச்
சூழ்நோய் பெருகத் துயர்வைத் ததலாற்
போழ்வாள் விழியார் மயலிற் புகவும்
வீழ்நாள் படவும் விதியோ வரியே. (83)

கனமொன் றுலகேழ் கணமே விவரு
மனமென் றெருரூ பகவா கனமே
யினமொன் றுகொளீ குவனெம் பெருமான்
சினமொன் றசுரர்ச் செறவே கியதே. (84)

பாழா மென்மனங் குடிவா பரிவின்
வாழா யிலைகூ லியுமா யபயன்
சூழாய் சுசிசெய் துதுலங் கிடநீ
வீழா யிருளா துவிளக் கிடலே. (85)

மலையா நிலையா கவதிந் தனையே
யுலையா வளநின் னடியா ரொடுநீ
யிலையா விலவெம் பெருமா னென்மனத்
தலையாய் குடியே றுகவச் சுதனே. (86)

கடலா லிலைகண் டுயில்கார் வணநின்
னுடல்கோள் குணனெப் பதுவோ வுயவே
யிடையோர் வெளியின் றிருளா மென்மனம்
படையோ கொளவா பதுமத் தணையே. (87)

சினமே கொடிமால் செறுதீப் பணியின்
முனமேய்த் தலைமுண் மணிதா ணலியா
நனிமேய்ப் பண நட் டமுமிட் டனையென்
மனமே விநடித் திடின்மா நயமே. (88)

என்னப் பனையெம் பெருமா னையெழிற்
பொன்னைத் திருமார் பணிபுங் கவனைத்
துன்னப் பெறினெஞ் சுசுகஞ் சுகமா
மன்னைத் திருவேங் கடவா ணனையே. (89)

எண்ணொன் றிலரிவ் வுலகாண் டிலரேன்
மண்ணொன் றியவாழ் வதுவுஞ் சதமோ
பெண்ணொன் றியபெட் புறின்மூப் பிழிவே
யுண்ணின் றுணர்மால் சரேணே மனமே. (90)

மையோ விழியார் வலையிற் படுவாய்
பொய்யோ புலையோ புகலப் புகுவாய்
கையோ திகழா ழியனைக் கருதா
யையோ நமன்வந் தடுமே மனமே. (91)

அரியென் றுதொடங் கினவ்வா ரணமே
கரியென் றவனைக் கருதாய் கருதிப்
பரியென் றும்விடா திபதம் பெறுவாய்
பெரிதன் றிதுபே சினிலக் குளமே. (92)

கையோ கழலோ கதிர்மா முடியோ
மெய்யோ விடையோ விழியோ செவியோ
பொய்யோ பிறவும் புகலெண் ணிலவே
யையோ தெருள்வேங் கடவற் ககமே. (93)

கற்றுப் பயனென் கடைகெட் டழிவாய்
தெற்றுத் திருமா லடிசேர்ந் திலையே
வெற்றுப் பதரே விளையா நிலமே
யெற்றுக் குளையீங் கிறவாய் மனமே. (94)

ஓடா திபுலப் பகையோ டுறவிற்
கூடா திகுணக் கடல்கோ வரிதாள்
வீடா திநல்வேங் கடவெற் பினையும்
வாடா திருவா ழியவா மனமே. (95)

புரிவா யறமே புகல்வாய் மையையே
யரிவாய் வினைவே ரறவைம் புலனைக்
கரிவாய் நுகரும் கனியா வெரியப்
பரிவா யரிதாள் பணிவாய் மனமே. (96)

உலைவா யுலைவாய் மெழுகா வுருகி
மலைவாய் மலைவாய் நிலைமால் சரணே
யலைவா யலைவாய் திரணத் தருளார்
தலைவாய் தலைவாய் தலைவிட் டகமே. (97)

சொன்னே னிதுநன் மதிதொன் மறைகண்
முன்னே முதலின் முதலே முறையென்
றென்னே யுருகும் மெழில்வேங் கடவன்
பொன்னேய் கழலே புரிவாய் மனமே. (98)

பொல்லா தனவைம் புனலென் றுணராய்
அல்லோ பகலோ வடரா விளைவாய்
கொல்லோ தொழுநெஞ் சுகொடுப் பன்விடை
நல்லோர் தொழும்வேங் கடநா தனையே. (99)

வாரா வழுவை வரினேர் வனிதை
சீரார் தரநின் றதிறத் தினின்மே
யாரா வடவேங் கடவா ரமுதை
நேரா நுகரை வரினீ மனமே. (100)

மனமே புகல்வேன் வழிகே ளுலகிற்
றினமே சுழலத் திறன்விட் டடியா
ரினமே புரிவேங் கடவெற் பினர்தாள்
வனமே யெனநீங் கலைவா ழியவே. (101)

கண்ணே புகல்வேன் கதிகே ளுலகத்
தெண்ணே விடுவா யிலையே கெடுவாய்
விண்ணே தொடுவேங் கடவெற் பினனை
யுண்ணேர்ந் தவணில் லுபதே சமிதே. (102)

காதே புகல்வேன் கதிகே ளுலகத்
தேதா வுறுமந் நிலைவிட் டெழில்சேர்
மேதா வியர்வேங் கடவற் புகழும்
போதா நுபவப் புடைசூழ்ந் துயலே. (103)

நாவே புகல்வே னலனுர் கதிகேள்
தேவே சனைவேங் கடதே சிகனைப்
பாவே புனைபோற் றுதிபேர் பகர்தி
சாவே தலைவந் திடினுந் தகையே. (104)

மூக்கே புகல்வேன் முறைகே ளுலகப்
போக்கே விடுவேங் கடமால் புனையு
மாக்கேழ் துளவின் மணமே புரிவாய்
நீக்கே லடியார் யுனைநீ ரவுமே. (105)

மெய்யே புகல்வேன் விதிகே ளுலகிற்
பொய்யே கிடையூ றுகளே புரியேல்
மெய்யே திருவேங் கடவெற் பினர்தா
ளையே யணையா யணையாய் நலமே. (106)

தலையே புகல்வேன் சரிகே ளுலகிற்
புலையே புரிமங் கையர்தாள் புனையந்
நிலையே யினிநா ணலைவீழ்த் தெழுநீர்
மலையே நிலைமா தவர்தாள் புனையே. (107)

கைகாள் புகல்வேன் கதிகேண் மினினிப்
பைவா ளரவின் பணநட் டமிடும்
மெய்வாண் மணிவண் ணனைவேங் கடவெற்
பெய்தா மலர்சூ டியிதஞ் செய்மினே. (108)

கால்காள் புகல்வேன் கதிகேண் மினினிச்
சேல்கால் விழியா ரொடுசெல் வர்கள்பின்
ஞேல்கா லுதிரத் தொடுசூ ழலிரன்
பால்வேங் கடவெற் பதுசூழ் தரலே. (109)

கற்ருர் கல்லார் கடுவைம் புலனைச்
செற்ருர் செயலார் செயுமா தவநீ
டுற்ரு குறலா ருவணத் திறைதாள்
பெற்ருர் பெறலார் பிறவா நெறியே. (110)

ஒருவேங் கடனென் றுறுதிக் கொடுகால்
வெருவேங் கடன்மே தினிவிண் புகினும்
பொருவேங் கடமா புகழ்பூ ரணனுந்
திருவேங் கடவெற் பினர்சே வடியே. (111)

## வெண்பா.

இயற்றமி ழாசா னிராமா நுசனன்
னயத்தமிழின் சொல்லாய்ந்து நாவாற் —குயிற்றியே
வீறுபுகழ் வேங்கடவர் மேற்புனைந்த மாலைபத்து
நூறுமொரு கோவையென நோக்கு.

ஸ்ரீ:

# திருவேங்கடவனுபூதி.

## அரும்பதவுரை.

### பாயிரம்.

பாயிரம் - முகவுரை, வரலாறு.

(1) திரு - இலக்குமி. ''திருவாரணங்குமணமகன்'' (மறை - தி. 1); திருவேங்கடம் - புரந்தரன் என்னும் வேதியன் குமரனாகிய மாதவன்தான், ஆசாரம் குறைந்து நீசப் பெண்ணினை மணந்து களவு மேற்கொண்டு வாழ்ந்து நீசப்பெண் தன்னை விட்டுத் துரத்த மனம்குன்றி ஸ்ரீநிவாஸப் பெருமாள் எழுந்தருளி யிருக்கும் திருமலை யடைந்து அதின்மீது ஏறினன். இவன் பாப (கடம்) தேகம் சடசடவென்று நெருப்புப் போல் வேக இவன் சுடர் விடு பசும் பொன்போல் தோன்றினமையால் திருமலைக்கு (வேம், கடம்) வேங்கடம் எனப் பெயர் வந்தது. இது கருடாழ்வானால் பிரதிட்டிக்கப்பட்டது என்பர். சுவாமி திருநாமம் திருவேங் கடத்தான். தாயார் திருநாமம் அலர்மேல் மங்கைத்தாயார். ''தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த், தானே குறை முடிக்குந் தன்மையான்—றேனேய், திருவேங்கடந் தொழுதேந் தீய விபூ திக்குண், மருவேங் கடந்தனெமிவ் வாழ்வு.'' (நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி. 96); மாலை - ஒழுக்கம், வரிசை; பரிவு - அன்பு. ''பாகனைய சொல்லியொடு தம்பி பரிவிற் பின்போக'' (இராமா. அகத். 56); குருகூர் - ''வளந் தழைக்க வுண்டாலென் வாச மணந்தாலென், றெளிந்த கலை கற்றாலென் சீசீ - குளிர்ந்த பொழிற், றண்குருகூர் வாவிச் சடகோப னாரெங்கள், வண்குருகூ ரென்னாத வாய்.'' (நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி. 49). ஒரு கால் பிரமன் எங்குத் தவஞ் செய்வது? என்று சிந்தை கொண் டிருக்கையில், 'க - பிரமனே!, குரு - (இங்குத் தவஞ்) செய்' என்று இத் தலத்தைச் சுட்டி ஆகாயவாணி மொழிந்ததனால் இதற்கு 'குருகாபுரி' என்று பெயர் வந்தது என்பர். இத்தலம், நம்மாழ்வார் திருவவதரித்த தலமாதல் பற்றி 'ஆழ்வார் திருநகரி' என்று பெயர் பெறும்; சடகோபர் - நம்மாழ்வார்.

(2) மின் - ஒளி ; தேசிகர் - குருமார் ''பற்றற்றவன் கொடுக்கும் பண்டமனைத்தினையும் - பற்றுதலுந் தேசிகர்க்குப் பாங்கு'' ; கொந்து - பூங்கொத்து ; குழைதல் - வாடல்.

(3) பூத்தாள் - சிருட்டித்தாள். ''போதுறை கடவுண் மீட்டுலகம் பூத்தகை'' (கூர்மபு. தேவி. 1) ; புரவு - அரசு. கரவு - ஒளித்தல், களவு, கொடாமை.

(4) சுரர் - தேவர் ; முனிவர் - மநநசீலர் ; சரணம் - திருவடி.

(5) சென்னி - தலை ; திருமால் - விட்டுணு. ''புல்லாணித் திருமான் முன்னே'' (அரிச்சபு. பாயிர. 14) ; மரு - வாசனை ; புனைதல் - அலங்கரித்தல்.

(6) வணர் - வளைவு, நெறிப்பு ; குணவாரிதி - குணக்கடல் ; வேத்திரம் - பிரம்பு ; தொக - கூட ; சேனையர்கோன் - பரமபதத்திலுள்ள நித்திய முக்தர்களின் திரளுக்கும் மற்ற வுலகங்களிலுள்ள திருமாலடியார் கட்கும் தலைவராதலாற் சேனை முதலியார் என்றும், விஷ்வக்ஸேநர் என்றும், சேனைத் தலைவர் என்றும் சொல்லப் பெறுபவர். ''ஆளி லமர ரரங்கேசர் சேவைக் கணுகுந்தொறும், கோளில் திரளை விலக்கும் பிரம்பின் கொனைபடலால், தோளிலடித் தழும்புண் டச்சுரர்க்கு'' என்றபடி திரள் விலக்குதற்பொருட்டும், எம்பெருமானது ஆணையைத்தான் கொண்டு நடத்துதற்கு அறிகுறியாகவும் இவர்கையிலே பொற்செங்கோலேந்தி நிற்பர். குரு பரம்பரையில் எம்பெருமான் பிராட்டிகட்குப் பின்னே நம்மாழ் வார்க்கு முன்னே விளங்கும் பிரதான ஆசாரியர் இவர் ; வைகுந்தம் - ஸ்ரீவைகுண்டம். எம்பெருமானது ஐவகை நிலைகளுள் பரத்துவ நிலை விளங்குந் தானம் இது. வைகுந்தம் - வைகுண்டம் என்ற வட சொல்லின் திரிபு. தடையென்னும் பொருளுடைய 'குடி' என்னும் வட மொழித் தாதுவினடியாப் பிறந்து 'வி' என்னும் எதிர்மறை யுபசர்க்கம் பெற்ற 'விகுண்டா' என்ற பதம் ஞான சக்தியாதிகளில் தடையில்லாத நித்திய சூரிகளைக் குறிக்கும். அவர்கள் வாழ்கின்ற தானம் - வைகுண்டம். இனி, ஞானசக்தியாதிகளில் தடையில்லாத எம் பெருமானது தானம் என்றும் பொருள் கூறுவர் ஆன்றோர்.

இன்னும், இச்சொல்லுக்கு, ஒருகாலத்தில், திருமால் தன்னைப் புதல்வனாகப் பெற விரும்பித் தன்னைக் குறித்துத் தவஞ் செய்த சுப்பிரமுனி மனைவியான விகுண்டை யென்பவளிடத்தில் ஒரு குமாரனாக அவதரித்ததனால், அப்பெருமானுக்கு ' வைகுண்டன் ' என்று ஒரு திருநாமம். அப்பெயர் தானே அவளது வேண்டுகோளின்படி அவனது உலகத்துக்கும் பெயராக இட்டு வழங்கப் பெற்றது என்று கூறப்பெறுவதும் காண்க. எல்லாவற்றிற்கும் கீழிருந்துகொண்டு உலகங்களையெல்லாம் ஆதிகூர்மம் தாங்குகின்றது. அவற்றையடுத்து அதலம் முதலிய கீழேழு உலகங்கள் இருக்கின்றன. அவற்றிற்குமேல் அஷ்டகுலாசலங்களோடுங் கூடிய ஜம்பூத்வீபம் முதலிய நவத்வீபங்களைக்கொண்ட பூமி பெரும் புறக்கடலினாலும் சக்ரவாள மலையினாலும் சூழப்பட்டதாயிருக்கின்றது. இதற்குமேல் சூரியமண்டலமும் அப்பால் புவர்லோகம் முதல் ஸத்யலோகம் ஈறாகவுள்ள லோகங்களும் இருக்கின்றன. இவ்விடத்தோடு ப்ரக்ருதிமண்டலம் முடிந்திடுதலால் அந்தகாரமயமான வெளியொன்று அங்கு இருக்கின்றது. அப்பால், தேஜோ மயமாயும் ஆனந்த மயமாயும் உள்ள திருமாலின் ஸ்ரீ வைகுண்டலோகம் இருக்கின்றது. இம்முறையே உலகம் அமைந்திருப்பது என்பதை ஸ்ரீ விஷ்ணுபுராணம் முதலிய நூல்களிற் காணலாம்.

(7) நா - நாக்கு ; வீறு - உயர்ச்சி, சிறப்பு, பெருமை, பொலிவு, வெற்றி ; தாரான் - மார்பின் மாலையையுடையவன் ; அநுமான் - மாருதி, ஆஞ்சநேயர்.

(8) மஞ்சு - மேகம். '' மஞ்சலம் பிடியேறென்ன '' (அரிச்ச. சூழ். 29) ; மாயவன் - திருமால் ; பஞ்சாயுதம் - பாஞ்ச சந்நியம் என்னும் சங்கு, சுதரிசநம் என்னும் சக்கரம், சார்ங்கம் என்னும் வில், நாந்தகம் என்னும் வாள், கௌமோதகி என்னுந்தண்டு ; பணி - பாம்பு, ஆதிசேடன் ; உவணம் - கருடன் ; விரசை - வைகுண்ட லோகத்திலுள்ள ஆறு. இது தேவியார் கைவிரலில் தோன்றி விஷ்ணுமூர்த்தி வேண்ட வைகுண்டத்தில் வைக்கப் பட்டது (ஸ்காந்தம்). இதில் மூழ்கினோர் விஷ்ணு சாரூபம் அடைவர் ; துஞ்சுதல் - உறங்குதல் ; தொடை - மாலை.

(9) சேடன் - ஆதிசேஷன். "சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும், அணை யாம் திருமாற்கு அரவு." (முதல்திருவந்தாதி. 53) ; சின்னம் - அடையாளம்.

(10) புரி - வலம்புரி ; பொலம் - பொன் "பொலந்தொட்டில் சேர்த்தார்" (கந்தபு. புதல். 3) ; பரிவாரம் - சூழ்வோர், படை.

## நூல்.

(1) எல்லாநூற்கும் மங்கலமொழி முதலில் வகுத்துக் கூற வேண்டும் என்பது இலக்கணம் ஆதலால் "உயர்" என்று தொடங்கினர். திருவாய்மொழி "உயர்வறவுயர் நலம்" என்றே தொடங்கியுள்ளது காண்க. பாநு - சூரியன். "பாநுவுங் கடலிற் புக்கான்" (அரிச்ச. மயாந. 9) ; கால் - சக்கரம், நுனி; நய - விரும் பும் ; குருகூரர் - நம்மாழ்வார்; பரவுதல் - தோத்திரஞ் செய்தல் ; புன்மை - இழிவு ; வியவு - வேறுபாடு ; விண்ணவன் - பரமபத நாதன்.

(2) வல்லான் - வல்லவன், வன்மையையுடையவன் ; வரன் - பரமன் ; வாய்மொழி - வேதம் ; படர்தல் - பரவுதல் ; சுருதிக் கிறை - வேதநாயகன்.

(3) படி - பூமி ; அளந்தபடி - அளந்தவிதம், அளந்தவாறு, "குணங்கடந்த, போதக்கட லெங்கள் தென்குருகூர்ப் புனிதன் கவியோர், பாதத்தின் முன்செல்லுமே தொல்லைமூல ப்பரஞ் சுடரே" (சடகோபரந்தாதி. 1) என்பதை நோக்குக ; வேங்கட வீச்சுரனே - திருவேங்கட நாயகனே.

(4) நீர்மை - தன்மை, குணம் ; நலன் - நன்மை, மேம்பாடு.

(5) படர் - துன்பம் ; மாதவ - ஸ்ரீய: பதியே ; நாதா - எப் பொருட்கும் இறைவனே.

(6) மாகம் - பெரிய ஆகாசம் ; யோகு - தவம், உபாயம் ; நாகாசலனே - சேஷாசலாதிபதியே ; சரண் - புகல்.

(7) படல் - பொருந்துதல். ஒன்றுடனே தோய்தல் ; அலர் - புஷ்பம், பழிதூற்றுதல் ; அல் - இராத்திரி, இருட்டு.

(8) மாயை - பிரபஞ்சத்திற்குக் காரணமாயிருக்கின்ற மாயாதத்துவம் ; நொந்து - துன்பப்பட்டு ; நோக்கல் - காணல், காத்தல், தேடுதல் ; தேவகி - கண்ணன்ருய், இவளுடைய பிதா தேவகன். ''பொருவருங் கடவுட் கற்பின்றேவகிவயிற்றின்'' (கூர்ம. கண்ண. 7) ; மைந்தன் - மகன் ; மதுசூதனன் - மதுசூதன், விட்டுணு, மதுவென்னும் அசுரனை அழித்தவன் ''மன்ஞகி நின்ற மதுசூதன் வாயமுதம், பன்ஞளும் உண்கின்ருய், பாஞ்சசன்னியமே.'' (தையொருதிங்கட் பாமாலை. 7-5); வாமனன் - குறள்வடிவு கொண்டதிருமால், தசாவதாரத்தொன்று, குள்ளமான பிரமசாரி.

(9) வாகனன் - வாகனமாகவுடையவன் ; தெருள் - தெளிந்த அறிவு; புருடோத்தமன் - சிரேட்டன், திருமால், ''புருடோத்தமன் மணி மார்பமும் பிரிந்தே.'' (சேதுபு. சேதும. 26); ஆரணன் - வேதப்ரதிபாத்யவஸ்து.

(10) விட்டவர் - பகைவர் ; வேதை - துன்பம் ; துட்டம் - அடங்காமை ; துட்டன் - தீயன், தேள் ; துன்று - நெருங்கி, மிகுந்து ; எட்டக்கரன் - திருவஷ்டாக்ஷரப்ரதிபாத்ய தெய்வமே ; களைகட்டல் - களையெடுத்தல்.

(11) மறை - இரகசியம், மந்திரம், வேதம் ; முறை - நீதி ; முற்படல் - முற்படுதல், எதிர்ப்படுதல், முந்துதல் ; கறை - அழுக்கு.

(12) ஐம்பொறி - பஞ்ச இந்திரியங்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி ; ஈர்த்து - இழுத்து ; மட்டு - வாசனை ; குழல் - கூந்தல் ; திருமார்பினன் - அலர்மேல் மங்கையுறை மார்பன்.

(13) தொகை - கூட்டம் ; வீதி - தெரு, வழி ; விருதா - பயனின்மை.

(14) விதி - பிரமன், ஊழ் ; பயன் - பலன் ; தொறு - பசு.

(15) பொருவு - ஒப்பு ; நாயகன் - தலைவன்.

(16) அல் - இருட்டு ; ஒளி - பிரகாசம் ; தோடம் - குற்றம், பாவம் ; பரன் - உயர்வுடையோன்.

(17) திணி - திண்மையான, வலிதான ; சிறை - பந்தம் ; பணி - படத்தையுடைய பாம்பு ; தற்பு - தத்துவம், உண்மை ; சுரன் - தேவன்.

(18) வெறி - கலக்கம், அச்சம்.

(19) பூடணம் - ஆபரணம். " கன்னமணிந்திடுபூடண வர்க்கங்கண்டசரம்."

(20) சுரர்சுரனே - தேவாதிதேவனே ; தொல் - பழமை.

(21) சுருதித்தலை - மறைமுடி, உபநிடதம் ; கல் - மலை ; கார்வணன் - நீலமேகன்.

(22) மம - எனது ; ரிஷீகேசன் - இருடீகேசன், ஹ்ருஷீகேசன். இது, எம்பெருமானது துவாதச நாமங்களுள் ஒன்று, இந்திரியங்களை அடக்கியாள்பவன் என்று பொருள்படும். " இந்திரியங்களுக்குத் தலைவர் ஆத்மாவாக இந்திரியங்களை வசப்படுத்துகிறவர்; ஸூர்ய ரூபமாகவும் சந்திரரூபமாகவும் உலகத்தை மகிழ்விக்கும் கிரணங்களையுடையவர். ஐம்புலன்களையும் நடத்துகிறவர் ; ஸந்தோஷமும் ஸௌக்யமும் ஐச்வர்யமும் பொருந்தினவர் ; உத்ஸாஹமும் ஆனந்தமும் ஐச்வர்யமும் பொருந்தினவர்." "ஹ்ருஷீகாணிந்த்ரியாண்யாஹுஸ்தேஷாமிசோயதோபவாந், ஹ்ருஷீகேச்ஸ்ததோவிஷ்ணு : க்யாதோவேதேஷுகேசவ:– ஓ கேசவ ! ஹ்ருஷீகம் என்று இந்திரியங்களைச்சொல்லி அவைகட்குத் தேவரீரை ஈசன் என்பார்கள்; ஆனதுபற்றியே வேதங்களில் விஷ்ணுவென்கிற தேவரீர் ஹ்ருஷீகேசன் என்று பிரஸித்தியடைந்திருக்கிறீர்." இவ் வடமொழிப் பெயரின் மொழிபெயர்ப்பே "பொறிவாயில் ஐந்து அவித்தான்." (திருக்குறள். கடவுள் வாழ்த்து. 6) "மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளை வழியாகவுடைய ஐந்தாசைகளையும் ஒழித்தவன்."

(23) துண்ணிடுதல் - திடுக்கிடுதல் ; துணி - அறு, துண்டுசெய்ய, வெட்டு ; வெற்பு - மலை.

(24) பிறிவு - பிரிவு.

(25) ஆராவமுதே - தெவிட்டாத, பரமபோக்யமான, அமிருதம். "ஆராவமுதே! அடியேனுடலம் நின்பாலன்பாயே, நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே!" (திருவாய் மொழி 5-8-1); தீரா வினைநோய் சிதைவிப் பவனே-"தீராவினைகள் தீர என்னையாண்டாய்!" (திருவாய் மொழி 5-8-10); அறிவாரறிவே - "அறிவின்பயனே" (திருவாய் மொழி 5-8-6); பதுமம் - தாமரை - "அவன்ருட் செம்பதுமம்" (மரு. தி. 70).

(26) தோளாமணி - துளைக்காத இரத்தினம். "மாளாத வினையனைத்து மாள நாம்போய் வானேறி மலர்மகளா ரன்பு பூணுந், தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு தொழுது கந்து தோத்திரங்கள் பாடி யாடி." (தேசிகமாலை. பரமபதசோபாநம். 21).

(27) தொகை - எண்; வாரி - கடல்.

(28) அரியென்...புரிவாய் - "ஆக்குமா றயனுமுத லாக்கிய வுலகங், காக்குமாறு செங்கண்ணிறை கருணையங்கடலாம், வீக்குமாறரனுமவை வீந்த நாண் மீளப், பூக்குமாமுதலெவனவன் பொன்னடி போற்றி." (மகாபாரதம். தற்சிறப்புப்பாயிரம், 3.)

(29) மோகனன் - மயக்குகின்றவன்.

(30) துன்று - பொருந்திய, மிகுந்த.

(31) முரண் - வலிமை, பகைமை; கணம் - கூட்டம்; புரிசை - மதிள்.

(32) சென்னி-தலை; புடை-இடம், பக்கம்; துன்னல் - கிட்டல், செய்தல், வருதல்.

(33) ஏரார்மறை - பெருமை பொருந்திய வேதம். "ஏரார் சுருதி ஒளியால் இருள்நீக்கும், தாரா பதியனையார் தாம்." (தேசிகமாலை. அமிருதரஞ்சனி.); வாரா யெனின் வந்தனை - "வாரா வருவாய் வருமென் மாயா! மாயா மூர்த்தியாய்!" (திருவாய்மொழி 5-8-10), "வந்தாய் போலே வாராதாய் வாராதாய் போல் வருவானே!" (திருவாய் மொழி 6-10-9), "மாயையிது

வென்கொலோ வாராதே வரவல்லாய் '' (இராமாவதாரம், ஆரணிய காண்டம், விராதன் வதைப் படலம்), '' வருவாய் போல வாரா தாய் '' (இராமாவதாரம். 2 யுத்த காண்டம், பிரமாத்திரப் படலம்); நீர்வணன் - '' நீர்புரைவண்ணன் '' (திருவாய்மொழி. 1-8-11. '' ஆகஇத் திருவாய் மொழியில் சொல்லிற்றுயிற்று ஸர்வேச்வர னுடைய ஆர்ஜவ குணமாயிற்று. நீரோடொத்த ஸ்வபாவத்தை யுடையவனுடைய ஆர்ஜவ குணத்தையாயிற்று சொல்லிற்று. ஆர்ஜவ குணமாவது - ஸம்ஸாரிகள் விலங்கிப் போனது தனக்கு வழியாம்படி தான் செவ்வியனுகை. '' - ஈடு)

(34) நிரை - ஒழுங்கு, பசு, பசுக்கூட்டம், வரிசை ; பிரை - உறை '' பாலினிற் பிரைபோல '' (திருவிளை. நாக. 22); நுகர் - உண்ண ; வரை - மலை.

(35) அறவாழியனே - அறவன், தர்மஸ்வரூபி, '' அறவாழி யந்தணன். '' (திருக்குறள். கடவுள் வாழ்த்து, 8. 'அறவாழி' என் பதனைத் தருமசக்கரமாக்கி அதனையுடைய அந்தணனென் றுரைப் பாருமுளர் - பரிமேலழகருரை.), '' அறவனை ஆழிப்படை அந் தணனை. '' (திருவாய்மொழி 1-7-1).

(36) நினவாயிர நாமமுமே யோவாதுரை - ''ஆய்ந்துரைப்பன் ஆயிரம்பேர். '' (இரண்டாந் திருவந்தாதி, 73), '' மாதவன் பேர் சொல்லுவதே ஒத்தின் சுருக்கு'' (ஷை. 39)

(37) தெருள் - விவேகம்.

(38) தண்ணளி - கிருபை.

(39) கனகன் - பொன்னன், இரணியன் ; பொன் - இலக்குமி.

(40) புரை - குற்றம் ; தற்பரன் - தத்துவத்திலுயர்ந்தோன்; தற்பு - தத்துவம் ; உண்மை ; பரன் - உயர்வுடையோன், மேலோன்.

(41) துன்ற - மிகுந்த ; தொறு - தொழுவம் ; மன்ற - அறுதி யாக, வெளியாக, நிச்சயமாக ; புரவுற்று - காத்து ; குன்றை... ...மாயவனே—'' குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன், அன்று ஞாலம் அளந்தபிரான் பரன், சென்றுசேர் திருவேங்கடமாமலை.'' (திருவாய்மொழி 3-3-8), ''மேய்நிரை கீழ்புக மாபுரள சுனை,

வாய்நிறைநீர் பிளிறிச்சொரிய இன, ஆநிரை பாடி அங்கே யொடுங்க அப்பன், தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே.'' (திரு வாய்மொழி 7-4-10).

(42) கரி - யானை; கூமுன் - கூவுவதற்கு முன்; தேட்டு - சம்பாத்தியப் பொருள்; விளையாட்டுக்குடையாய் - ''அலகிலா விளையாட்டுடையார்'' (இராமாவதாரம். பாலகாண்டம். காப்பு.); பரிவு - சிநேகம்.

(43) வான் - பெருமை; கோ - ஸ்வாமி.

(44) பாவை - பெண்; பணிதல் - வணங்குதல் ''பாதபங்கயம் பணிந்தனன் பணிதலும்.'' (இராமா. மந்திர. 59.); புங்கவன் - சிரேட்டன்.

(45) பெம்மான் - பெருமான், பெருமையிற் சிறந்தோன். ''பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே.'' (தேவா.)

(46) திரிவிக்ரமன் - விட்டுணு. மூன்றடி கொண்டளந்து பராக் கிரமஞ் செய்தமையாற் பெற்றபெயர். ''வாமனவுருக்கொண்டு மாவலி பாலடைந்து உலகளந்து தமது தரிசனந் தந்த விஷ்ணு மூர்த்தியின் திருக்கோலம்.'' ''த்ரிவிக்ரம :-ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ர நாமத்தில் 533-ஆவது பெயர். மூன்றடிகளால் மூன்று உலகங்களை யும் வியாபித்தவர். த்ரி: என்கிற வேதத்தில் வியாபித்தவன். ''த்ரித்யேவம்த்ரயோவேதா: கீர்த்திதாமுநிஸத்தமை:, க்ரமஸே தாம்ஸ்ததா ஸர்வாந்த்ரிவிக்ரம இதிஸ்ம்ருத : - த்ரி: என்றால் மூன்று வேதங்கள் என முனிவர்கள் பேச்சு. அவர் மூன்றை யும் வியாபிக்கின்றமையால் உன்னை திரிவிக்கிரமன் என்கிறது.'' ''இவ்விதமான தமது சிறந்த மஹிமையினால் மூன்று வேதங்களை யும் வியாபித்திருப்பவர். 'மூன்று வேதங்களாலும் கோஷிக்கப் பட்ட மகிமை யுள்ளவர்' என்பது. 'த்ரி என்பது மூன்று வேதங் களென்று ரிஷிச்ரேஷ்டர்களால் கூறப்படுகின்றது. அவைக ளெல்லாவற்றிலும் வ்யாபித்திருப்பதனால், த்ரிவிக்ரமர் என்று சொல்லப்படுகிறீர்.' என்று சொல்லப்படுகிறது.'' ''திரிவிக் கிரமன் றிகழ்தீ நிறத்தன் றெளிவுடைவா, ளுருவிக் கரங்களி லீரிரண் டேந்தி வலக்கழுத்துஞ், செருவிக் கிரமத் தரக்கர்திக் குஞ் சிறந் தாளுமிறை, மருவிக் கரிகிரி மேல்வரந் தந்திடு மன்ன

வனே.'' (தேசிகமாலை. பன்னிருநாமம். 7) செந்தமிழ் நாட்டின் எல்லையாக வடவேங்கடம் தென்குமரிகளைக் குறிக்குமிடத்தில் இளங்கோவடிகள் '' நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும், தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு '' என்று கூறுவர் சிலப்பதிகாரத்தில். 'நெடியோன்' என்ற பதத்திற்கு நிலங்கடத்தற்கு நீண்ட திரிவிக்கிரமன் என்பது பொருளாய், அவ்வவதாரம் எடுத்த திருமாலைக் குறிப்பதாகும். இச்சொல், பெரியோன் என்ற பொருளிலும், ''முந்நீர் விழவி னெடியோன்'' (புறம் 9), ''நிலந்தரு திருவி னெடியோன்'' (மதுரைக்காஞ்சி) என்பன முதலாக நந்தமிழ் மொழியில் வழங்குவதுண்டு. ஆனால், தெய்வங்களைக் குறிக்குமிடத்தில், விசேஷணங்களும் முன் தொடர்ச்சிகளும் இல்லாமல், தனித்து நின்றே திரிவிக்கிரமனை திருமாலைக் குறிக்கும் சக்தியுடையது இப்பதம். ''நெடியோன் குறளுருவாகி,'' ''நெடியோன் மார்பி லாரம் போல'' எனவருதல் காண்க. இனி, '' நெடியோன் குன்றம் '' என்பது, தமிழகத்தின் தொன்று தொட்ட வடவெல்லையாய் உள்ள திருவேங்கடத்தைக் குறிப்பதாம். ஆகவே, திருவேங்கடமுடையானை 'நெடியோன்' என்பதனால் இளங்கோவடிகள் கூறினர் என்பது தெரியலாம். இவ்வாறே, 'செங்கணெடியோன்' என்று வேறிடத்தும் அவர் கூறுவர். இது, அத்திருமலையெம்பெருமானைத் திரிவிக்கிரமனைக் குறிக்கும் முன்னோர் வழக்கிற்குப் பெரிதும் ஒத்ததாகும். '' நெடியோனே வேங்கடவா '' (பெருமாள் திருமொழி 4-9) என்றார் கொன்னவிலும் கூர்வேற் குலசேகரப் பெருமானும். திருமலையைப் பற்றிய '' ஒழிவில் காலமெல்லாம் '' என்ற திருவாய்மொழி (3-3)யின் இறுதிப்பாசுரத்தில் (11) '' தாள்பரப்பிமண்தாவிய ஈசனை '' என்று நம்மாழ்வாரும் (குருகையில் வந்து கொழுப்படக்கிய குலபதி) பணித்தருளுவர். இவ்வாறு திரிவிக்கிரமனைத் திருவேங்கடமுடையானைப் பெரியோர் கூறி வருவதைப்பற்றித் திருவாய்மொழியீட்டில் (முப்பத்தாறுயிரப்படியில்) பூர்வாசிரியர்கள் பணித்துள்ளவை வருமாறு :— '' திருவேங்கடமுடை யானையன்றோ கவி பாடிற்று என்னில் ''கொண்டாய் குறளாய் நிலமீரடியாலே, விண்டோய் சிகரத் திருவேங்கடமேய, அண்டா '', '' மண்ணளந்த இணைத்

தாமரையடிகள்,'' ''உலகமளந்த பொன்னடியே யடைந்துய்ந்து''. என்று ஆழ்வார்கள் அருளிச் செய்யா நிற்பர்கள் ; எல்லாரையுந் திருவடிகளின் கீழே இட்டுக் கொள்ளுகைக்காக நிற்கிற நிலையா லும் வரையாதே கானமும் வானரமுமான இவற்றுக்கு முகங்கோடுத்துக் கொண்டு நிற்கிற நிலையாலும் திருவேங்கட முடையானை ஸ்ரீவாமனனைச் சொல்லக் கடவதிறே '' என்பது. இவ்வாறு, திரிவிக்கிரமனைத் திருவேங்கட முடையானைச் சங்ககால முதலாக ஆன்றோரெல்லாம் ஒப்பக் கூறி வரு வது, வேதவழக்கை அடியொற்றிக் கொண்டதொன்றாகும். '' அகில புவனங்களையும் தன் மூவடிகளின் கீழ் ஒடுக்கியவன் எவனோ அப்பெருமான் கிரியில் நிலைபெற்றருளுகிறான் '' என்ற கருத்தில், '' ம்ருகோநபீம: குசரோகிரிஷ்டா: யஸ்யோருஷுத் ரிஷு, விக்ரமணேஷு அதிக்ஷியந்தி புவநாநி விச்வா '' என வரும் வேதவசனம் இங்கு அறியத்தக்கது. திரிவிக்கிரமன் திருமலை யில் நித்யவாஸம் செய்வதைக்கூறும் இவ்வேதப்பொருளையே '' குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன், அன்றுஞாலம் அளந்த பிரான் பரன், சென்றுசேர் திருவேங்கடமாமலை'' (திருவாய்மொழி 3-3-8) என்று வேதந்தமிழ் செய்த குருகைப்பிரானும் அருளிச் செய்வாராயினர். அன்று ஞாலம் அளந்தபிரான் சென்று சேர்ந்த திருமலை என்று ஆழ்வார் அருளியது, இவ்வேதவாக்யங்கூறும் ஐதிகத்தையே குறிக்கொண்டது என்பது உய்த்து அறியத்தக்கது. இவ்வரிய செய்தியை உட்கொண்டே தூப்புல் வேதாந்த தேசிக னும், '' வேங்கடவெற் பெனவிளங்கும் வேத வெற்பே '' (தேசிக மாலை. அதிகார சங்கிரகம் 43) என்று திருமலையைக் குறியிட் டருளியதும் என்க. இனி, தமிழ் வழக்கெல்லாம் நன்கு அறிந்த உரையாளரான நச்சினார்க்கினியர் ' வடவேங்கடந்தென்குமரி ' என்ற தொல்காப்பியப் பாயிரவுரையில், '' நிலங்கடந்த நெடுமுடி யண்ணலை நோக்கி உலகந்தவஞ் செய்து வீடுபெற்றமலை '' என்ற தொடரால், திரிவிக்கிரமனாகவே திருவேங்கடமுடையானைக் கூறியதோடு, ' உலகந்தவஞ்செய்து வீடுபெற்றமலை ' அவ்வெற்பு என்ற செய்தியொன்றையுங்குறிப்பிட்டனர். இதனையே '' திரு வேங்கடம் நங்கட்குச், சமன்கொள் வீடு தருந்தடங்குன்றமே ''

(திருவாய்மொழி 3-3-7) என்று நம்மாழ்வார் பணித்தருளுதல் அறிந்து ஒப்பிடத்தக்கது. இதனால், ஒரு காலத்து இம்மலை வீடு அளித்த புராணவரலாறு பிரசித்தமாயிருந்த தென்பது வெளியாம். பிராட்டியைத் தேடிவரும்படி சுக்கிரீவ மகாராஜன் வானர வீரர்களை ஏவுமிடத்து, "கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரேனுங் கொடிய கொடுமை நீங்கி வீடுறுதிர்" என்றும், "வலங்கொள் நேமி மழைநிற வானவன், அலங்கு தாளிணை தாங்கிய அம்மலை, விலங்கும் வீடுறுகின்றன மெய்ந்நெறிப், புலங்கொள்வார்கட் கனையது பொய்க்குமோ" என்றும் கூறியதாகக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்ப நாட்டாழ்வானும் பாடுதல் மேற்கூறிய கருத்துக்குப் பெரிதும் இயைந்திருத்தல் காணலாம். இத்திரு மாமலை உயிர்களின் வினைத்தொடரை வேரறுப்பதென்பதை "திருவேங் கடமாமலை யொன்றுமே தொழ நம்வினை யோயுமே." (திருவாய் மொழி 3-3-8) என்று ஆழ்வார் பணித்தவாறே "அரவணைச் செல்வன் வாழு மந்தமிழ்நிலத்தி னெல்லைத், திருமலை கண்டுணர்ந் தோர் செறிவினைத் தொடரறுக்கும்" என வீர சைவரான துறை மங்கலம் சிவப்பிரகாசமுனிவரும் கூறுவர். இனி அருணகிரி நாதர் தம் திருப்புகழொன்றில், "உபசாந்த சித்த குருகுல பவ பாண்டவர்க்கு வரதன்மை யுருவோன் ப்ரஸித்தநெடியவன் ருஷீகேசன் உலகீன்ற பச்சை யுமையணன் வடவேங்கடத்தி லுறை பவன் உயர்சார்ங்க சக்ர கரதலன் மருகோனே." என்று இந்நெடியோன் குன்றத்தைப் புகழ்ந்திருத்தல் அறியத்தக்கது. இப்பாடல், திருமலைவிஷயமாகப் பெரியோரும் முன்னோருமான சுப்பிரமணிய பக்தர்கருத்து இன்னதென்பதைத் தெளிவாக்கவல்லது. நெடியோன் என்பது திரிவிக்கிரமனனதிருமாலுக்குப் பிரபலமான திருநாமம் என்பதை 'ப்ரஸித்த நெடியவன்' என்பதும், தமிழ்க் கெல்லையான வேங்கடமே தாம்பாடுவது என்பதை 'வடவேங்கடத் தில்' என்பதும், அவ்வேங்கடேசன் திருக்கரங்களில் திருவாழி திருச்சங்குகள் என்றும் இருந்தவை என்பதை 'உயர்சார்ங்கசக்ர கரதலன்' என்பதும் அழகாக விளங்குதல் காண்க. இவற்றால், நெடியோன் என்பது திருவேங்கடமுடையானுக்குத் திரிவிக்கிரம நிலைபற்றி முன்னோர் வழங்கிய திருநாமம் என்ப

தும், அவன் சென்று சேர் குன்றத்தின் சிறப்பும் மிகத் தெளிவாகின்றன.

(47) பூதி - செல்வம். "பூதியினைத்தான் கொடுக்கையாற் பூதியென்னும் பேரோதுவர்"

(48) தூண் - தம்பம்; பிரான் - தலைவன்; நாண் - இழி தொழில்களின் மனஞ் செல்லாமை; விலங்கினையோ - விலகினையோ; விபுவே - வியாபக பரிபூரணத்தன்மையனே.

(49) எண் - தொகை; எழில் - பிரகாசம், அழகு.

(50) ஓம்பி - பாதுகாத்து; புலன் - இந்திரியம்; நோதல் - துன்புறல், நொந்து சொலல்.

(51) படுபாவி - கொடும்பாவி (படு - மிகுதிக் குறிப்பு); சீதரன் - சிரீதரன், லக்ஷ்மியைத் திருமார்பில்தரிப்பவன், "அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா!" (திருவாய்மொழி 6-10-10)

"ஸ்ரீவத்ஸவக்ஷாச் ஸ்ரீவாஸச் ஸ்ரீபதிச் ஸ்ரீமதாம்வர :(64)
ஸ்ரீதச் ஸ்ரீசச் ஸ்ரீநிவாஸச் ஸ்ரீநிதிச் ஸ்ரீவிபாவந :,
ஸ்ரீதரச் ஸ்ரீகரச் ஶ்ரேயச் ஸ்ரீமாந் லோகத்ரயாச்ரய : (65)

(608) "ஸ்ரீவத்ஸவக்ஷா:-தம்மால் நியமிக்கப்படும் உலகம் அனைத்தையும் காட்டிலும் வைலக்ஷண்யத்தைத் தோற்றுவிப்பதாகிய திருமகள் கணவர் என்னும் சிறப்புக்கு அடையாளமான ஸ்ரீவத்ஸம் என்னும் மச்சத்தைத் திருமார்பில் உடையவர். (609) ஸ்ரீவாஸ:- திருமகள் எக்காலமும் யதேச்சையாக விளையாடுவதற்கு உரிய கற்பகவனமாயிருப்பவர். 'நாலு புஜங்களே கற்பகமரங்கள் என்பது' கருத்து. (610) ஸ்ரீபதி:-ஸ்ரீதேவி தனக்குத் தகுந்த கணவர் என்று எப்பொழுதும் ஸ்வயம் வரம் செய்யும் புருஷராயிருப்பவர். (611) ஸ்ரீமதாம் வர:-ஐச்வர்ய லக்ஷ்மி பொருந்தின ப்ரம்மாதி தேவர்கள் எல்லாரினும் சிறந்தவர். 'மைத்ரேயரே! லக்ஷ்மி ஸ்நானம் செய்தவளாய் வெள்ளைமாலைகளையும் வெள்ளை ஆடைகளையும் தரித்து அணிகலங்களையும் அணியப்பெற்று எல்லாத் தேவர்களும் பார்த்திருக்கையில் திருமாலின் திருமார்பைச் சேர்ந்

தாள். திருமாலின் திருமார்பிலிருந்த அந்தத் திருமகளினுல் கடாக்ஷிக்கப்பட்ட தேவர்கள் அப்போதே சிறந்த ஸௌக்யத்தை அடைந்தனர்' என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்திற் சொல்லியபடி 'மஹாலக்ஷ்மியின் பூர்ணகடாக்ஷம் பெற்றவர் பகவான்; அவர் கடாக்ஷலேசம் பெற்றவர்கள் மற்றத் தேவர்கள்' என்பது. (612) ஸ்ரீத:-எப்போதும் புதிதாகத் தோன்றும் நிஷ்காரணமான ப்ரேம ரஸமான சிறப்பைத் திருமகளுக்கு அளிப்பவர். இவரைச் சார்ந்ததினுல், அவளுக்கு ஸ்ரீ என்று பெயர் வந்திருப்பதினுல் அந்தத் திருமகளுக்கும் பிராணுதாரமாயிருப்பவர் என்பது. 'ராகவா! நானும் பிராட்டியும் உம்மை விட்டுப் பிரிந்தால் ஜலத்திலிருந்து எடுக்கப்பட்ட மத்ஸ்யங்கள் போல நிமிஷமும் பிழைத்திரோம்' என்பது ஸ்ரீராமாயணத்தில் லக்ஷ்மணர்வாக்யம். (613) ஸ்ரீச:-பிராட்டிக்கும் அவ்வளவு பெருமை வந்ததற்குக் கரரணமாயிருப்பவர். 'திருவுக்கும் திரு' என்பது. எல்லா நிலைமைகளிலும் பிராட்டியைத்தமக்கு ஈச்வரியாக வைத்திருப்பவர். 'லக்ஷ்மிதிவ்யாத்ம ஸ்வரூபத்தில் திருக்கல்யாண குண ரூபமாகவும் திவ்யமங்கள விக்ரஹத்தில் திவ்ய ஸ்திரீ ரூபமாகவும் தமக்கு ஆதாரமான ஸ்வரூபமாகவும் அடிமையாகவும் எப்போதும் இருப்பவள்' என்று ஸ்ரீபாஞ்சராத்ரம் ஸநத் குமார ஸம்ஹிதையில் கூறப்படுகிறது. (614) ஸ்ரீநிவாஸ:–நந்தன வனத்திலுள்ள கொடிக்குக் கற்பக விருக்ஷம் போலப் பிராட்டிக்கு என்றும் சேர்ந்திருக்கும் கொழு கொம்பாக இருப்பவர். (615) ஸ்ரீநிதி:-ரத்நத்துக்குப் பெட்டி போலப் பிராட்டி தங்கு மிடமாயிருப்பவர். (616) ஸ்ரீவிபாவந:-அந்தப் பிராட்டியினுலேயே தமக்குப் புகழும் மகிமையும் உண்டாக்கப் பட்டிருப்பவர். 'பிராட்டியானவள் யாரைச் சேர்ந்தவளோ அந்தத் தேஜஸாகிய ராமபிரான் அளவிட முடியாதவர்.' என்பது ஸ்ரீராமாயணம் ஆரண்ய காண்டம். (617) ஸ்ரீதர:—மணிக்கு ஒளிபோலவும், மலருக்கு மணம் போலவும், மதிக்கு நிலவுபோலவும், அமுதத்துக்குச் சுவை போலவும், இயற்கையாகவுள்ள ஸம்பந்தத்தினுல் எப்போதும் லக்ஷ்மியைச் சேர்ந்திருப்பவர். 'யோக்யனு யிருப்பவன் கீர்த்தியை எப்படிவிட முடியாதோ அப்படித்தான் இந்தப் பிராட்டியைவிட முடியாது'

என்பது ஸ்ரீராமாயணம். (618) ஸ்ரீகர:-பரஸ்வரூபத்திற்போலவே வியூஹ விபவாவ தாரங்கள் முதலியவற்றிலும் தமக்கு ஒத்தபடி லக்ஷ்மியை அவதரிக்கச் செய்கிறவர். 'அவரது தேவதா ரூபத்தில் இவளும் தேவதாரூபமாகவும் அவரது மனுஷ் யாவ தாரத்தில் இவளும் மானிட வடிவமாகவும் அவரெடுக்கும் திரு மேனிகளுக்கெல்லாம் தக்கபடி தானும் திருமேனி எடுப்பவள்' என்பது ஸ்ரீவிஷ்ணு புராணம். (619) ச்ரேய: ஸ்ரீமான் - எல்லாப் புருஷார்த் தங்களுக்காகவும், எல்லாராலும் ஆச்ரயிக்கப்படத் தக்க பிராட்டியானவள், தம்மிடத்தில் எப்போதும் சேர்ந்திருக்கப் பெற்றவர். (620) லோகத்ரயாச்ரய: - ஜகந்மாதாவான பிராட் டியும் தாமுமாகத் தாய் தந்தைகள்போல் எல்லா உலகங்களுக்கும் ஆதரவாயிருப்பவர். 'பிராட்டியே! நீ எல்லா உலகங்களுக்கும் தாய்; தேவருக்கும் தேவரான பகவான் தந்தை' என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்திற் சொல்லியிருக்கிறது,'' (ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமபாஷ்யம்.)

(52) புரி - கட்டு; மாயை - பிரபஞ்சத்திற்குக் காரணமாயிருக் கின்ற மாயாதத்துவம்; மன்னித்து - பொறுத்து; பின்னை - இலக்குமி; கொழுநன் - நாயகன்.

(53) வெரூஉம் - அஞ்சும்; பேய் - பிசாசம்; பேயின் முலை யுண்ட - ''உழலையென்பின் பேய்ச்சிமுலையூடு அவளை உயி ருண்டான்'' (திருவாய்மொழி 5-8-11)

(54) ஐம்பொறி - பஞ்சேந்திரியம்.

(55) வேல் - ஆயுதப்பொது, சூலம்; அழல் - அக்நி, தாபம்; அருளாலிட்ட..................எனையாள் - ''தஞ்ச நற்றுணைவனை தவறிலாப் புகழான்றன்னைத், துஞ்சலினயனத்தைய சூட்டுதி மகுடமென்றான்.'' (144), ''விளைவினையறியும் வென்றிவீடண னென்றும்வீயா, அளவறுபெருமைச் செல்வமளித்தனையாயினைய, களவியலரக்கன்பின்னே தோன்றிய கடன்மைதீர, இளையவற் கவித்தமோலியென்னையுங்கவித்தியென்றான்.'' (145), ''அடிமை யிற் சிறந்தேனென்னாவயிர்ப்பொடுமச்சநீங்கித், தொடுகழற் செம் பொன்மௌலி சென்னியிற் சூட்டிக்கொண்டான்.'' (147) (இராமாவதாரம். உயுத்தகாண்டம். விபீடணனடைக்கலப்படலம்.)

(56) நிறீஇ - நிறுத்தி.

(57) வளை - சங்கு " பயிரிற், களைபோ லசுரரைக் காய்ந்தான் றன் கையில், வளை " (தேசிகமாலை. அமிருதரஞ்சனி. 5); ஆழி - சக்கரம். " ஆழியெழச்சங்கும்வில்லுமெழ " (திருவாய்மொழி 7-4-1); துலங்கு - பிரகாசிக்கும்.

(58) அளி - வண்டு; துற்று - உண்டு.

(59) புன்கண் - தரித்திரம், நோய், துன்பம்.

(60) பாங்கு - அழகு, உரிமை, நற்குணம்; பரிபூரணன் - எங்கு நிறைந்தோன், பரமாநந்தன்.

(61) துறத்தல் - திறத்தல், நீக்கல், வெறுத்துவிடுதல்; நல்லாய் - உத்தமனே, பேரறிஞனே.

(62) யாண்டு - எவ்விடம்; அலக்கண் - துன்பம்; கவல்வேன் - கவலைப்படுவேன்; தேண்டுதல் - தேடுதல் " வேண்டிய கலப்பை யாவும் விதியுளிமரபினோடு - தேண்டினனுய்த்து. " (கந்தபு. பிரமயா. 2); புலம்பல் - இரங்கல், வருந்தல்; ஈண்டுற்று - ஒன்று கூடி.

(63) போலி - ஒன்றுபோலொன்றிருத்தல்; பேணலர் - பகைவர். "பெருகிய நிதியுங்கொண்டார்பேணலாரென்னக்கேட்டான்" (ஞானவா. லீலை. 68); மகவு - மகன்; கற்று - கன்றையுடைய பசு; வன் - வலிமையான.

(64) சுழிதல் - திரும்புதல்; கோல் - கொம்பு; விழி - கண் "விழிமலர்ப்பூசனை" (காஞ்சிப். கடவுள்வாழ்த். 5); பழி - குற்றம், தீவினை, நிந்தை " ஒருவற்குயற்பாலதோறும் பழி " (வள். 40), " பாபமும் பழியும்பூண்டு படிக்கொரு பொறையாய் நின்றார் " (கந்தபு. ததீசியுத். 118)

(65) நார் - அன்பு. " நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக் குலத்தின்க ணையப்படும் " (திருக்குறள். ஒழிபியல். குடிமை. 9. " குலநலமுடையனாய் வருகின்றவன் கண்ணே ஈரமின்மையுளதாமாயின் அவனை அக்குலப்பிறப்பின்கண்ணே ஐயப்படும் உலகம். "); நாண் - " குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப் பரியு, நாணுடையான் கட்டே தெளிவு, " (திருக்குறள். தெரிந்து

தெளிதல். 2. "உயர்ந்தகுடியிற் பிறந்து குற்றங்களினின்று நீங்கி நமக்கு வடுவருங்கொலென்று அஞ்சாநிற்கும் நாணுடையவன் கண்ணதே அரசனது தெளிவு. நாண் - இழி தொழில்களின் மனஞ் செல்லாமை"); புவி - பூமி; நோ - "திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந், தறனல்ல செய்யாமை நன்று." (திருக்குறள். பொறை யுடைமை. 7. "செய்யத்தகாத கொடியவற்றைத் தன்கட் பிறர் செய்யினும் அவர்க்கு அதனால் வருந்துன்பத்திற்கு நொந்துதான் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று"); வீண் - பயனின்மை; விளிதல் - சாதல்.

(66) கால் - சக்கரம்.

(67) வீட்டி - அழித்து; கடம் - அவசியம் செயற்பாலது; கதி - வழி, ப்ரகாரம், உபாயம், பலன்; பரம்பரன் - ஸர்வஸ்மாத் பரன்

(68) மருந்து - அமுதம், இனிமை.

(69) வேசி - விலைமகள்; பரிந்து - துணிந்து; புரிந்திட்டேன் - செய்தேன்; நமன் - இயமன், நம்மவன்; கேசவன் - (23) "அழகிய கூந்தலையுடையவர்; க, அ, ஈச என்னப்படும் பிரம்மா, விஷ்ணு, மஹேச்வரர் என்னும் மும்மூர்த்திகளையும் தமது வசத்தி லுடையவர்; கேசியென்னும் அஸுரனை வதஞ்செய்தவர். கறுத் துச் சுருண்டு சேர்ந்து இணங்கியிருக்கும் அழகிய கூந்தல்களை யுடையவர்." (654) சூரியன் முதலானவர்களிடத்திலுள்ள கிரணங் களுக்கு உரியவர்; க:, அ, ஈச என்னப்படும் பிரம்ம விஷ்ணு சிவ சக்திகள் மூன்றுக்கும் இருப்பிடமானவர்; 'க: என்று ப்ரம்மா வுக்குப் பெயர். எல்லாப் பிராணிகளுக்கும் ஈசன் நான்; நாங்க ளிருவரும் உமது அம்சத்தில் உண்டானவர்கள்; ஆகையால் நீர் கேசவர் என்று பெயருடையவர்' என்பது ஹரிவம்சம். கிலேசங் களைப் போக்குபவராகிய கேசவர். 'இந்தப் பூலோகத்தில் மதுரை என்னும் பேருள்ள மஹாக்ஷேத்திரத்திலும் காசியிலும் இரண்டு ரூபங்களாக இருக்கிறார்' என்று சொல்லப்பட்ட அர்ச்சாவதார மாகிய கேசவர். 'க: - பிரம்மாவின் பெயர், ஈச: - எல்லாப் பிராணிகளுக்கும் ஈசன் நானே; நாங்களிருவரும் உமதுதேகத்தில் பிறந்தவர்கள்; ஆதலால் உமக்குக் கேசவர் என்று பெயர்' என்கிற

இது, ஹரிவம்சத்தில், வ்யாஸரே செய்த நிருக்தி.'' (ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமபாஷ்யம்.)''

(70) வலவன் - சமர்த்தன், திருமால், தேர்ப்பாகன், வெற்றியாளன்; பொல்லாங்கு - குற்றம், கேடு; வில் - காந்தி, ஒளி.

(71) செறிவித்து - அடைவித்து; உழல்வித்து - துன்புறுத்தி; மீது - மேல்.

(72) எண்ணில - கணக்கிலடங்காது; ஈறில - அந்தமுமில்லை; துறு - நெருக்கம்; நேர்குவை - அருளுவை.

(73) துன்னி - நெருங்கி, சேர்ந்து ; மன்னி - நிலைத்து ; பொருதுதல் - இணைத்தல், பொருந்துதல், போர் செய்தல் ; வரைதல் - கொள்ளல் ; முடியாமை - முற்றுமை.

(74) குழு - குழாம், கூட்டம் ; மீ - மேலாகிய பண்பு, மிகுதி.

(75) குன்றன்... தலைவா - ''குன்றுகுடையா எடுத்தாய் குணம் போற்றி.'' (திருப்பாவை. 28).

(76) துங்கம் - உயர்வு ; கனகாசுரன் - '' பொல்லா அரக்கன் '' (திருப்பாவை. 13); குடர்தங்கக்களமாலை தரித்த நரசிங்கப் பெருமாள் - '' போரார் நெடுவேலோன் பொன் பெயரோனுகத்தை, கூரார்ந்த வள்ளுகிரால் கீண்டு - குடல்மாலை (43), சீரார் திருமார்பின் மேல் கட்டி செங்குருதி, சோராக்கிடந்தானைக் குங்குமத்தோள் கொட்டி, (44) ஆராவெழுந்தான் அரியுருவாய். (45) (இயற்பா. சிறிய திருமடல்.) '' சுடர்விரி பசும்பொற் றூணிற் றோன்றியோர் மதலைக்காக, விடர்செய்தா னவன்றன் மார்பின் றிடந்திழி குருதி யுண்டே, குடர்கள மாலை சூடுங் கோளரீ நலிதீங் கிற்குப், படையெடா யல்லிக் கேணிப் பார்த்தசாரதியம் மானே. '' (பார்த்தசாரதி பதம்புனைபாமாலை. 44. திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க வெளியீடு 27) என இவ்வாசிரியர் பாடுதல் காண்க.

(77) தாய்மாமன் - கம்ஸன் ; இறுமாந்து - கர்வப்பட்டு.

(78) துணி - முயலும், நிச்சயம், மனங்கலங்காமை ; நீலன் - '' சாலவே தயிர்பால் வெண்ணெய் தான்கவர்ந் துண்டு பின்னுங், கோலநாண் மலரின் கூந்தற் கோவிமர் குழாங்கண் காண, நீலனு

நெயிற் கையிட்ட நின்மலா.'' (பார்த்தசாரதி பதம்புனைபா மாலை. 50)

(79) துகில் - சீலை ; அலர் - பழிதூற்றுதல்.

(80) ககனத்தரு - பாரிஜாதம்.

(81) திட்டு - வசை, வைதல்; இடைச்சி...யுண்டனை - ''மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறலடிகள், மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரலிடையாப் புண்டு, எத்திறம் ! உரலினோடு இணைந்திருந்தேங்கிய எளிவே.'' (திருவாய் மொழி 1-3-1)

(82) இராதை - கண்ணன் தேவியரில் ஒருத்தி.

(83) துயர் - கிலேசம், துன்பம். ''துயரறு சுடரடிதொழு தெழு என் மனனே.'' (திருவாய்மொழி 1-1-1); போழ் - பிளவு, வகிர் ; விழி - கண் ; மயல் - ஆசை, மயக்கி ; வாள்விழியார் மயலிற் புகவும் - ''மங்கையார் மயலாம் பொன்மீ மாமிசங் கவர்ந்து கூற்றி, னங்கையாந் தூண்டிற் சிக்கி யாருயி ரிழக்கின் றேனை.'' (பார்த்தசாரதி பதம்புனைபாமாலை. 43)

(84) இவரித்தல் - எதிர்த்தல் ; கணம் - க்ஷணம்.

(85) பாழாமென்மனம் - ''பாழானவென்மனம் குவியவொரு தந்திரம் பண்ணுவதுனக் கருமையோ.'' (தாயுமானவர்); பாழ் - அழிவு, கெடுதி, சூநியம், வறுமை.

(86) வதிதல் - தங்கல் ; அச்சுதன். ''(101) அச்யுத :- (ச. பா.) தம் ஸ்வரூபத்திற்குள்ள மகிமை முக்காலங்களிலும் நீங்காமலிருப்பவர். (ப. பா.) தம்மையடைந்தவர்களை விட்டு நீங்காதவர் ; அடைந்தவர்களுக்குத் தவறுதல் வராமலிருக்கும்படி செய்பவர். (319) அச்யுத :- (ச. பா.) ஷட்பாவ விகாரங்களற்றவர். (பாவ விகாரங்களாவன : - மறைந்திருத்தல், வெளிவருதல், ஓங்கி வளர்தல், வளர்தலின் முடிவையடைதல், தேய ஆரம்பித்தல், முற்றும் தேய்ந்துவிடல் என்பன. பொருள்களுக்கு இயற்கையாக வுள்ளவை இவ் வாறுவிதவிகாரங்கள். 'ஜாயதே, அஸ்தி, வர்த்ததே, விவரிணபதே, அபக்ஷீயதே, நச்யதி' என்பது யாஸ்கர் நிருக்தி) (ப. பா.) பிரம்மாதி தேவர்களைப்போல அவதரிப்பவ

ராயினும் அவர்களைப் போலன்றித் தந்நிலைதவருமலிருப்பவர். (557) (பா. பா.) வ்யூஹாவதாரத்திலும் தமது ஸ்தானத்திலிருந்து வழுவாதவர். 'ப்ரம்மா, இந்திரன், வருணன் முதலானவர்கள் பிறப்பையும் இறப்பையும் அடைந்தாலும் நீர் உம்மிடத்தைவிட்டு நழுவாமையினல் நீர் அச்சுதர் என்று சொல்லப்படுகிறீர்.' என்று சொல்லப்பட்டிருக்கிறது.'' (ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமபாஷ்யம்.)

(87) கார்வண - ''கார்திகழ்மேனி'' (பார்த்தசாரதி பதம் புனைபாமாலை. 12.) ''கார்முகில் வண்ணனே'' (ஷை. 36); கோள் - குற்றம், துன்பம், வலிமை, கொள்கை; பதுமம் - தாமரை.

(88) பணி - வேலை, படத்தையுடைய பாம்பு, அடிமை, ஆபரணம்; நயம் - இன்பம், இனிமை, பயன்.

(89) புங்கவன் - சிரேட்டன்; எழிற்பொன்னைத் திருமார் பணியும் புங்கவன் - ''செந்திருமார்பனே'' (பார்த்தசாரதி பதம் புனைபாமாலை. 40), ''பதுமைமார் வல்லிக்கேணிப் பார்த்தசாரதி யம்மானே.'' (ஷை. 51); வாணன் - வாழ்நன் (மரூஉ), வாழ்வோன்.

(90) பெட்பு - விருப்பம்; மூப்பு - முதுமை.

(91) பொய் - அசத்தியம், இல்லதுகூறல்; புலை - அசுத்தம், புன்மை, தாழ்வு; புகல - சொல்ல; புகுவாய் - தொடங்குவாய்; ஆழியன் - சக்கரக்கையன்; நமன் - இயமன்.

(92) ஆரணம் - வேதம்; வாரணம் - யானை.

(93) கழல் - திருவடி; தெருள் - தெளிந்த அறிவு, விவேகம்.

(94) கற்றுப்பயனென்...அடிசேர்ந்திலையே,—''கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ னற்ரு டொழாஅ ரெனின்.'' (திருக்குறள். கடவுள் வாழ்த்து. 2); வெற்று - பயனில்லாத; பதர் - அறிவீனன். ''மருந்தரிதாற் பெற்றும் வயிற்றுட் பெய்யாது - பரிந்தளற்றுட் பெய்த பதர்.'' (இன்னிசை. 14. பொரு. 10)

(95) குணக்கடல் - ''தீதற்ற நற்குணப் பாற்கடற் ருமரைச் செம்மலர்மேன், மாதுற்ற மார்பன்.'' (தேசிகமாலை. கீதார்த்த சங்கிரகம். 21); வீடாதி நல்வேங்கட வெற்பு - ''திருவேங்கட

நங்கட்கு, சமன்கொள் வீடு தருங்குன்றமே'' (திருவாய்மொழி 3-3-7)

(96) புரிவாயறமே - ''அறஞ்செயவிரும்பு''; வாய்மை - மெய்மை.

(97) திரணம் - துரும்பு, புல், அற்பம்.

(98) முதலின் முதலே - ''முதலாவார் மூவரே அம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர்வண்ணனன்'' (இயற்பா. முதல் திருவந்தாதி. 15)

(99) பொல்லாது - ஆகாதது, ''ஈண்டுநின்றேகல் பொல்லாது ''(இராமாவதாரம். தைலமாட் 19)

(100) வழுவை - யானை ; வனிதை - பெண் ; நுகர் - உண்.

(101) வழி - மார்க்கம்.

(102) கதி - உபாயம், பலன், வழி, ப்ரகாரம்.

(103) மேதாவியர் - அறிஞர்.

(104) தேவேசன் - தேவதேவன்; தேசிகன் - ஆசாரியன், அழகன், குரு.

(105) முறை - அடைவு, ஒழுக்கம், வகை, வரிசை ; போக்கு - நடை, பழக்கம், வழி.

(106) விதி - செய்தொழில்.

(107) மாதவர் - திருமால். ''(73) மாதவ : - ஸ்ரீதேவியின் கணவர். திருமகள் தம்மைவிட்டு என்றும் அகலாமலிருக்கப் பெற்றவர். ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறு குணங்களும் சேர்ந்து உருவெடுத்திருப்பவளும், பகவானுடைய எல்லாச் சக்திகளுக்கும் தலைமையாக உலகங்களை நடத்தும் பராசக்தியும், பகவானுடைய மற்றச் சக்திகளை நடத்திக் கொண்டு சராசரங்கள் அடங்கிய உலகமனைத்தையும் வ்யாபித்திருப்பதனால் அனந்தையென்று சொல்லப்படுகிறவளும், தயா மூர்த்தியுமாகிய திருமகளுக்கும் ஸ்வாமி. (169) மாதவ : - 'மா' என்னப்படும் பரமாத்ம ஞானத்தைக் கொடுப்பவர் ; மௌனம், த்யானம், யோகம் இம் மூன்றும் பொருந்தினவர். (741) மாதவ: -

லக்ஷ்மிக்குக் கணவர். உலகங்களுக்கு லக்ஷ்மி தாயும் தாம் தந்தையுமாக உறவாயிருப்பவர் என்பது ; மதுவென்னும் யாதவ குலத்தில் அவதரித்தவர் ; மௌனம், தியானம், யோகம் இம் மூன்றும் உடையவர். 'பாரதனே ! மௌனத்திலும் தியானத் திலும், யோகத்திலும் நான் மாதவனுகிறேன்' என்று ஸ்ரீ மஹாபாரதம் உத்தியோக பர்வத்தில் சொல்லப்படுகிறது. (ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்.)

(108) பை - பாம்பின்படம் ; அரவு - பாம்பு ; பணம் - பாம்பு, பாம்பின்படம் ; மணிவண்ணன் - "மாலே ! மணிவண்ணு!" (திருப்பாவை. 26)

(109) சூழல் - வட்ட வடிவமான பூமி.

(110) உவணத்திறை-கருடவாஹனன், "புள்ளரையன் கோ". (திருப்பாவை. 6)

(111) மேதினி - பூமி ; விண் - தேவலோகம் ; சேவடி - சிறந்த திருவடி. "மல்லாண்டதிண் தோள் மணிவண்ணு ! உன், சேவடி செவ்விதிருக்காப்பு. (திருப்பல்லாண்டு. 1)

வெண்பா.

ஆசான் - ஆசிரியர் ; கோவை - ஹாரம், கோத்தமாலே ; நோக்கு - கருது.

| இலக்கம். | வெளியீட்டின் பெயர். | வள்ளலார் பெயர். |
|---|---|---|
| 17. | புகழ் மாலை. | தமிழன்பர். |
| 18. | கம்பர் தருங் கண்ணன். | ஸ்ரீமான் பி. சேஷாத்ரி அய்யங்கார் அவர்கள். |
| 19. | முக்கோற்பகவர். | ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்கள். |
| 20. | ஸ்ரீ வீரராகவ மாலை. | ஸ்ரீமான் ரா. கிருஷ்ணய்யங்கார் அவர்கள். |
| 21. | திருமாமகள் மாலை. | திருப்புகழ் மணி பிரும்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள். |
| 22. | திருநரசிங்கர் மாலை. | ஸ்ரீமான் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள். |
| 23. | அழகியசிங்கர் மாலை. | ஸ்ரீமான் எம். பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 24. | பொய்கையார் மாலை. | ஸ்ரீமான் மங்கலம் இராமாநுஜய்யங்கார் அவர்கள். |
| 25. | ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலை. | சிறந்த தேசிக பக்தர். |
| 26. | வாரணமாயிரமாலை. | ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள். |
| 27. | ஸ்ரீ பார்த்தசாரதியம்மான் பாமாலை. | ஸ்ரீமான் பி. எஸ். கோவிந்தராஜய்யங்கார் அவர்கள். |
| 28. | தமிழரேத்தும் ஸ்ரீமணவாளமாமுனிகள். | சந்தமிகுசெந்தமிழ்ச் செல்வர். |
| 29. | திருச்சின்னமாலை. | ஸ்ரீமான் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள். |
| 30. | திருவேங்கடவர்மாலை. | நான்மறையாளர்கள். |

பெறும் இடம் : **15, கணபதி முதலி தெரு, திருவல்லிக்கேணி.**

† இவ்வடையாள மிடப்பெற்றவை இப்போது கைவசமில்லை.